www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

நவ.05–11,1995

# வாரமலர் தினமுரசு

THINAMURASU S LANKA'S ATIONAL TAMIL WEEKLY முரசு 126



## அதிரடித் தாக்குதலும்

## இரகசியத் திட்டங்களும்



இலக்கிய நயம்



நீங்கள் எப்படி? சுய ஆய்வு

ஜில் ஜில் சோனாலி





மாறுகிறார் மாடோனா

ஸ்போர்ட்ஸ்

## கடத்தல் நாடகம்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## அக்கினிக் குஞ்சு

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
யுத்தம் திணித்துவரும்
சுமைகளை
நாடு முழுவதுமே
சுமந்துகொண்டிருக்கிறது.

சுமைகளில் சில
நேரடியானவை.
வேறுசில மறைமுகமானவை.

சமீபத்தில் தலைநகரில்
நேர்ந்த அனர்த்தம்
எரிபொருள் தேடி மக்களை
நீண்ட கியூவில் காக்கவைத்தது.
நூற்றுக்கணக்கான மக்களை
தலைநகரில் இடம்பெயரச் செய்தது.

யுத்தத்தின் நேரடி நெருக்கடி
தலைநகர்வரை-
விரிந்து பரவிவருவதை
கட்டியம் கூறுவது போலவே
அக்காட்சிகள் அமைந்தன.

விபரீதம் ஏற்பட்டபோதும்
எதிர்க்கட்சித் தலைவர்
பொறுப்போடு வெளியிட்ட
செய்தி
சகல தரப்பாலும்
பாராட்டப்படுகிறது.
பாராட்டத்தான் வேண்டும்.
எரியும் நெருப்பில்
குளிர்காய விரும்பாத
எதிர்க்கட்சித் தலைவரின்
அரசியல் நேர்மையை
வரவேற்கலாம்.

அதேசமயத்தில்,
ஐக்கிய தேசியக் கட்சியில்
உள்ளவர்கள் சிலர்
பேசிவரும் பேச்சுக்களில்
அரசியல்லாப நொடி
அதிகமாகவே வீசவும் செய்கிறது.

தாம் ஆட்சியில் இருந்தால்
தலைநகர நிலவரம்-
இப்படிக்கவலைக்கிடமாகியிருக்காது
என்று சொல்லி மார் தட்டுகிறார்கள்.

அரசாங்கத்தின் திறமையின்மை
யுத்தம் பரவக் காரணம்
அதுவும் கொழும்புவரை
தலைநீட்டக் காரணம் என்று
அவர்கள் அறிவிக்கிறார்கள்.

ஆக, இப்போது கூட
அவர்களின் கண்கள் திறக்கவில்லை.
தீ பரவக்காரணம்
தீயணைப்பாளர்களின் திறமையின்மை
என்று கூறுகிறார்களே தவிர,
தீ தோன்றிப் பரவக் காரணம்
என்னவென்று கண்டறியவில்லை.

அக்கினிக் குஞ்சொன்று
காட்டிடைப் பொந்தில் இருக்கிறது.
அது உள்ளவரை
காடெறியத்தானே செய்யும்!

அந்த அக்கினிக் குஞ்சுதான்
தேசிய இனப்பிரச்சனை!
குஞ்சு தானே என்று
எவரெல்லாம் அலட்சியமாக
குந்தியிருக்கிறார்களோ
அவர்களெல்லாம்
தீ பரவியதற்கு பொறுப்பாவர்.

சிறு பொறியாய் தோன்றி
காட்டுத்தீயாய் மாறும்வரை
கண்திறக்காமல் இருந்தவர்கள்
என்று பட்டியலிட்டால்
எந்த ஆட்சியாளர்களும் விதிவிலக்கல்ல!

கடந்த காலத்தை விடுங்கள்
நிகழ்காலத்திலாவது
நிகழ்வுகளின் மூலத்தை
கண்டறிய கண் திறக்கலாமே!

யுத்தத்தைக் கட்டுப்படுத்துவது
ஆள்வோரின் போர் நடத்தும்
திறமைசார்ந்த விடயமல்ல.
அக்கினிக் குஞ்சாகவிருந்து
காடெறியக் காரணமான
இனப்பிரச்சனைக்கு
தீர்வுகாண்பதில் பொறுப்பை
வெளிப்படுத்தும்
கடமை சார்ந்த விடயமாகும்!

அந்தக் கடமையை
ஐ.தே.கட்சியும்
கைதவற விட்டிருந்தது.
சி.ல.சு.கட்சியும்
கவனிக்காமல் விட்டிருந்தது.

எனவே- இனியாகிலும்
இருதரப்பும்-தங்களது
போர் தொடர்பான திறமைகள்
தொடர்பாக ஆராய்வதை நிறுத்தி
போருக்கு காரணமான
பிரச்சனைக்கு தீர்வுகாண்பதில்
கடமையைச் செய்ய வேண்டும்!

அந்தக் கடமைதான்
காட்டுத்தீயை அணைக்கும்.

□ □

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## விதவைகள் பற்றிய விவிலியம்

பெண்கள் விடுதலைபற்றி எவ்வளவுதான் பேசினாலும் தமிழ்ச் சமூகத்தில் விதவைகளின் நிலை மோசமாகவே இருந்துவருகிறது. விவிலியத்தில் விதவைகள் பற்றிக் கூறப்பட்டிருப்பவைகளைச் சற்று சிந்தித்துப் பார்த்தல் நன்று. விதவைகளின் நல்வாழ்வுக்கான நற்கருத்துக்களைத்தான் அங்கு காணக்கூடியதாய் இருக்கின்றது.

"விதவைகளையும் திக்கற்ற பிள்ளைகளையும் ஒடுக்காமல் இருப்பீர்களாக" (யாத்:22:22) ஆம், விதவைகளையும் அவர்களின் பிள்ளைகளையும் சமூகம் வெறுத்தொதுக்காமல் இருக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

விதவைகளின் விடுதலையை விவிலியம் விளக்கமாகக் கூறுகின்றது. கணவனை இழந்தால் பெண்ணானவள் என்ன செய்யலாம் என்று விளக்கமான முறையில் கூறப்படுகின்றது.

"மனைவியானவள் தன் புருஷன் உயிரோடிருக்குங் காலமளவும் பிரமாணத்தினால் கட்டப்பட்டிருக்கிறாள்; தன் புருஷன் மரித்த பின்பு தனக்கு இஷ்டமானவனாயும், கர்த்தருக்கு உட்பட்டவனாயும் இருக்கின்ற எவனையாகிலும் விவாகம் பண்ணிக் கொள்ள விடுதலையாகிறாள்". (1 கொரி:7:39) ஆக, கைம்பெண் மறுமணம் செய்து கொள்வதைக் கட்டுப்படுத்தவில்லை வேதாகமம். தனக்கு இஷ்டமானவனைத் தேர்ந்தெடுக்க சுதந்திரம் வழங்கப்படுகின்றது. ஆனால் அவள் தேர்ந்தெடுப்பவன் கர்த்தருக்குட்பட்டவனாய் இருக்கவேண்டும்.

ஆன்மீக வாழ்வில் ஒரு பெண் தொடர்ந்து செயற்பட இவ்வாறான கட்டுப்பாட்டோடமைந்த சுதந்திரம் அவசியமே.

ஏ.பி.வி.கோமல்

## ஆன்மீகம்



## உன் சிந்தனைக்கு

1. எந்தச் சந்தர்ப்பத்திலும் அதான், (பாங்கு) ஒலி உன் காதிற்பட்டு விட்டால், உடனே தொழுகைக்குப் போய்விடு.

2. திருக்குர்ஆனை ஓது; நன்கு விளங்கு; அல்லது மற்றார் அப்படிச் செய்வதைக் காதாரக் கேள். அதுவும் முடியாவிட்டால் அல்லாஹ்வை சதா திக்கு செய். உன் நேரத்தில் கடுகளவேனும் வீணாக்காதே.

3. தெளிவான பாஷையில் பேசி உன் உள்ளக்கிடக்கையை வெளியிட முயற்சிசெய்.

4. எந்த விஷயத்திலும் எச்சந்தர்ப்பத்திலும் அதிகம் தர்க்கிக்காதே; அது நன்மைதராது.

5. அதிகம் சிரிக்காதே! அல்லாஹ்வோடு தொடர்புகொண்ட உள்ளம் கண்ணியமாகத்தான் இருக்கும்.

6. பரிகாசம் பண்ணாதே! தியாகம் செய்யும் சமூகம் காரியத்தில்தான் கண்ணாயிருக்கும்.

7. தேவைக்கதிகம் சப்தமிட்டுப் பேசாதே! அது பிறரை துன்புறுத்தும் விவகாரமும் கூட.

8. மற்றார் பற்றி புறம் பேசாதே! எதையும் கிண்டல் பண்ணாதே! நல்லதை அன்றிப் பேசாதே.

9. நீ சந்திக்கும் சோதரர்களோடு அறிமுகம் கொள்; நம் பிரச்சாரத்தின் அடிப்படைகளில் அதுவும் ஒன்று.

10. உன் கடமைகள் அதிகம்; நேரமோ கொஞ்சம், பிறருக்கும் இவைகளைச் சொல்ல உதவி செய்.

ஆர்.லஸீறா, ஹொறவப்பொத்தானை.

## கவிதைப்போட்டி இல: 123

பரிசுக்குரிய கவி

### புதுத் திட்டமோ

எட்டுத் திசையிலும்
இனவாதப் போர்
விட்டுக் கொடுக்காமல்
விண்பழிகள் செய்வதனால்
ஒட்டுத் திண்ணையிலே
உட்கார்ந்து புகைபிடித்து
எட்டாத கனவுலகில்
இடம்பிடிக்கும் திட்டமிதோ?

ச.மகாலிங்கம்-வெலிமடை.

## கவிதைப் போட்டி இல-126



## இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்



### சிருங்காரம்

சிகரட் புகை வளையம்
சிருங்காரம் காட்டுவது
அகத்தே சுவாசத்தில்
ஆர்ப்பரிக்கும்
காலனுக்கே!

செல்வி.சிரின்சிபாயா
முகமட்-ஏறாவூர்-03.

### புகை வட்டம்

பிடித்து
பொழுதை கழிக்கும்
உனக்கு
வாழ்க்கை
வட்டம்
சுறுகியதே.

செல்வி.புவனேஸ்வரி-ஆறுமுகம்

### துயரினை நீக்கிடுமோ

போரினால் மாண்டு போன
தீயினால் வெந்த உடல்
துயரினை நீக்கிடுமோ-இவன்
நாவினால் விட்ட புகை.

தெ.லோஜனா-கொழும்பு 4

### குகை

வாயில் வெளிவருவது புகை
புகையும் ஒருவகை சுவை
இளமைக்கு அதுவும் பகை
புகையது, புற்றுநோயின் குகை

செல்வி. நிஹானா அன்வர்-ஷா-கம்பளை.

### இதையும் கவனி!

ஊதித்தள்ளும்
புகையுடன்-உன்
உயிர் மூச்சின்
நிமிஷங்களும்
உதிர்ந்து போகிறதே!

திருமலைத்தீபன்.

### தூது

உயரப்பற; உயரப்பற வளிக்குமிழே
நீ உயரப்பற; உயரப்பறவே!
வானைக் கிழித்து; வளியைக்கிழித்து
வானகம் சென்று கடவுளைக் கண்டு
தமிழர் எங்கள் நிலையினை சொல்ல
உயரப்பற உயரப்பற வளிக்குமிழே!

ம.துஷ்யந்தன்-மட்டக்களப்பு.

### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 11.11.1995

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 124
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

### சோலை புகையுது

புன்னகையின் சோலையாம்.
வாயை
புகை(யிலை)யின் சூலையாக்கும்
காளை

எஸ்.ராஜ்கமல்-திஹாரிய.

### அவலம்

உயிர் உறிஞ்சும் புகையில்
உருவெடுக்கும் வளையம்!
அருகிருப்போர் வாழ்வும்
அருகிவிடும் அவலம்!
அற்பசுகம் தேடி
அவனியெலாம் ம[illegible]ம்!

ஏ.அஹ்மது ஜுனை[illegible]ாதியார் வீதி

### எச்சரிக்கை!

மனித வாழ்விற்குள் 'மூன்று வட்டம்
பிறப்பைக் குறிக்கும் முதல் வட்டம்
வாழ்வைக் குறிக்கும் நடு வட்டம்!
இறப்பைக் குறிக்கும் கடை வட்டம்'!
உடலில் தங்கி உயிர்வாழ
உகந்தது அல்ல 'புகை, தம்பி!
நூறு வருடம் வாழப்பார்!
நொடிக்குள் 'சா,கப் புகைக்காதே!

பாண்டியூர்-பொன் நவநீதன்.

### புகைந்(த்) தால் கண்ணீர்

விட்டுக் கொண்டே கேட்டேன்,
'எப்படி மச்சான் இருக்கு?'
முன்னிருந்து சொன்னான்,
'வட்டம் உன் கழுத்தை சுற்றியுள்ள
கயிறுபோல..'
-எனக்குப் புற்றுநோயாம்.

செ.ஜெயந்தன்-கண்டி.

### முதலும் முடிவும்!

முதலில்
இழுக்க இழுக்க
இன்பந்தான்
முடிவில்
உடல் வலிக்க வலிக்க
மரணந்தான்!

ந.ரதீஸ்வரன்-தம்பிலுவில்-02

### தணிக்கை

தணிக்கைகள் எதுவுமற்ற
தனிமனித சுதந்திரமோ?

அமுதா-மகாலிங்கசிவம்-மட்/கல்லடி

### பகை..!

உறவுக்கு பகை கடன்....!
உனக்குப் பகை புகை...!

பஸீனா நஸீர்-மட்டக்களப்பு

### காதலி

விட்டத்தை பார்த்து
வட்டத்தை விடும்
வாலிப வட்டத்தின்
வசந்த விளையாட்டுகளின்
கள்ளக் காதலி

க.தேவிகா-பொகவந்தலாவ

## வாசகர் சாலை



### தலைநகரில் கொமாண்டோக்கள்?

நாரதரின் கேள்விக்குறி ஆச்சரியக்குறி ஆகிவிட்டதே! 21ம் நூற்றாண்டை எண்ணி கவலைப்படுவோம்.

சுபாவரன்-கண்டி

□□

தணிக்கை வந்தது- காரம் குறையுமோ என்று நினைத்தோம். நாரதரும், ராஜதந்திரியாரும் தமது பாணியில் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

கே.சோமகாந்தன்-மட்டக்களப்பு.

□□

தலைநகரில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை நாடு முழுவதுமே வேறு மாதிரிப் பேசிக் கொண்டிருக்க முரசு மட்டுமே உண்மை சொல்லியிருந்தது. கணிப்புக்கள் பிரமாதம்.

எல்.எம்.சபருள்ளா-வவுனியா

□□

### கார்லோஸ் கலக்குகிறார்

இராமாயணத் தொடர் சூப்பர். கையோடு பரிசையும் எடுத்து வந்தமைக்கு நன்றி. 'கார்லோஸ்' தொடர் வெகு அருமை.

ஸலீம் மு.கதாபி-கெக்குணகொல்ல.

□□

'கார்லோஸ்' தனியாகச் சாதித்த சாகசங்கள் பற்றி முன்னரும் கேள்விப் பட்டிருந்தேன். உண்மையோ என்று சந்தேகப் பட்டேன். ரசிகன் சந்தேகத்தைப் போக்கி விடுகிறார்.

எம்.அருமைநாயகம்-திருக்கோணமலை.

□□

வாராவாரம் கார்லோஸ் கலக்குகிறார். எதிரிகளுக்கு மட்டுமல்லாமல் பெண்களுக்கும் கார்லோஸ் குறிவைக்கிறாரே. சபலம்-சாகசம் என்பதின் கலவைதான் கார்லோஸோ?

ஏ.சிவக்குமார்-கண்டி.

"சினிவிசிட்"டில் ஷொட்டான 'கிளிக்'கள் ஒவ்வொன்றும் படுதிகிலில் மாட்டிவிடுகின்றன! ஏற்கனவே ஜில்! ஜில்ல்ல்லுங்க! நீங்க வேற!!

எம்.எம்.ஸன்பர், கிண்ணியா-06.

மடல் அனுப்பியவர்களில் இடமுள்ளவரை பெயர் பதிவு செய்யப்பட்டவர்கள்:
திருமதி.ஜெ.ஜெகதீஸ்வரி-திருக்கோணமலை.
ஏ.எச்.ராவ்ன் முகமட்-ஏத்தாலை.
பி.அபூபக்கர்-கல்லாவ
எம்.எல்.எம்.சர்ப்தீன்-அட்டாளச்சேனை 3
ஜே.மொஹமட் பாரிஸ்-நுவெரலியா
செல்வி ஆர்.தமிழினி-வேக்வீதி, மட்டக்களப்பு
எஸ்.விஜயன்-அக்கரைப்பற்று-07
கோகிலன், ராதமணி-தெமட்டகொடை
ஸ்ரீ.நந்தகுமார்-பெல்மதுளை
சர்னா பாரூக்-தெல்தெனிய
கே.தேவன்-சம்மாந்துறை
க.உதயகுமார்-கல்லடி, மட்டக்களப்பு.
ம.தவநேசன்-கவிர்லர்லாந்து.
கு.சந்திரக்குமார் மொன்றியல்-கனடா.
றினோஸா-வில்மியா-லாமிலா-பேருவளை.
ஜவானி றஹ்புள்ளா-இப்பாகமுவ.
சாஜுக்கமீரு-கிண்ணியா-06
எம்.எச்.எம் ஹரிஸ்-புத்தளம்.
எஸ்.நிப்லா உவைஸ்-தோப்பூர்.
வே.சுந்தரமூர்த்தி-கந்துடா.
எம்.எம்.லிங்கசலிங்கம்-தலவாக்கலை.

### குற்றம்

சரவணக்குமாருக்கு ஏதாவது நடந்துவிட்டால் குற்றம் சுமத்தப்பட வேண்டியவர் பட்டுக்கோட்டை பிரபாகர்தான்.

செல்வி கே.சிவமலர்-நுவரெலியா

கண்ணபிரான் சரியான ஜொள்ளுப் பார்ட்டியாக இருப்பார் போலிருக்கிறது. அந்த வெள்ளைக்காரப் பெண் குட்டியைக் கண்டு வழிகிறாரே!

ச.நந்தகுமார்-கொழும்பு 11

பட்டுக்கோட்டையாரின் எழுத்து நடை வெகு அலட்சியமாக துள்ளிப் போகிறது. தயவு செய்து சரவணக்குமாரைக் காப்பாற்றுங்கள்.

பா.சியாமளா-மூதூர்

### இராமாயணவசம்

மகாபாரதத்தில் நம்மை மூழ்கவைத்த இராஜகுமாரன், இராமயணத்தின் பக்கமாக நம்மைத் திருப்பிவிட்டார். இப்போது நாம் இராமாயணவசம்.

கு.மகேந்திரன்-கோட்டைக்கல்லாறு.

புராணக்கதைகளில் பல விமர்சனங்களுக்கு உள்ளாக வேண்டியவை. ஏற்க முடியாத கருத்துக்களையும் உள்ளடக்கமாக வைத்திருக்கின்றன. ஆயினும் அவற்றின் இலக்கியச் சுவையை நுகருவது இன்பம்தான். இராமாயமும் அப்படித்தான்.

கா.சிதம்பரநாதன்-சுவிஸர்லாந்து.



படிப்பகம்

www.padippakam.com

# அனைவரும் ஆயுதம் ஏந்த வருமாறு அழைப்பு!

# யாழ் குடாநாட்டில் புலிகளது நிலைகள் இடமாற்றம்!

## கோவில்களில் தஞ்சமடைய மக்கள் தயாராகின்றனர்

(யாழ் நிருபர் வர்மா)

யாழ் குடாநாட்டின் மத்திய பகுதியை நோக்கி படையினர் முன்னேற முயல்வதால் கடும் சமர் ஏற்பட்டுள்ளது. படையினர் நிலை கொண்டுள்ள பகுதிகளுக்குள் ஊடுருவிச் செல்ல முடியாமையால் 'உள்ளே வரவிட்டுத் தாக்கும்' நடவடிக்கையில் புலிகள் ஈடுபடமுடியாமல் உள்ளது. அதனால் நீர்வேலியை அடுத்து படையினரின் முன்னேற்றத்தை தடுக்கப் புலிகள் தமது பலத்தைப் பிரயோகித்து வருகின்றனர்.

### அவசர நிலை

யாழ் குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலையை அடுத்து புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ் செல்வன் ஒரு அறிக்கை விடுத்துள்ளார்.

யாழ் குடாநாட்டு மக்கள் அனைவரும் ஆயுதபாணிகளாக வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்துள்ளார். யாழ் குடாநாட்டில் அவசரகால நிலமை ஏற்பட்டுள்ளது. மக்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று அவரது அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

யாழ்ப்பாண நகரை தக்கவைத்துக் கொள்ள புலிகள் அமைப்பினர் தமது சகல பலத்தையும் ஒன்றுதிரட்டி பலத்த சமரில் ஈடுபடலாம் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதே சமயம் யாழ்ப்பாணத்தின் மத்திய பகுதியில் இருந்த தமது முக்கிய நிலைகளை தென்மராட்சி நோக்கி புலிகள் இடம் மாற்றியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

### ஒலிபரப்பில்லை

'புலிகளின் குரல்' வானொலி நிலையமும் இடம்மாற்றப்பட்டுள்ளது. அதனால் கடந்த ஒரு வார காலமாக 'புலிகளின் குரல்' ஒலிபரப்பாகவில்லை.

நீர்வேலியில் நிலத்திற்கு கீழே அமைக்கப் பட்டிருந்த புலிகளது நிலையும்,நிலத்திற்கு கீழ் இருந்த புலிகளின் வைத்தியசாலையும் இடம்மாற்றப்பட்டுள்ளன.

இதேவேளை யாழ் நகரில் உள்ள மக்கள் பீதியடைந்த நிலையில் உள்ளனர். நகருக்குள் மோதல்கள் ஆரம்பித்தால் அருகிலுள்ள கோவில்களில் தஞ்சமடையத் தீர்மானித்துள்ளனர். வெளியேறிச் செல்வதை விட அங்கேயே மோதல் முடியும் வரை தங்கியிருக்கலாம் என்று நினைக்கிறார்கள்.

ஏற்கனவே இடம்பெயர்ந்த மக்கள் தென்மராட்சிப் பகுதியில் நிறைந்துள்ளதும், அங்கு நிலவும் இடப்பற்றாக்குறையும் மேலும் அங்கு செல்ல முடியாது என்ற நிலையைத் தோற்றுவித்துள்ளன.

எனினும்,ஒரு குறிப்பிட்ட தொகை மக்கள் தென்மராட்சி நோக்கியும், யாழ்ப்பாணத்திற்குள் மோதல் இடம்பெறாது என்று கருதப் படும் பகுதிகள் நோக்கியும் சென்று கொண்டிருக்கின்றனர்.

### அழைப்பு

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் புலிகளது தினசரியான ஈழநாதம் பத்திரிகையில் புலிகளது ஆஸ்தான கவிஞர் என்றழைக்கப்படும் புதுவை இரத்தினதுரை ஒரு கவிதை எழுதியுள்ளார்.

"எழுக தம்பி, எழுக தங்கச்சி. பொழுது விடிகிறது போர்க்களத்துக்கு ஏகிடுவீர்" என்று தலைப்பிட்டு அக் கவிதை எழுதப் பட்டுள்ளது.

# "நடுநிலை தவறிவிட்டது கனடிய அரசு!" புலிகளது சர்வதேச செயலகம் கண்டனம்!

கனடாவில் உலகத் தமிழர் இயக்கத்தின் முக்கிய பிரமுகரான சுரேஸ் கடந்தமாதம் 18ம் திகதி அதிகாலை கைது செய்யப்பட்டார். உலகத் தமிழர் இயக்க அலுவலகத்தில் வைத்தே அவர் கைது செய்யப்பட்டார்.

கனடா பாதுகாப்புப்பிரிவு, கனடா உளவுப்பிரிவு ஆகியவை சமர்ப்பித்த அறிக்கையொன்றை அடுத்து, கனடிய குடிவரவு அமைச்சரும், சட்டமா அதிபரும் இணைந்து கைச்சாத்திட்ட ஒரு உத்தரவின் பேரில் அவர் கைது செய்யப்பட்டார்.

கனடாவின் தேசிய பாதுகாப்பு, பயங்கர வாதம், இன்னொரு அரசாங்கத்தை (இலங்கை அரசு) கவிழ்க்கச் சதி செய்தமை போன்ற சட்ட விதிகளின் கீழ் வழக்குத் தொடரப் பட்டுள்ளது.

கனடாவில் உலகத் தமிழர் இயக்கம் என்ற பெயரில் புலிகள் அமைப்பினர் செயற்பட்டு வருகின்றனர். புலிகளுக்கான நிதி திரட்டலிலும் ஈடுபட்டு வருகின்றனர். நிதி கேட்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள் கொடுத்த புகார்களின் பேரிலேயே சுரேஸ் கனடா உளவுப்பிரிவினரால் கண்காணிக்கப் பட்டு கைது செய்யப்பட்டதாக நம்பப்படுகிறது.

கனடா அரசாங்கம் எடுத்துள்ள இந்த நடவடிக்கை புலிகளது வெளிநாட்டுக் கிளைகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

புலிகள் அமைப்பின் சர்வதேச செயலகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"மாணிக்கவாசகம் சுரேஸ் கைது செய்யப்பட்டது குறித்து ஆழ்ந்த கவலை அடைந்துள்ளோம். புலிகளுக்கு ஆதரவாகச் செயல்படுவதை கனடா அரசு ஒரு குற்றச் செயலாக கருதுவதாயின், புலிகள் தொடர்பாக கனடா அரசு எத்தகைய கருத்தைக் கொண்டுள்ளது என்பது கேள்விக்குறியாக உள்ளது.

கனடிய அரசு புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் மத்தியஸ்த செயல்பாட்டை நடத்த விரும்புவதாக கூறியிருந்தது. சுரேசும் மத்தியஸ்த செயற்பாட்டை கொண்டுவரவே முற்பட்டார். கனடிய அரசின் திடீர் நடவடிக்கை எமக்கு அதிர்ச்சியைத்தந்துள்ளது.

இலங்கை அரசின் பொய்ப்பிரசாரத்திற்கும் தூண்டுதலுக்கும் உட்பட்ட நடுநிலையற்ற நடவடிக்கை என்றே இதனைக் கருதுகின்றோம். சுரேசை உடனடியாக கனடிய அரசு விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்." அவ்வாறு புலிகளின் சர்வதேச செயலகம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சுரேஸ் சார்பாக வழக்கு நடத்த லண்டனில் இருந்து சட்டத்தரணி சத்தியேந்திரா செல்லவுள்ளார். இவர் 1985 இல் திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் 'ரெலோ' சார்பாக கலந்து கொண்டவராவார். தற்போது ரெலோவை விட்டு விலகிவிட்டார்.

புலிகளது பிரான்ஸ் கிளையின் பிரமுகரான திலகருக்கு ஏற்கனவே கனடா அரசு விசா மறுத்திருந்தது. கனடாவில் தங்கியுள்ள முன்னாள் புலி உறுப்பினர்கள் சிலர் தாம் முன்னர் புலிகள் அமைப்பில் இருந்ததாக கூறியதால் அகதி அந்தஸ்து மறுக்கப்பட்டுள்ளது.

# தலைநகரில் இரகசிய தாக்குதல் திட்டம் வெளியாகியுள்ள பல்வேறு தகவல்கள்

கொலன்னாவ, ஒருகொடவத்த எரிபொருள் குதங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து விசாரணைகள் தொடர்ந்து வருகின்றன.

இதேவேளையில் அத் தாக்குதல் திட்டம் குறித்து பல்வேறு செய்திகள் வெளியாகி வருகின்றன.

தலைநகரில் அதிரடித் தாக்குதல் ஒன்று நடத்தும் திட்டம் போர் நிறுத்தக் காலத்திலேயே வகுக்கப்பட்டுவிட்டதாம்.

அப்போதே அதிரடித் தாக்குதலுக்குரிய ஆயுதங்கள் கொழும்புக்குள் பத்திரமாக கொண்டுவந்து சேர்க்கப்பட்டுவிட்டன என்று கூறப்படுகிறது.

பிரேமதாசா அரசின் காலத்தில் புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டிருந்தன. அப்போது அதில் ஒரு பகுதி ஆயுதங்களை கொழும்பில் புலிகள் பாதுகாப்பாக வைத்துவிட்டு சென்றிருக்கலாம் என்று மற்றொரு செய்தி தெரிவிக்கிறது.

எப்படியோ கொழும்பில் புலிகள் அமைப்பின் ஆயுதக் கிடங்கொன்று இருப்பதற்கான சாத்தியத்தை மறுக்க முடியாமல் உள்ளது.

எரிபொருள் குதங்கள் மீது தாக்குதல் நடத்துவது என்று முதலில் முடிவு செய்யப் படவில்லை.

ஜனாதிபதி மீது தாக்குதல் நடத்துவதற்கே முதலில் திட்டமிடப்பட்டிருந்தது.

கரும்புலித் தாக்குதல், அல்லது குண்டுத் தாக்குதலையே பாதுகாப்பு பிரிவினர் எதிர் பார்த்திருப்பார்கள். எனவே, எதிர்பாராத முறையில் திடீர் அதிரடித் தாக்குதல் நடத்தி குறிவைக்கவே முதலில் தீர்மானித்திருந்தனர்.

ஜனாதிபதியின் நடமாட்டங்களை கவனிக்கவும், அவருக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை நோட்டமிடவும் புலிகளது உளவுப்பிரிவினர் ஈடுபடுத்தப்பட்டனர்.

அவ்வாறு ஈடுபட்டவர்களில் சிலர் தலைநகரப் பொலிசாரால் கைது செய்யப் பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் மூலமாக புலிகள் அமைப்பினரின் இரகசிய திட்டங்கள் பொலிசாருக்கு கிடைத்துவிட்டன.

அதனையடுத்தே புலிகளது அதிரடித் தாக்குதல் திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டது என்று தெரிகிறது.

ஈ.பி.டி.பி தலைவரது இல்லம்மீது தாக்குதல் நடத்தப்பட்டது 9.10.95 அன்றாகும். அவரது இல்லத்திலிருந்து கிட்டத்தட்ட இரண்டுகிலோ மீற்றர் தூரத்தில்தான் விஜயகுமாரதுங்காவின் வீடு இருக்கிறது.

9.10.95 அன்று அமரர் விஜயகுமாரதுங்காவின் பிறந்தநாள் நினைவு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள ஜனாதிபதி மாலையில் சென்றிருந்தார். முன்கூட்டியே இச் செய்தியை அறிந்து, புலிகளது அதிரடிப் படையினர் கடைசியாக ஒரு தடவை முயன்று பார்க்க நினைத்திருக்கலாம். கடும் பாதுகாப்பு இருந்தமையால் திட்டத்தைக் கைவிட்டு தமது பட்டியலில் இருந்த மற்றொரு இலக்கு மீது திரும்பியிருக்கலாம் என்றும் ஒரு ஊகம் தெரிவிக்கப்படுகிறது.

ஈ.பி.டி.பி. தலைவரது இல்லம் தாக்கப் படுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்புதான் விஜயகுமாரதுங்க பிறந்தநாள் நினைவு நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு ஜனாதிபதி திரும்பிச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கொலன்னாவ, ஒருகொடவத்தை எரிபொருள் குத சுற்றுப்புறங்கள் வீடியோவில் பதிவு செய்யப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டன. எவ்வாறு தாக்குதல் நடத்துவது என்பதற்கான திட்டம் அங்கிருந்தே வந்தது. படப்பிடிப்பின்போது புலிகள் இயக்க உறுப்பினர்களோடு கூட இருந்தவர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது.

# இயக்க உறுப்பினர்களின் விபரங்கள் சேகரிப்பு

## மட்டக்களப்பு நகரில் பாதுகாப்பு நடவடிக்கை

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு நகரில் தங்கியிருக்கும் ஈ.பி.டி.பி, ரெலோ, ஈரோஸ், புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்புக்களின் உறுப்பினர்கள் பற்றிய விபரங்களை படையினர் திரட்டி வருகிறார்கள்.

புலிகள் அமைப்பு அண்மைக்காலமாக ஏனைய அமைப்புக்களின் உறுப்பினர்களைப் பயன்படுத்தி தமது நோக்கங்களை நிறைவேற்றி வருகிறார்கள். உங்களிடமே பாதுகாப்பு தேடி உங்களுக்கே தெரியாமல் இவ்வாறு செய்வதினால் பொதுமக்கள் எதிர்ப்பு உங்கள் மீது ஏற்படலாம். எனவே முன் எச்சரிக்கையாக செயற்படுமாறு இராணுவத்தினர் கேட்டுள்ளார்கள்.

பொலிஸ் அனுமதி பெற்றவர்களை மட்டும் தங்கவைப்பதுடன் கட்சி அடையாள அட்டையை வழங்க வேண்டும். இனிமேல் அனைவரும் பொதுமக்கள் போலவே சோதனைச் சாவடிகளில் சோதிக்கப்படுவார்கள். அத்தோடு மேற்படி அமைப்புக்களின் உறுப்பினர்கள் இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் நடமாடவும் தடைவிதிக்கப்பட்டிருப்பதாக தமிழ் அமைப்புக்களின் அலுவலகப் பொறுப்பாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு வினாக்கொத்து வழங்கப் பட்டு விபரங்களும் திரட்டப்பட்டு வருகின்றன. உறுப்பினர்களின் குடும்ப விபரம் மற்றும் ஆயுத பயிற்சிபெற்ற இடம், பொதுமக்கள்-பாதுகாப்பு படையினருக்கு எதிராக குறித்த உறுப்பினர் ஈடுபட்டவரா? குடும்ப அங்கத்தினர்கள் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டார்களா? வெளிநாடுகளுக்கு சென்றுவந்தார்களா? செலுத்தக் கூடிய வாகனங்கள், தொழில்நுட்ப பயிற்சிகள் போன்ற பல்வேறு விபரங்கள் கோரப் பட்டுள்ளன.

இவ்விபரங்களுடன் ஒவ்வொரு உறுப்பினர்களின் புகைப்படங்களையும் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

# சண்டையில்லாமல் சரமாரி வேட்டுக்கள்!

(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூர் பகுதியில் 28.10.95 அன்று காலை 6.00 மணிமுதல் பகல் 10.00 மணிவரை ஒரு தரப்புத் தாக்குதல் நடந்தது. 1990ம் ஆண்டின் பின் ஏறாவூரில் பகல் வேளையில் இடம்பெற்ற இந்த வெடி முழக்கத்தினால் மக்கள் கதி கலங்கிப் போனார்கள். இதன் விளைவாக தமிழ் முஸ்லீம் பொது மக்கள் 9 பேர் காயங்களுக்கு உள்ளானார்கள். வாகனங்களுக்கும் வீடுகளுக்கும் சேதம் ஏற்பட்டது. அன்றைய தினம் கொழும்பு மட்டக்களப்பு வீதி போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டது. இத்தனைக்கும் மத்தியில் மறுதரப்பு தாக்குதல் நடத்த அங்கு வரவில்லை என்றும் தவறாகச் சுடப்பட்ட துப்பாக்கிச் சூட்டின் ஆரம்பமே இந்த வெடி முழக்கத்தை உண்டு பண்ணியதாகத் தெரியவருகிறது.

பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து கண்ணிவெடி கண்டெடுக்கப்பட்ட அதே பகுதியில் பின்னர் புதைக்கப்பட்ட கண்ணிவெடியொன்றில் இராணுவ வாகனம் சிக்கி இருவர் பலியானார்கள். மூவர் காயம் அடைந்தனர். இச்சம்பவம் 25.10.95 அன்று ஏறாவூர் ஆறுமுகத்தான் குடியிருப்பில் நடைபெற்றது. இதற்கு இரு தினங்களுக்கு முன்னரே கண்ணி வெடி அங்கு கண்டெடுக்கப்பட்டது.

# ஈரோஸ் அலுவலகத்தில் புலிகள்

மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர் பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலர்களாக தங்கியிருந்தவர்கள் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் நடைபெற்ற மின்மாற்றித் தகர்ப்பு நடவடிக்கை ஒன்றின்போது ஏற்பட்ட வெடிவிபத்தில் ஒருவர் பலியாகியிருந்தார். அவரது சடலத்தை பொலிசார் இனம் கண்டனர். அவர் மாநகரசபை ஈரோஸ் இயக்க உறுப்பினர் பிரபாகரனின் மெய்ப்பாதுகாவலர்களில் ஒருவராக இருந்தவர் என்று இனம் காணப்பட்டார்.

மட்டக்களப்பு ஈரோஸ் அலுவலகத்தில் ஈரோஸ் உறுப்பினர்கள் என்று சொல்லிக் கொண்டு புலிகள் இயக்க உறுப்பினர்கள் நீண்டகாலமாக தங்கியிருந்தனர் என்று கூறப் படுகிறது.

இதனையடுத்து மட்டக்களப்பு நகரில் உள்ள ஏனைய தமிழ் அமைப்புக்கள் மீதும் பொலிசாரின் சந்தேகம் திரும்பியிருக்கிறது.

# அனுப்பப்பட்ட உணவுப் பொருட்கள் தீர்ந்தன!

## புள்ளி விபரத்தோடு தகவல் தெரிவிப்பு!

யாழ்-குடாநாட்டில் உணவு நெருக்கடி ஏற்பட்டுவருவதை புள்ளி விபரங்களோடு யாழ்-அரசு செயலக அதிகாரிகள் விளக்கியுள்ளனர். யாழ் மாவட்டத்திற்கு இவ்வருடம் 96,500 மெட்ரிக்தொன் உணவுப் பொருட்கள் தருவதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரால் உறுதி செய்யப்பட்டது.

அதன்படி மாதாந்தம் 9,000 மெட்ரிக் தொன் உணவுப் பொருட்கள் கொண்டு செல்லப்பட ஒழுங்கு செய்வதாக உத்தரவாதம் வழங்கப்பட்டது.

அதனைவிட பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக இந்த வருடத்திற்காக 30,000 மெட்ரிக் தொன் உணவுப் பொருட்கள் கொண்டு செல்ல அனுமதியளிக்கப்பட்டிருந்தது.

மேலும் யாழ் குடாநாட்டின் உள்ளூர் உற்பத்திகள் மூலம் 20,000 மெட்ரிக்தொன் உணவு பெறப்படும் என்றும் தீர்மானிக்கப் பட்டது. எனினும் இவ்வருடம் யாழ் குடாநாட்டு உள்ளூர் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டதால் தீர்மானிக்கப்பட்ட தொகையில் ஒரு வீதத்தைக்கூடப் பெற முடியவில்லை.

இந்த வருடத்தில் இதுவரை அத்தியாவசிய சேவை ஆணையாளரால் அனுப்பப்பட்ட உணவின் அளவு 49,812 மெட்ரிக் தொன். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக சென்றது 9,209 மெட்ரிக் தொன். ஆகவே யாழ்ப்பாணத்திற்கு இன்னமும் அனுப்பப்பட வேண்டியுள்ள உணவுப்பொருள் 68,279 மெட்ரிக்தொன்.

யாழ்-குடாநாட்டு மக்களது மொத்த ஜனத்தொகை கிட்டத்தட்ட எட்டு இலட்சத்து 10 ஆயிரம். ஒரு நபரின் நுகர்வுத் தேவை 7.9 கிலோ கிராம் (ஒரு மாதத்திற்கு). ஒரு மனிதனின் ஒரு மாத சராசரி உணவு நுகர்வு 28 கிலோ கிராமாகும். ஆனால் 7.9 கிலோ கிராமுக்கு கணக்கிட்டே யாழ் குடாநாட்டுக்கான உணவுத் தேவை வரையறுக்கப்பட்டிருந்தது. எனவே இதுவரை அனுப்பப்பட்ட உணவுப் பொருட்கள் 9 மாதத்திற்குக் கூட போதுமானதல்ல. 9மாதம் முடிந்து 11வது மாதமும் தொடங்கி விட்டது.

எனவே-உணவுப் பொருட்களை உடனடியாக அனுப்பிவைக்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால் பட்டினி நிலை தோன்றுவது தவிர்க்க முடியாதது என்றும் யாழ்ப்பாண அரச செயலக வட்டாரம் தெரிவித்துள்ளது.

யாழ் குடாநாட்டில் தற்போது ஒரு இலட்சத்து 10 ஆயிரம் குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. ஏறக்குறைய 4 இலட்சத்து 40 ஆயிரம் மக்கள்.

குடாநாட்டின் சனத்தொகையில் இது அரைவாசித் தொகையாகும்.

# முஸ்லிம் காங்கிரஸ் ஹர்த்தால்

(காத்தான்குடி நிருபர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரசின் தலைவரும், துறைமுகங்கள், கப்பற்துறை, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சருமான அல்ஹாஜ் எம்.எச்.எம்.அஷ்ரப் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரனை பாராளுமன்றத்தில் ஐ.தே.கட்சியால் கொண்டு வரப்பட்டது. அதனைக் கண்டித்து மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் முஸ்லிம் காங்கிரஸ் ஹர்த்தால் நடத்தியது.

# கல்வி அதிகாரிக்கும் தண்டனை

வடக்கில் புலிகள் அமைப்பினரால் மரண தண்டனை விதிக்கப்பட்ட 29 பேரில் ஒருவர் கல்வி அதிகாரியாவார். வவுனியா வடக்கு கோட்ட உதவி கல்வியதிகாரியாக இருந்த சுப்பிரமணியம் குமார், கிராம சேவகர் தம்பிராசா சிவபாலன் ஆகியோர் தண்டனைக்குள்ளானோரில் அடங்குவர்.



படிப்பகம்

www.padippakam.com

# சகல தபால் அதிபர்களுக்கும் ஓய்வூதியம்

(திருமலை நிருபர்)

1966 ஜனவரி 1ந் திகதி தொடக்கம் சகல தபால் அதிபர்களும் ஓய்வூதியம் பெற உரித்துடையவர்களாகிறார்கள். இதற்கான வேலைகள் சகல அஞ்சல் அத்தியகட்சகர் அலுவலகங்களிலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

வயதெல்லையும் 21ல் இருந்து 18ஆகக் குறைக்கப்பட்டுள்ளதோடு ஆரம்பச் சம்பளமாக மாதாந்தம் 2450/-உம் ஏனைய சகல படிகளும் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கு ஆண்டுக்கு 28 நாட்கள் விடுமுறையும், பேறுகால விடுமுறைகளும் வழங்கப்பட உள்ளன. அத்தோடு எழுது கருவிகளுக்கான செலவு, உபதபாலகக் கட்டட வாடகை என்பனவும் கொடுப்பனவில் இணைக்கப்படும்.

தற்போது சேவையிலுள்ள சகல உபதபாலதிபர்களும் புதிய நடைமுறையில் பெரிதும் நன்மையடைய உள்ளார்கள் என்று 'முரசு'க்குக் குறிப்பிட்ட திருக்கோணமலை மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் திரு.சி. நல்லதம்பி, தனது நேரடிக் கண்காணிப்பின் கீழ் உபதபாலதிபர்களது ஓய்வூதியம் பற்றிய விடயங்களைக் கொண்டு வந்து தீவிரப் படுத்தியுள்ளார்.

# மத்திய மாகாண தமிழ் கொலைகள்

## மாகாண சபை உறுப்பினர்கள் கவலை

(கண்டி நிருபர்)

மத்திய மாகாண சபைக்குச் செல்லும் வீதியின் மகாவலி-தென்னக்கும்புரை பாலத்தின் நுழைவாயிலுக்கு அருகில் பொருத்தப்பட்டுள்ள இரண்டு பெயர்ப் பலகையிலும் தமிழ் எழுத்துக்கள் கொலை செய்யப்பட்டிருப்பதாக வீதியைக் கடந்து செல்லும் மக்கள் புகார்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு பலகையில் 'மகாவலி ஆரு' எனவும் மற்றொரு பலகையில் 'கைத் தொழல்' வலயம் என்று எழுதப்பட்டு மாதங்கள் பல கடந்து விட்டன. பளிச்சென பலரது கண்களுக்குப் படும் இவ்விரு பெயர்ப்பலகைகளும் அதனை அடிக்கடி கடந்து செல்லும் தமிழ், முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த மாகாண அமைச்சர்கள் உட்பட சபையில் அங்கம் வகிக்கும் 17 தமிழ் பேசும் உறுப்பினர்களின் பார்வைக்கும் இதுவரை எட்டவில்லையா எனவும் தமிழ் பேசும் மக்கள் கேள்வியெழுப்புகிறார்கள்.

மத்திய மாகாணசபையில் அங்கம் வகிக்கும் 57 உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் தமிழ் மொழியைக் கற்றறிந்த தமிழ், முஸ்லிம் உறுப்பினர்கள் என்று இவர்கள் மேலும் சுட்டிக்காட்டுகிறார்கள்.

கடந்த 19.10.95ல் பல்லேகல மாகாண சபைக்கூட்டத்தின்போது திரு.எஸ். ரங்கநாதன (ஐ.தே.க/இ.தொ.கா) பேசும்போது: தமிழ் பேசும் உறுப்பினர்கள் மூன்றில் ஒரு பகுதியினராக இச்சபையில் இருந்தும்கூட சபை அலுவலகம் மூலம் தமக்கு வரும் கடிதங்கள், சுற்றறிக்கைகள் உட்பட பலவும் தனிச் சிங்களத்திலேயே வருவதையும் சுட்டிக்காட்டி, நீண்ட காலமாக இக் குறைபாடுகள் நிலவிவருவது குறிப்பிடத்தக்கது. அது பற்றி சபைத் தலைவரிடம் வருத்தம் தெரிவித்தார்.

இதேவேளையில் மாகாணசபையில் சமகால மொழிபெயர்ப்பு தங்களுக்குக் கிடைப்பதில்லை யெனவும் திரு.வி.விமலவன் (ஐ.தே.க/இ.தொ.கா) குறைபட்டுக்கொண்டார்.

# வீடில்லாதோரின் விண்ணப்பங்கள் நிராகரிப்பு

(திருமலை நிருபர்)

நடுத்தர வர்க்க மக்களுக்கென தொகுதிகள்தோறும் அமைக்கப்பட்டு வரும் '100 வீடுகள்' திட்டத்தில் திருக்கோணமலையில் பாரிய ஒழுங்கீனங்கள் நடந்துள்ளதாக பொதுமக்கள் குமுறுகிறார்கள்.

இவற்றுள் தமிழர்களுக்கென ஒதுக்கப்பட்ட 65 வீடுகளுக்கான ஆட்களை திரு.தங்கத்துரை-பா.உ. தெரிவு செய்ததாக நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த தெரிவின்போது திருக்கோணமலை தொகுதியைச் சேர்ந்த வீடில்லாதோரின் விண்ணப்பங்கள் வெகு கவனமாக தேர்ந்தெடுக்கப்பட்டு, நிராகரிக்கப் பட்டுள்ளதாக மக்கள் கூறுகிறார்கள்.

திருக்கோணமலை தொகுதியைச் சாராத, தொழிலின் நிமித்தமாகவோ பயத்தின் காரணமாகவோ குடியேறியவர்களின் விண்ணப்பங்களே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவர்களது சொந்தத் தொகுதிகளிலும் '100 வீடுகள்' அமைக்கப் படுகின்றன என்பது கவனத்தில் கொள்ளாமல் விடப்பட்டிருப்பதோடு, இவர்களில் பலர் ஏற்கெனவே வீட்டு உரிமையாளர்கள் என்ற உண்மையும் அலட்சியப்படுத்தப் பட்டிருக்கிறது.

"எனது பிரிவில் மேற்படி விண்ணப்பதாரிக்கு சொந்தவீடில்லை என்பதை உறுதிப்படுத்துகிறேன்" என விண்ணப்பதாரி தற்காலிகமாகக் குடியிருக்கும் பகுதி கிராம உத்தியோகத்தரைக் கொண்டு எழுதிப் பெறப்பட்ட புத்திசாலித்தமான அத்தாட்சிக் கடிதம், மூலமாக விண்ணப்பதாரிக்கு எங்குமே சொந்த வீடு இல்லையென்ற பிழையான கருத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது. ஒரு கிராம சேவைப் பிரிவென்பது சுமார் 300 குடியிருப்புக்களை உள்ளடக்கிய பகுதியே என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கண்துடைப்புக்காக நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு பாராளுமன்ற உருப்பினரின் சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கமைய விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப் பட்டுள்ளதன் மூலம் 'வீடற்றோருக்கு வீடு' என்ற கொள்கை மாற்றப்பட்டு, 'உச்சல்காரர்களுக்கே வீடு' என்ற கொள்கை வலியுறுத்துப் பட்டிருப்பதாக திருமலையைச் சேர்ந்த விண்ணப்பதாரிகள் முரசு நிறுபரிடம் தெரிவித் துள்ளார்கள்.

### புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

கேக் அலங்கரிக்கும் முறையும், பூ கட்டும் முறையும் புதிய வகுப்புக் கள். 11.11.1995ல் ஆரம்பம். பயில விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

திருமதி. சித்ரா விஜயன்
29, கதிர்காமர் வீதி,
அமிர்தகழி, மட்டக்களப்பு.

# காட்டூண் மூலை




# மட்டு-மாநகர முதல்வர் எச்சரிக்கை!

## வாவிகள் குறுக்கே இணையும் ஆபத்து

மட்டக்களப்பு மாநகர சபையின் திருப்பெருந்துறை கிராமப் பகுதியில் பாரியளவில் அகழ்ந்தெடுக்கப்படும் கிறவலையும் மண்ணையும் மாநகர சபையின் எல்லைக்கப்பால் கொண்டு செல்லும் செயல்பாட்டை மட்டக்களப்பு மாநகர முதல்வர் திரு.செழியன் கே பேரின்பநாயகம் வன்மையாகக் கண்டித்திருப்பதுடன், எதிர் காலத்தில் இப்பிரதேசம் எதிர்கொள்ளப் போகும் சுற்றாடல்-சூழல் அபாயத்தையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாநகர சபையின் எல்லைக்கப்பால் தென்பகுதிக்கும் வடபகுதிப் பட்டினங்களுக்கும்-அபிவிருத்தி என்ற மகுடத்தின் கீழ் இப்பாரதூரமான நிகழ்வு நிதமும் நடைபெறுகிறது. காலை 5 மணிமுதல் மாலை 6 மணிவரை உழவு இயந்திரப் பெட்டிகளில் அகழப்படும் கிறவல், மண் கொண்டு செல்லப்படுகிறது. வாவியை அண்டிய பகுதியின் வயல்வெளியில் மண் அகழப்பட்டு பிறபகுதியின் பள்ளங்கள் நிரப்பப்படுகின்றன. மன்றேசா பகுதியை அண்டிய பகுதியில் கிறவல் பெருமளவில் அகழப்படுகிறது. இரு புறங்களிலும் இவவேளைகளில் 15 முதல் 25 உழவு இயந்திரங்கள் ஈடுபடுத்தப்படுகின்றன.

வீதி அபிவிருத்திப் பகுதியினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதும் எவ்வித அனுமதியுமில்லாத வாகனங்கள் இந்த 'ஏற்றுமதி வியாபாரத்தில்' ஈடுபட்டிருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இது ஒரு புறமிருக்க இங்குதான் சம்மாந்துறையிலிருந்து அனர்த்த விளைவின் போது, குடிபெயர்ந்த குடும்பங்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். தவிர 100 வீட்டுத்திட்டமும் இங்கு அமையப் போகிறது. ஒரே கூரையின் கீழ்-கிராமத்தின் பல தேவைப்பிரிவுகள் வழங்குவதற்கான கட்டிடமும் (Multy Purpose Building) இங்கு அமைக்கப்பட்டு வருகிறது.

இத்தனைக்கும் மேலாக கிறவல், மண்அகழ்வு இன்றைய வேகத்தில் தொடருமானால் மட்டக்களப்பு வாவி மறுபுறத்தில் மன்றேசா வாவியுடன் குறுக்கே இணையும் அபாயம் வெகு தூரத்தில் இல்லை என மாநகர முதல்வர் எச்சரித்திருக்கிறார்.


## நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

| தினமுரசு உள்ளூர் சந்தா விபரம் | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 557/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 284/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 145/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுய முகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

THINAMURASU VARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.


## முதலாவது பிறந்த தின வாழ்த்து



### செல்வன் மரிய லெனோக்ஸ்

நெடுந்தீவைச் சேர்ந்த அமலன்-சாந்தி தம்பதிகளின் செல்வப்புதல்வன் மரிய ரெனோக்ஸ் 25.09.95 அன்று தனது முதலாவது பிறந்த தினத்தை ஜேர்மன் முனிஸ்ரல் நகரில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு டடா-மம்மி, கொழும்பு விவேகானந்தா றோட் அப்பப்பா-அப்பம்மா (இத்தாலி) றேமன் சித்தப்பா-அன்ரன் சித்தப்பா (பாரின்) வவா சித்தப்பா, கொழும்பு கிரான்பாஸ் பெரிய அத்தை. மச்சாள்மார் நிரோ, ஜெஸ்லின் ஆன் (கனடா), பெரிய மாமா, நெடுந்தீவு சின்ன அத்தை, அன்பு மச்சான் கினைமென்ற். மச்சாள்மார் மயுரு, சிந்து, சினோ-பரிசான், சின்னமாமா (பிரான்ஸ்), மாமா குட்டி அத்தை, மச்சாள் ஒலிவியா கொழும்பு (அளுத்மாவத்தை றோட்). அம்மப்பா, அம்மம்மா, ஜெயந்தி அன்ரி, சமதி அன்ரி (மானிப்பாய்), ஆசை ராஜாமாமா, பிறேமாமாமி, பிள்ளைகள், மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் குழந்தை யேசு அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல். ஜீ.பிரான்சிஸ்

# என்.டி.ராமராவ் தயாராகிறார்



குடும்ப பூசல் என்.டி.ராமராவ் ஆட்சி கவிழக்காரணமாக இருந்தது. என்.டி.ராமராவின் மருமகன் சந்திரபாபு நாயுடு இப்போது முதல்வர் பதவியில் இருக்கிறார். அவரது நாற்காலியும் இப்போது ஆடத் தொடங்கிவிட்டது. ராமராவின் மற்றொரு மருமகனான டகுபதி வெங்கடேஸ்வரராவ் 16 சட்டசபை உறுப்பினர்களோடு ராமராவிடம் திரும்பி ஓடிவந்துவிட்டார்.

சந்திரபாபு நாயுடு அவருக்கு துணை முதல்வர் பதவி கொடுப்பதாக ஆசை காட்டி ஏமாற்றிவிட்டார்.

அடுத்த தேர்தல்களில் என்.டி.ராமராவ் பக்கமே அலை வீசும் என்பதால் மேலும் பல சட்ட சபை உறுப்பினர்கள் சந்திரபாபு நாயுடுவை விட்டு விலகக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சந்திரபாபு நாயுடு புத்தி சாலிதான். ஆனால் வாக்காளர்களை கவர அவரால் முடியாது.

என்.டி.ராமராவ் மீண்டும் புதுத் துடிப்போடு மக்கள் மத்தியில் பிரசாரத்தை ஆரம்பிக்கப்போகிறார். தனக்கு நடந்த அநியாயத்தை சொல்லி அனுதாபம் தேடுவதே ராமராவின் திட்டம்.

இழந்த ஆட்சியை மீண்டும் பெற முதிய வாலிபர் கிளம்பிவிட்டார்.


## அற்புத மலையாள மாந்திரீகம்



மலையாள மாந்திரீக ஆவி உச்சாடனங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லிய சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணத் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்சுமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்சுமி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
164, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

**தலைமையகம்**

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28



## சித்தர்களின் தெய்வீக மருத்துவம்

(GOVT. APPROVED CHARTY) மட்டக்களப்பு, கல்லடி (வேலூர்) குருசக்தி நிலையத்தின் பிரதமகுரு, மகாசக்தி உபாசகர் "மந்திரயோகி" சுகாதார அமைச்சினால் பதிவு செய்யப்பட்ட ஹோமியோபதி (அக்குப்பங்சர்) டாக்டர்-சக்தியானந்தபாவா மட்டக்களப்பு-மலையாழ (இந்திய) பாரம்பரிய கைகண்ட அனுபோக புராதன (மருந்த, மந்திர, யந்திர, மனோவசிய, ஆகார்வண) வைத்திய முறைகளினால் உடல்நோய், மனநோய், தீயசக்திகளினால் ஏற்பட்ட தீவினைகளையும் தீர்த்து துன்பங்கள் அனுகாமல் "காவல்ரட்சைகள், சர்வகாரியசித்தி, தாயத்து, நவக்கிரகதோஷ, சர்வரோக நிவர்த்தியந்திரம், ஜனராஜ வசியயந்திரங்களும்" செய்து கொடுக்கிறார். பிரிந்த குடும்பங்களை உறவாக்க விரும்பிய வாழ்க்கையை அமைத்து இன்பமாக வாழ, (இருவர் பெயர்களும் தேவை) வேறு நன்மையான தனிப்பட்ட மாந்திரீக வசிய விடயங்கள் செய்து கொள்ள வரமுடியாத வெளிநாட்டவர்கள் கோரிக்கைகளை எழுதினால் உங்கள் விருப்பங்களை உடன் நிறைவேற்ற பரிகாரப் பொருட்களை தபாலில் அனுப்பப்படும். விரும்பியனுப்பும் காணிக்கைகளை (மணியோடர்) ஏற்று உடன் கவனிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு நாடவேண்டிய விலாசம்:-

YOGI. DRO SACKTHYANANTHEBABA
GURUSACKTHY CENTERE,
KALLADY, BATTICALOA.



கொழும்பில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்றிற்கு தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கு கட்டுரைகள் நூல்கள் என்பவற்றை மொழிபெயர்க்கும் திறமையுடையவர்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

விளம்பர இல: T95, மே/பா தினமுரசு வாரமலர் த.பெ.இல.1772 கொழும்பு.


# சந்திரசாமியின் கெட்ட நேரம்



ராஜீவ் கொலைச் சம்பவம் பற்றி விசாரித்துவரும் ஜெயின் கமிஷன் முன் சந்திரசாமி நார் நாராகக் கிழிக்கப்பட்டு வருகிறார். நீதிபதி ஜெயின் கடுமையான வார்த்தைகளால் சாமியை சாடித்தள்ளிவிட்டார். "ஆத்ம சுத்தமே உமக்குகிடையாது. நீர் எப்படி பரமாத்மாவைச் சந்திக்கப் போகிறீர்?" என்று கேட்டார் ஜெயின். சந்திரசாமியின் முகம் கறுத்துவிட்டது. சில கேள்விகளுக்கு சந்திரசாமி மழுப்பலாகப் பதில் சொன்னபோது. சுற்றிவளைக்கக் கூடாது. நேரடியாகவே சொல்ல வேண்டும்" என்று கண்டிப்பாகவே உத்தரவிட்டார் நீதிபதி. பாவம் சாமி. ஆடிப் போய்விட்டார்.


## தகுதிகாண்நிலை ஆசிரியர் ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சை 95

### ஆசிரியர் போட்டிப் பரீட்சை கைநூல்

35 பயிற்சி வினா விடைகளுடன் பொது அறிவு, மொழி அறிவு, கணித அறிவு, உளச்சார்பு விடயங்களைக் கொண்ட மிகச் சிறந்த கைநூல் V.P.P. உண்டு.

விலை: 250/=

BRIGHT BOOK CENTRE (PVT) LTD
S-27, FIRST FLOOR, P.O.BOX-162
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO-11 (T. P. 434770)




படிப்பகம்

www.padippakam.com

# கைமாறிக் கொண்டிருக்கும் புலிகளின் தளப்பிரதேசம்

**நாரதர்**

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

மூன்றாம் கட்ட ஈழப்போரை ஆரம்பித்த பின்னர் பாரிய நெருக்கடியை தற்போது புலிகள் எதிர்நோக்கியுள்ளனர்.

தற்காப்பு யுத்தக் கட்டத்தில் இருந்து படையினர் தாக்குதல் யுத்தக் கட்டத்திற்குள் பிரவேசித்துள்ளார்கள்.

இரண்டாம் கட்ட ஈழப்போரில் தாக்குதல் யுத்தக் கட்டத்திலிருந்த புலிகள் தற்போது தற்காப்பு யுத்தக் கட்டத்திற்கு திரும்பியுள்ளனர்.

தற்காப்பு யுத்தம் என்பது ஒரு

கவனத்தை செலுத்தியது மூலம், தரைவழித் தாக்குதல்களில் பலவீனமாகிவிட்டார்கள் என்ற மதிப்பீடும் உருவானது.

எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துக் கணக்குப் பார்த்துத்தான் தனது இரண்டாவது தாக்குதல் யுத்தத்தை யாழ் குடாநாட்டில் படையினர் ஆரம்பித்தனர்.

முன்னேற்றப்பாய்ச்சல் நடவடிக்கை தோல்வியில் முடிந்தபோதும், அது இடி மின்னல் தாக்குதலுக்கு வியூகம் வகுக்கும் ஒத்திகையாகியதுமை படைத்தரப்புக்கு ஒரு

யாழ்ப்பாண நகரை நோக்கிச் செல்லாமல், தென் கிழக்குப் பக்கமாக படையினர் திரும்பினால் கைதடி வழியாக தென்மராட்சிப் பகுதி நோக்கிப் போக முடியும்.

கைதடிப் பாதை பெருவெளியாக இருப்பதால், அங்கு பதில் தாக்குதலில் ஈடுபடுவது புலிகளுக்கு சாதகமாக இருக்காது.

கைதடி வெளியின் மூலமாகச் சென்று நாவற்குழியில் படையினர் நிலை கொண்டால், புலிகளது யாழ் குடாநாட்டு தளப்பிரதேசம்

படையினர் யாழ்நகரை கைப்பற்றப் போகிறார்கள் என்று நம்பிக்கொண்டிருக்கும் மக்கள் புலிகளது கட்டளையை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

படையினரின் வெற்றிகுறித்து மக்களிடம் ஏற்பட்டுள்ள நம்பிக்கையானது புலிகளது கட்டளைகளும், வேண்டுகோள்களும் புறக் கணிக்கப்படும் சூழ்நிலையை தோற்றுவித்துள்ளன.

மோதலில் சிக்கிக்கொள்ளாமல் தமது உயிர்களை பாதுகாத்துக்கொள்ள புகலிடம் தேடும் மக்களிடம், நம்பிக்கைகள் தளர்ந்த

அல்லது குறுகிய கால யுத்தமா என்பது யுத்தத்தில் ஈடுபடும் ஒரு தரப்பால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை.

யுத்தத்தில் ஈடுபடும் இரு தரப்பினதும் பலம்-பலவீனம், யுத்தம் நடைபெறும் உள்நாட்டு, வெளிநாட்டு சூழ்நிலைகள் என்பவற்றை பொறுத்தே அது தீர்மானிக்கப்படும்.

ஆனால், மூன்றாம் கட்ட ஈழப்போர் இறுதிப்போர் என்று புலிகள் பிரசாரம் செய்ய முற்பட்டமையும், நம்பிக்கையை ஏற்படுத்தியதும் தற்போது புலிகளுக்கே பாதகமாக அமைந்துள்ளது.

யுத்தத்தில் தளப்பிரதேசங்கள் அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கும். இந்தியப்படை காலத்தில் யாழ் குடாநாட்டு

கட்டத்தின் பின் தாக்குதல் யுத்தமாக மாற்றம் பெறாவிட்டால், தற்காப்பு யுத்தத்தில் ஈடுபடும் தரப்பு பலவீனமாக வேண்டியே ஏற்படும்.

இரண்டாம் கட்ட ஈழப்போரில் படைத்தரப்பு நீண்டகாலமாக தற்காப்பு யுத்தத்தில் தங்கிநின்றது.

அதனால், பல முகாம்கள் புலிகளது அதிரடித் தாக்குதலுக்கு உள்ளாகின. படைத்தரப்பின் உளவியல் நிலையும் பெரும் சேதத்துக்கு உள்ளாகி வந்தன.

அதே சமயம் தாக்குதல் யுத்தத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த புலிகளது அணிகளின் மனோபலம் உயர்ந்து கொண்டிருந்தது.

யாழ் குடாநாட்டில் முன்னேறி நிலைகொள்ள முடியும் என்பதை இரண்டாம் கட்ட ஈழப்போர் காலத்தில் படைத்தரப்பு நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

ஆனால், தற்போது நிலமை தலைகீழாகிவிட்டது.

மூன்றாம் கட்ட ஈழப்போரில் முன்னேறிப் பாய்ச்சல் நடவடிக்கைதான் படையினர் மேற்கொண்ட முதலாவது தாக்குதல் யுத்தம்.

புலிப்பாய்ச்சல் நடவடிக்கைமூலம் படையினரை மீண்டும் தற்காப்பு யுத்தக் கட்டத்திற்குள் புலிகள் தள்ளியிருந்தனர்.

எனினும், புலிகளாலும் தாக்குதல் யுத்தக் கட்டத்துக்கு செல்ல முடியவில்லை. அதாவது, யாழ் குடாநாட்டில் படையினர் நிலைகொண்டிருந்த முகாம்களை கைப்பற்றுமளவுக்கு புலிகளது

வகையில் சாதகமானது.

ஆட்பலமும், கனரக ஆயுதபலமும், வான்படையும் புலிகளைவிட படைத்தரப்பு முன்னணியில் நிற்பதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது.

இடிமின்னல் நடவடிக்கையை முறியடிக்க முற்பட்டு 150 புலிகள்வரை பலியானது படைத்தரப்புக்கு அதிஸ்டலாபச் சீட்டு விழுந்த மாதிரித்தான்.

மனோவலிமை விடயத்தில் படைத்தரப்பு பெற்றுள்ள உற்சாகம்தான் புலிகளுக்கு பெரிய சவாலாக மாறியிருக்கிறது.

எனவே-இப்போதுதான் உண்மையான பலப்பரீட்சை ஆரம்பித்திருக்கிறது.

வெறுமனே ஒரு தரப்பு மறுதரப்பை பயம் காட்டிக் கொண்டிருப்பதெல்லாம் முற்றுப் பெற்றுவிட்டன.

தீர்க்கமான சமர்களைக் கொண்ட போர் முனை யாழ்-குடாநாட்டில் திறக்கப் பட்டுள்ளது.

யாழ் நகரைக் கைப்பற்றுவதுதான் படைத்தரப்பின் குறி.

யாழ் நகரைப் பிடிப்பதோடு போர் முடியப்போவதில்லை. ஆனால், யாழ்-நகரைப் புலிகள் இழப்பது என்பது தமது அடி மடியில் கைவைக்கப் படையினரை அனுமதிப்பது போலாகிவிடும்.



இரு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டுவிடும்.

யாழ் குடாநாட்டின் மத்திய பகுதியில் இருந்து தென்மராட்சிக்கு செல்லவோ, ஒரு வேளை புலிகள் பின்வாங்கிச் செல்லவோ முடியாதவகையில் முற்றுகை அமைந்துவிடும்.

சூழ்நிலையில் ஆயுதம் ஏந்துமாறு விடுக்கும் வேண்டுகோள் செவிகளில் ஏறப்போவதில்லை.

அதுதவிர, பெரும்பலத்தோடு முன்னேறும் படையினரை பயிற்சியில்லாத மக்களிடம் ஆயுதம் வழங்கி யுத்தத்தில் ஈடு

தளப்பிரதேசத்தைப் புலிகள் இழந்திருந்தனர். பின் மீண்டும் பெற்றனர்.

எனவே யாழ் தளப்பிரதேசத்தை புலிகள் பறிகொடுத்தால் கூட அத்தோடு யுத்தம் முடிந்து போய்விடும் என்று அர்த்தம் கொள்ள முடியாது.

ஆனால், தளப்பிரதேசம் ஒன்றை இழப்பதன் மூலம் போரில் புலிகளுக்கிருந்த சில சாதகங்கள் இல்லாமல் போய்விடும்.

நாட்டின் ஒரு பகுதியின் நிர்வாகத்தை நடத்துபவர்கள் என்ற நிலையிலிருந்து, தலைமறைவு அமைப்பாக இருந்து கெரில்லாப் போர் நடத்துபவர்கள் என்ற நிலை ஏற்பட்டுவிடும்.

மக்களிடம் தம்மைக் குறித்து மீண்டும் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப பல தாக்குதல்களை நடத்த வேண்டிய தேவையும் ஏற்படும்.

யாழ்-குடாநாடு முழுவதையும் அல்லது பாதியை என்றாலும், பூரண கட்டுப்பாட்டில் வைத்து தொடர்ந்து நிலைகொள்ள படையினரால் இயலாது என்று புலிகள் நம்புகிறார்கள்.

மரபுப்போரில் படையினருக்கு எத்தகைய சாதகங்கள் உண்டோ அது போல கெரில்லாப் போரில் புலிகளுக்கும் பெரும் சாதகங்கள் இருக்கின்றன.

தளப்பிரதேசம் போனாலும் கூட தமது தாக்குதல் பலத்தை புலிகள் நிலையாக வைத்திருந்தால் கெரில்லாப் போர் முறையில் புலிகளுக்கு சாதகங்கள் இருந்து கொண்டேயிருக்கும்.

எனவே-யாழ்-குடாநாட்டுச் சமரின் முடிவு ஒரு யுத்தத்தின் முடிவாக

## சமரின் முடிவு யுத்தத்தின் முடிவாகுமா?

அமையுமா என்பது கேள்விக்குறிதான்.

ஒரு யுத்தம் என்பது பல சமர்களைக் கொண்டது.

ஆனால், ஒன்று, தளப்பிரதேசத்தை புலிகள் இழப்பார்களேயானால் அரசாங்கத்திற்கு இராணுவரீதியில் மட்டுமல்லாமல், அரசியல்ரீதியிலும் பல சாதகங்கள் உருவாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தால் முடியாததை தாமே சாதித்தோம் என்று பொது ஜன முன்னணி உரத்துச் சொல்ல முடியும்.

சமரசம் செய்யப்போய் அது தோல்வியுற்றதால் சமரில் ஈடுபட்டு வெற்றி பெற்றோம் என்று சொல்லும்போது யாரும் மறுப்புச் சொல்ல மாட்டார்கள்.

ஆனால், அதெல்லாம் எந்தளவுக்கு சாத்தியம் என்பதை உடனடியாக சொல்லிவிட முடியாது. யுத்தமும் ஒரு சூதாட்டம் மாதிரித்தான். நிலவரங்கள் மாறிக்கொண்டே இருக்கும். குபேரனை வறியவனாக்கும். வறியவனை குபேரனாக்கும்.

எது எப்படியோ யாழ் குடாநாட்டு மக்கள் இன்றைய யுத்தம் பதித்த தடங்களால் ஏற்பட்ட பின்னடைவுகளில் இருந்து மீள்வதற்கு நீண்டகாலம் எடுக்கும்.

அணிகளால் செல்ல முடியவில்லை.

குடாநாட்டில் படையினர் விழிப்பாகவும், தாக்குதலை எதிர்பார்த்து தயார்நிலையில் இருந்தமையால் புலிகள் வெலிஓயாவுக்குள் தமது அணிகளை நகர்த்தினார்கள்.

பாரியளவில் திட்டமிடப்பட்ட அத்தாக்குதல் எதிர்பாராத தோல்வியில் முடிந்ததுதான் மூன்றாம் கட்ட ஈழப்போரில் புலிகளுக்கு ஏற்பட்ட முதல் அடி.

180 உறுப்பினர்களை பறிகொடுத்தது கூட புலிகளுக்கு ஒரு பெரிய விஷயமல்ல. அதைவிடப் பெரிய இழப்புக்களையெல்லாம் புலிகள் சந்தித்திருந்தனர். ஆனால், புலிகளை வியூகத்திற்குள் சிக்க வைப்பது ஒன்றும் கஸ்டமல்ல என்று படைத்தரப்பு மன உற்சாகம் கொள்வதற்கு வெலிஓயாத் தோல்வி உதவிவிட்டது. அதுதான் புலிகளுக்கு பெரிய பாதிப்பு.

புலிப்பாய்ச்சல் நடவடிக்கை மூலமாக புலிகள் ஏற்படுத்திய அதிர்ச்சியையும், பிரமைகளையும் வெலிஓயாத் தோல்வி அடித்துப் போட்டிருந்தது.

வெலிஓயாவில் ஏற்பட்ட தோல்வியை ஈடுகட்ட வடக்கில் வேறு முனைகளில் புலிகளால் தாக்குதல் நடத்த முடியாமல் போயிருந்தது.

கடலில் மட்டுமே புலிகள் தமது

ஆக, யாழ் நகரை நோக்கிய சமர் இரு தரப்புக்குமே கௌரவப் பிரச்சனையாக இருக்கிறது.

அதனால் நீர்வேலியில் வைத்து புலிகள் தமது பதில் தாக்குதலை வேகப்படுத்தியிருந்தார்கள்.

நீர்வேலியில் இருந்து யாழ்ப்பாண நகரம் கிட்டத்தட்ட பத்து கிலோ மீற்றர் தூரத்தில் தான் இருக்கிறது.

பத்து கிலோ மீற்றர் என்பது பெரிய தூரமல்ல. ஆனால் புலிகளது எதிர்ப்பை மீறி செல்வது சுலபமான காரியமல்ல.

இதுவரை படையினர் கடந்து சென்றுள்ள பகுதிகளில் பெரும்பாலானவை தோட்டப்பகுதிகளாகும்.

அதனால் புலிகள் பதுங்கி நிலை எடுக்கக்கூடிய சாதகங்கள் குறைவாகவே இருந்தன. நீர்வேலி, கோப்பாய் பகுதிகளை தாண்டிப்போனால் குடியிருப்புக்களும், கட்டடங்களும் உள்ள பகுதிகள் மூலமாகவே படையினர் முன்னேற வேண்டியிருக்கும்.

புலிகளும் பதுங்கி நிலை எடுக்க சாதகமான சூழல் இருக்கும்.

ஆனால் கோப்பாய் சந்திவரை படையினர் சென்றுவிட்டால் புலிகளுக்கு ஒரு பிரச்சனை ஏற்படும்.

கோப்பாய் சந்தியில் இருந்து நேராக

எனவேதான் கோப்பாய் நோக்கி படைத்தரப்பு செல்வதை எப்படியாவது தடுக்க வேண்டிய கட்டாயம் புலிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

ஆனால், படையினர் மரபுப்போர் முறையில் அதிக சாதகங்களைக் கொண்டுள்ளனர்.

நூறுபேர் பலியானாலும், அவர்களை கடந்து கொண்டு தொடர்ந்து செல்லும் ஆட்பலம் இருந்தால்தான் மரபுப் போரில் வெற்றி வாய்ப்பு இருக்கும்.

புலிகளைப் பொறுத்தவரையில் ஆட்பலத்தை தக்கவைத்தால்தான் அவர்கள் தொடர்ந்து தமது பலத்தை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

எனவே-கெரில்லாப் பாணியிலான எதிர்த்தாக்குதலையே புலிகள் அதிகம் நம்பியிருக்கிறார்கள். இரண்டு இராணுவங்கள் நேரடியாக மோதும் மரபு சமர் முறைக்கு புலிகள் தயாராக இல்லை.

அதனால், படைத்தரப்பின் தற்போதைய உற்சாகம் தொடருமானால், யாழ் குடாநாட்டில் பெரும் பகுதியை புலிகள் இழக்க வேண்டியே ஏற்படும்.

குடிமக்கள் அனைவரும் ஆயுதம் ஏந்த வேண்டும் என்று புலிகளது அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ் செல்வன் அவசர அறிக்கை விடுத்திருக்கிறார்.

படுத்துவது, இழப்புக்களையே ஏற்படுத்தும்.

எனவே-மக்கள் உடனடியாக ஆயுதம் ஏந்த வேண்டும் என்று கோருவது உடனடியாக நடக்கக்கூடியதல்ல.

நாங்கள் போராடுகிறோம். நீங்கள் நிதி தாருங்கள் என்றுதான் இதுவரை புலிகள் கூறிவந்தனர். இப்போது போய் நீங்களும் ஆயுதம் ஏந்துங்கள் என்று கேட்டால் மக்கள் எரிச்சல்படவே செய்வார்கள்.

நிதியையும் வாங்கிப்போட்டு எங்களை விட்டுப்போட்டு ஓடுகிறார்கள் என்று மக்கள் பேசத் தலைப்பட்டுள்ளார்கள்.

ஆனால், புலிகள் முடிந்தளவுக்கு எதிர்ப்பு யுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பதையும், பெரும்படை ஒன்று முன்னேறும்போது, சிறியபடை தன்னைத் தற்காத்துக் கொண்டு, தனது சக்திகளை சேமித்துக்கொள்ள பின்வாங்க நேரும் என்பதையும் மக்கள் புரிந்து கொள்ளவில்லை.

காரணம், புலிகளும் தமது பலம் குறித்து அளவுக்கதிகமான மதிப்பீடுகளை மக்களிடம் உருவாக்கியிருந்தனர்.

யாழ்-குடாநாடு எப்போதும் தமது நிரந்தரத் தளப்பிரதேசமாக இருக்கும் என்று புலிகள் நம்பிக்கையை கட்டியெழுப்பியிருந்தனர்.

யுத்தம் என்பது நீண்டகால யுத்தமா

## அதிரடி ஐயாத்துரை



திடீரென்று விடுதிகளைப் பூட்டச் சொன்னால் சனம் என்ன பாருங்கோ செய்யுறது. ஒவ்வொரு மாதமும் வசூல் நடத்திற ஆர்வத்திலை இருந்து போட்டு. இப்ப வந்து கழுத்திலை பிடிச்சா என்ன செய்யிறது எண்டு சில லொட்ஜ் காரர் முணு முணுத்தவையாம்.

எரிபொருள் குதத்திலை தாக்குதல் நடத்தினவையிலை ஒரு பகுதியினர் தப்பிச் சென்றது தெரிந்த விசயம்தானே. சீருடையினர் அவையைத் தேடுகிறது ஒரு பக்கம் இருக்கட்டும். கடைக்காரர் ஒருத்தர் தலையிலை கையை வச்சுக்கொண்டு இருக்கிறாராம். கடன் பாக்கியாக ஒரு ஆயிரம் மட்டும் வரவேண்டிக்கிடக்காம்.

மக்கள் கஷ்டப்படேல்லை எண்டும் சொல்லுகினம். சனம் கஷ்டப்படேக்கை ரெண்டு எழுத்துக்காரர் விட்டுப் போட்டு ஓடுகினம் எண்டும் சொல்லுகினம். அப்ப சனம் கஷ்டப்படுகிறது உண்மைதானே பாருங்கோ. வானொலியையும், தொலைக்காட்சியையும் திருப்பினா ஒரே குழப்பமாய்க் கிடக்கு.

விடாது போர் நடந்தாலும் மாற்று இயக்ககாரரை போடும் விஷயத்திலையும் ரெண்டு எழுத்துக்காரர் சளைக்காமல்தான் இருக்கினம். திரட்டல் (நிதி), தீர்த்துக்கட்டல் எண்ட விஷயங்களில் விட்டுக் கொடுக்கிற மாதிரித் தெரியவில்லை. இந்த நேரத்திலை இது அவசியமோ? மனைவியை சீருடையினரின் நடவடிக்கையாலை பறிகொடுத்தவரை ரெண்டு எழுத்தார் தேனகத்திலை தீர்த்துக்கட்டியதாலை என்னலாபம் பாருங்கோ கிடைக்கப் போகுது? பாவம், அந்தோனியின் பிள்ளையள்!

கிளிநொச்சியிலை அதிகாரப் பிரதிநிதியின் வாகனத்தை ரெண்டு எழுத்தார் வாங்கிக் கொண்டு போனதாக எனக்கு கிடைச்ச தகவல் பொய் எண்டு தெரிஞ்சு போச்சு. அவர் வவுனியாவுக்கு அங்காலை வாகனத்தை கொண்டு போகவேயில்லையாம்.

ஓமந்தையிலை வைச்சு ரெண்டு எழுத்தார் 'போட்ட' ஆட்களில் ஒருவர் கிராமசேவகர். அவர் ஒரு காலத்திலை ரெண்டு எழுத்தாருக்கு நிதி சேகரித்து கொடுத்துக் கொண்டிருந்தவராம். பிறகு மெல்ல மறுபக்கத் தோடையும் குசு குசுப்பு வைத்துக்கொண்டவராம். அது கசிஞ்சுதான் பிழைச்சுப் போச்சு.

அய்யாத்துரை யார் எண்டு ஆராயும் முயற்சியிலை ஈடுபட்டு முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாண சபைக் கட்சிக்காரர் முக்கடைபட்டுப் போச்சினம். விஷயங்கள் சற்றுத் தள்ளி வெளிக்கிறதாலைதானே தலைகீழாய் நிண்டுபோட்டு, சபையை விட்டு ஓடிப்போக வேண்டி வந்தது. மாகாண சபை நடத்தின அனுபவம் இருக்கெண்டு மார் தட்டுகினம். சத்தியமாய் உண்மை.சனமும் அந்த அனுபவங்களை ஒரு நாளும் மறக்கப் போறேல்லைப் பாருங்கோ. எண்டாலும் செயலாளரைப் பாராட்டலாம்: யாழ்ப்பாணத்திலை உருப்படியாக இருக்கும் விடு இடிஞ்சு போட்டுது எண்டு சொல்லி நஸ்டஈடாக பல லட்சம் வாங்கிப் பையிலை போட்டிருக்கிறாராம். கணக்குக் காட்டமாட்டார். பல கணக்கு விவகாரங்கள் இருக்கு. பிறகு கவனிக்கலாம் விடுங்கோ. பொல்லைத் தந்து போட்டார்.

ரெண்டு எழுத்து ஆலோசகரை ஒரு பத்திரிகையாளர் சந்தித்துப் பேசினவராம். ஏனைய இயக்கங்களோடை சேர்ந்தால் என்ன எண்டு கேட்டாராம். அதற்கு ஆலோசகர் சொன்ன பதில் என்ன தெரியுமோ? "காட்டிலை புலியைப் பாத்திருக்கிறியளோ, அது வேறு விலங்குகளோடு எப்பவாவது சேர்ந்திருக்கிறதைக் கண்டிருக்கிறியளோ?"

பத்திரிகையாளர் கப்சிப்பாகிப் போனாராம்.

சனம் எங்கை பாதிக்கப்பட்டாலும் கவலைக்குரிய விஷயம்தான். ஆனால்,அம்பாறையில் நடந்த சம்பவம் பற்றி மட்டும் படத்தோடை செய்திகள் வந்திருக்குது. தணிக்கை தொடவே இல்லை. வடபகுதிச் செய்திகளில் சனத்தின்ரை இழப்பை சொல்ல மட்டும் தணிக்கை குறுக்கே வருகுது. அதுதான் பாருங்கோ பிழை எண்டு சொல்லுறன்.

தலைநகரப் புறநகர் கட்டடித்தொகுதியில் நள்ளிரவில் திடீர் சோதனை. குடியிருப்பாளர்கள் எல்லாம் இறக்கப்பட்டினம். திடீரென்று பட்டுப்பட்டென்று வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. சனம் பயந்து போச்சு. யாரோ இருளில் அசையுற மாதிரித் தெரிந்ததாம் அதுதான் சுட்டதாம். பிறகு சோதனையிட வந்தவை தங்களில் யாரும் தவறேல்லை எண்டு எண்ணிப்பார்த்து உறுதிசெய்து போட்டுத்தான் சோதனையைத் தொடர்ந்தவையாம்.

மலைகள் பற்றி ஒரு வித்தியாசமான கவிதை.

*மலைகள்*

பூமிக்காகிதம்
பறந்து போகாமலிருக்க
இயற்கை வைத்த
பேப்பர் "வெயிட்!"

(ஆர்.கே.செல்வி)



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் தொடர்
அற்புதன் எழுதுவது

51

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# ராஜீவுக்கு பிரபா சூட்டிய புகழாரம்

# போர் நிறுத்துமும் — படையினரின் முற்றுகையும்

### ஜே.ஆரின் பேட்டி

'போர் நிறுத்தம்' மேலும் நீடிக்கப்பட்டது. போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் நிறுவப்பட்டது. போர் நிறுத்த மீறல்கள் மட்டும் தொடர்ந்து கொண்டேயிருந்தன.

இதற்கிடையே தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி போர் நிறுத்தம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கைகள் இயக்கங்களிடம் கோபத்தை ஏற்படுத்தி வந்தன.

பலவீனமடைந்துவிட்ட இயக்கங்கள் வேறு வழியின்றி யுத்த நிறுத்தத்திற்கு உடன்பட்டுள்ளன என்று கூறிக்கொண்டிருந்தார் அத்துலத் முதலி.

'இந்திய டுடே' சஞ்சிகைக்கு ஜே.ஆர். ஜெயவர்த்தனா அளித்த பேட்டியொன்றும் சர்ச்சைக்கு உள்ளாகியது.

"தமிழர் பிரச்சனை ஒரு இராணுவப் பிரச்சனை. எந்த இராணுவப் பிரச்சனையும் இராணுவ ரீதியாகத்தான் தீர்வுகாணப்பட வேண்டும்.

பேச்சுவார்த்தைகளுக்கான காலக்கெடு டிசம்பர் மாதம். அதற்கு அப்பால் பேச்சுவார்த்தைகளை தொடரமாட்டோம்.

இந்தியா 24 மணி நேரத்தில் சிறீலங்காவை கைப்பற்றி என்னைக் கைது செய்துவிடலாம். அப்படி நடந்தால் சிங்கள மக்கள் மத்தியில் வாழும் தமிழர்கள் பிரச்சனைக்குள்ளாக நேரிடும்.

யாழ்ப்பாணத்தைக் கட்டுப்படுத்துவது கஷ்டமல்ல. அதற்கு முன்னர் மற்றப் பிரதேசங்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு உணவு விநியோகத்தை தடை செய்வதன் மூலம் ஒரு மாதத்தில் பயங்கரவாதிகளை அழித்தொழித்துவிடலாம்."

என்று தனது பேட்டியில் கூறியிருந்தார் ஜே.ஆர்.

### இயக்கங்களின் திட்டம்.

போர் நிறுத்தக் காலத்தோடு படையினரை முகாம்களுக்குள் முடக்கிவிட வேண்டும் என்பதுதான் இயக்கங்களின் திட்டம் என்று முன்னரே கூறியிருந்தேன்.

ஆனால், யாழ் குடாநாட்டைத் தவிர ஏனைய பகுதிகளில் படையினர் திடீர் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டே வந்தனர். சோதனை நடவடிக்கைகளும் அடிக்கடி நடைபெற்றன.

படையினரின் போர் நிறுத்த மீறல்களை இயக்கங்கள் கண்டித்த போதும், போர் நிறுத்த மீறல்கள் நடைபெறுவதை அவை ஒருவகையில் விரும்பவும் செய்தன.

அப்படியானால்தான் போர் நிறுத்தத்தையும், பேச்சுவார்த்தையையும் விரைவில் முடிவுக்குக் கொண்டுவரலாம்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சமாதானத் தீர்வுக்கு எப்போதும் முன்வரக்கூடியவரல்ல என்பதை இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்திக்கு



எப்படியாவது புரியவைத்துவிட வேண்டும் என்பதுதான் இயக்கங்களின் முக்கிய நோக்கமாக இருந்தது.

சுருக்கமாகச் சொல்வதானால், இலங்கை அரசுக்கும், இந்திய அரசுக்கும் இடையே கசப்புணர்வு தோன்றுமானால், அது இயக்கங்களுக்கு இனிப்பான செய்தியாகிவிடும்.

அதனால், போர் நிறுத்தத்தை தாங்கள் சரியாகக் கடைப்பிடிப்பதாகவும், படைகள் அதனை மீறிவருவதாகவும் சகல இயக்கங்களும் தீவிரமாகப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தன.

குறிப்பாக இந்தியாவில் இருந்த இயக்கத் தலைமைகள் அதனைத் திறம்படச் செய்துகொண்டிருந்தன.

இதேவேளை 1985 ஜூலை 8ம் திகதி திம்புவில் நடைபெற்ற முதல் கட்டப் பேச்சு தோல்வியில் முடிந்ததையடுத்து, இந்திய அரசின் முயற்சியால் திம்புவில் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை ஆரம்பமானது.

1985 ஆகஸ்ட் 12ம் திகதி இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை ஆரம்பமானது.

இலங்கை அரசின் சார்பில் சமர்பிக்கப்பட்ட யோசனைகள் மாவட்ட சபைகள், மாகாண சபைகள் என்ற வட்டத்திற்குள் மட்டுமே நின்று கொண்டிருந்தன.

வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களது பாரம்பரிய தாயகம் என்பதையோ, தொடர்ந்து வடக்கு-கிழக்கு இணைந்திருக்க வேண்டும் என்பதையோ அரச தரப்பு ஒரேயடியாக நிராகரித்தது.

மேலும் பேச்சை நீடித்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்று இயக்கங்கள் முடிவுக்கு வந்தன.

இந்தியாவை மீறி பேச்சுவார்த்தையை புறக்கணிப்பது எப்படி என்பதுதான் பிரச்சனை.

இலங்கை அரசின் நடவடிக்கை ஒன்று அதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தது.

### திடீர் முற்றுகை

வவுனியா நகரில் இருந்து 10 மைல் தொலைவில் உள்ள இறம்பைக்குளம், தோணிக்கல், குலைப்பிள்ளையார் குளம், கூடமாங்களம், மூன்று முறிப்பு ஆகிய கிராமங்கள் சந்தடிகள் அடங்கித் தூங்கத் தயாராகிக் கொண்டிருந்தன.

திடீரென்று பல வாகனங்கள் வரும் இரைச்சல், நாய்கள் குரைக்கத் தொடங்கின.

சத்தம் கேட்டு ஓடிவந்தவர்கள் திகைத்துப் போனார்கள். 50க்கு மேற்பட்ட ட்ரக்குளிலும், ஜீப்புகளிலும், கவச வாகனங்களிலும் 400க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கிராமங்களுக்குள் புகுந்தனர்.

வேட்டுச் சத்தங்கள் விண்ணைக் கிழித்தன. அவற்றையும்மீறி அவலச் சத்தங்கள் எங்கும் ஒலித்தன.

வரிசையாக நிறுத்திவைக்கப்பட்டு 50க்கு மேற்பட்ட இளைஞர்கள சுட்டுக்கொல்லப்பட்டனர்.

காடுகளுக்குள்ளும், பற்றைகளுக்குள்ளும் ஓடிப் பதுங்கிக் கொண்டவர்கள் போக, வீடுகளில் இருந்தவர்கள் வேட்டுகளுக்குப் பலியானார்கள்.

குடிசைகள் பல எரிக்கப்பட்டன.

இரண்டு நாட்களாக ஒரே அமளி. மூன்றாம் நாள் படையினர் வெளியேறினார்கள்.

40 உடல்கள் வவுனியா வைத்தியசாலையில் கையளிக்கப்பட்டன.

ஏறக்குறைய 100 பேர்வரை கொல்லப்பட்டனர். 10 வயதிற்குட்பட்ட எட்டுக் குழந்தைகளும் பலியானவர்களில் அடக்கம்.

வவுனியாவில் சர்வோதய இயக்கத்திற்குப் பொறுப்பாக இருந்தவரும் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது மனைவி, மகள், தாய் தந்தை, ஆகியோரும் விட்டுவைக்கப்படவில்லை. அனைவரும் கொல்லப்பட்டனர்.

### திருமலையில்...

திருக்கோணமலையிலும் படையினரின் நடவடிக்கைகள் விசுவரூபமெடுத்தன.

பன்குளம், இறணைக்கேணி, சாம்பல்தீவு ஆகிய இடங்களில் சாதாரணமக்கள் தாக்குதலுக்கு உள்ளாகினர். குடியிருப்புக்களும் தாக்கப்பட்டன.

சாம்பல்தீவில் கைது செய்யப்பட்ட தமிழர்கள் வீதிகளுக்கு கொண்டுவரப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டனர்.

பன்குளம் என்னும் ஊரில் ஊர்காவல் படையினர் கத்தி, வாள் போன்ற ஆயுதங்களோடு தமிழ் மக்களின் வீடுகளுக்குள் புகுந்து தாக்கினார்கள்.

திருமலை மாவட்டத்தில் மட்டும் இரண்டு நாட்களில் நூறுபேர் வரை கொல்லப்பட்டனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் சொந்தமண்ணில் அகதிகளானார்கள்.

சென்னையில் நான்கு இயக்கக் கூட்டமைப்பான ஈழத் தேசிய விடுதலை முன்னணி (E.N.L.F) தலைவர்கள் கூடி ஆராய்ந்தனர்.

திம்பு பேச்சுவார்த்தையிலிருந்து உடனடியாக வெளியேறுவது என்று முடிவு செய்யப்பட்டது.

பேச்சுவார்த்தையிலிருந்து வெளியேறும் முடிவை புளொட் அமைப்பும் ஏற்றுக் கொண்டது. கூட்டணியும் உடன்பட்டது.

உடனடியாக வெளிநடப்புச் செய்ய வேண்டாம் என்று திம்புப் பேச்சில் கலந்து கொண்ட இந்திய அரச பிரதிநிதிகள் இயக்கப் பிரதிநிதிகளிடம் வலியுறுத்தினார்கள்.

அதனை சென்னையில் உள்ள தமது தலைவர்களுக்கு தெரிவித்தனர் இயக்கப் பிரதிநிதிகள்.

"தலைமையின் உத்தரவு என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டுத் திரும்பி வாருங்கள். அங்கு தொடர்ந்து நிற்க வேண்டாம்" என்று சென்னையில் இருந்த தலைவர்கள் கண்டிப்பாகக் கூறிவிட்டனர்.

### முதல் முறிவு

சகல பிரதிநிதிகளும் மூட்டை முடிச்சுக்களோடு திரும்ப ஆயத்தமானார்கள். ஒரே ஒருவர் மட்டும் சற்றுப்பின்னடித்தார்.

அவர்தான் வரதராஜப்பெருமாள். ஈ.பி.ஆர்.எல்.எஃப் பிரதிநிதிகளாக வரதராஜப்பெருமாள், கேதீஸ்வரன் ஆகியோர் திம்பு பேச்சில் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தியப் பிரதிநிதிகள் கூறும்போது முகத்தை முறித்துக்கொண்டு உடனே திரும்புவது முறையல்ல என்பதே வரதராஜப் பெருமாளின் வாதம்.

பத்மநாபா நேரடியாக தொலைபேசியில் தொடர்புகொண்டு வரதராஜப்பெருமாளை உடனடியாகத் திரும்புமாறு கூறிவிட்டாா.

எப்படியோ ஈழப் போராளி அமைப்புக்கள் முதன்முதலாக இலங்கை அரசோடு நடத்திய பேச்சுவார்த்தை முறிவடைந்தது.

திம்புப் பேச்சுத் தீர்வுக்கான பாதையைத் திறக்கும் என்று ஆருடம் சொன்னவர்களும், வரவேற்றவர்களும் வாயடைத்துப் போனார்கள்.

திம்பு பேச்சுவார்த்தை முறிந்தபின்னர் விடுதலைப் புலிகளது தலைவர் வே.பிரபாகரன் ஒரு விரிவான அறிக்கை வெயிட்டிருந்தார்.

பேச்சுவார்த்தைக்கு ஏன் தாம் உடன்பட்டோம் என்பதை அவர் விளக்கியிருந்தார்.

அந்த அறிக்கையிலிருந்து ஒரு பகுதி இது;

"புதிய பாரதப்பிரதமரின் நேர்மையான நல்லெண்ண முயற்சிகளுக்கு நாம் எவ்வகையிலும் குந்தகமாக இருக்கவில்லை. ஜெயவர்த்தனா அரசின் சர்வாதிகாரக் கொடுங்கோன்மை ஆட்சியின் அட்டூழியங்களை அம்பலப்படுத்துவதோடு, தமிழர் பிரச்சனையை நியாயமான முறையில் தீர்த்துவைப்பதில் சிறீலங்கா அரசுக்கு எவ்வித விருப்பமும் இருக்கவில்லை என்பதை பகிரங்கப்படுத்தவும் எமக்கு ஒரு அரிய வாய்ப்பு ஏற்பட்டது.

ஆகவே நாம் யுத்த நிறுத்தத்திற்கு இணங்கினோம். பேச்சுவார்த்தைக்கு சம்மதித்தோம்.

நாம் தீர்க்கதரிசனத்துடன் அனுமானித்தபடி தமிழ்ழ மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளைத் தழுவிய எந்தவொரு உருப்படியான தீர்வுத்திட்டமும் சிறீலங்கா அரசினால் முன்வைக்கப்படவில்லை.

பேச்சுவார்த்தை என்ற வலைவிரிப்பில் எம்மைச் சிக்கவைத்து, சுதந்திர வீரர்களான எம்மை அடிமைகளாக்கி அழித்தொழிப்பதுதான் ஜெயவர்த்தனாவின் சூத்திரதாரத் திட்டம். இந்த பொறிக்கிடங்கில் விழுந்துவிட விடுதலைப் புலிகள் தயாராக இல்லை.

பேச்சுவார்த்தை என்ற நாடகத்தில் போலி வேடம் புனைந்துகொண்டு, உலகத்தையும், இந்தியாவையும் ஏமாற்றிக்கொண்டு, அதே சமயம் தமிழ்ழத்தில் பயங்கரமான இனக்கொலையை கட்டவிழ்த்து விட்டது சிறீலங்கா அரசு.

சிங்கள இனவாத அரசின் நாசகாரத் திட்டத்தை இந்திய அரசு புரிந்துகொள்ள வேண்டும் என்பதே எமது அவா."

என்று குறிப்பிட்டிருந்தார் பிரபாகரன்.

### ராஜீவுக்கு பாராட்டு

தனது அறிக்கையில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் புகழாரம் சூட்டியிருந்தார் பிரபாகரன். அது இதுதான்:

"ஜெயவர்த்தனா ஒரு சூத்திரதார அரசியல்வாதி என்பதையும், நம்பமுடியாத ஏமாற்றுப் பேர்வழி என்பதையும் நன்கு உணர்ந்து கொண்டவர் முன்னாள் பாரதப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி.

புதிய பாரதப் பிரதமர் (ராஜீவ்காந்தி) சமாதானப்பிரியர். தமிழரின் பிரச்சனையில் தனிப்பட்ட அக்கறை கொண்டவர். தமிழ் மக்கள் கௌரவமாக, பாதுகாப்பாக வாழ வேண்டும் என்று விரும்புபவர்.

அவரது நற்போக்கையும், நல்லெண்ண முயற்சிகளையும் ஆதரிப்பது போல ஜெயவர்த்தனா அரசு நடிக்கிறது. இந்திய அரசை தமிழ்ழ விடுதலைப் போராளிகளுக்கு எதிராக முடிந்துவிடுவதில் ஈடுபடுகிறது. ஜெயவர்த்தனாவின் இந்த ராஜதந்திர சூழ்ச்சியை இந்திய அரசும் வெகு விரைவில் புரிந்து கொள்ளும் என்பதே எமது நம்பிக்கை.

தமிழீழத் தனியரசே எமது அசைக்க முடியாத இலட்சியம். இந்த இலட்சியத்தை அடையவே நாம் உயிரை அர்ப்பணித்து போராடி வருகிறோம். வேறு எந்த மாற்றுத் திட்டமும் எமது மக்களின் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வாக அமையமாட்டாது என்பதே எமது கருத்து.

உலகத்து ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய சுதந்திரப் போராட்டங்களை ஆதரித்துவரும் பாரதநாடு ஈழத் தமிழ்மக்களின் சுதந்திரப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் என்பதே எமது எதிர்பார்ப்பு. இந்திய மக்களின் அங்கீகாரம் எமக்குக் கிட்ட காலம் பிடிக்கலாம். ஆயினும் நாம் அதற்காகப் போராடிக்கொண்டே இருப்போம்."

அதுதான் பிரபாகரன் விடுத்த அறிக்கையின் முக்கிய பகுதிகள்.

## சென்னையில் தொலைந்த எழுத்தாளர்

### எழுத்தாளர் எங்கே?

போர் நிறுத்தம், பேச்சுவார்த்தையெல்லாம் ஒருபுறம் நடந்துகொண்டிருந்த போது சென்னையில் நடந்த ஒரு சம்பவம்.

இலங்கையிலிருந்து வெளியேறி சென்னையில் தங்கியிருந்தவர் காவலூர் ஜெகநாதன்.

சிறுகதைகள், நாவல்கள் என்பவற்றை மணவாசனையோடு எழுதிப் பிரபலமானவர்.

காவலூர் என்பது யாழ்ப்பாணத்திலுள்ள ஊர்காவத்துறையைக் குறிக்கும். ஜெகநாதனின் சொந்தஊர் அதுதான்.

சென்னையில் இருந்த காவலூர் ஜெகநாதனை இரவோடு இரவாக சில இளைஞர்கள் அழைத்துப் போனார்கள். அதன்பின்னர் காவலூர் ஜெகநாதன் வீடு திரும்பவேயில்லை.



அவரது நண்பர்களும், உறவினர்களும் சென்னையில் உள்ள இயக்க அலுவலகங்கள் தோறும் விசாரித்துப் பார்த்தார்கள். பயனில்லை.

நான்கு இயக்கக் கூட்டமைப்புக் கூட்டத்தில் காவலூர் ஜெகநாதனைப் பற்றிப் பேச்சு எழுந்தது.

ஈரோஸ் பாலகுமார் சொன்னது இது: "அவர்மூலம்தான் சென்னையிலுள்ள இயக்கங்களின் நடவடிக்கைகள் இலங்கை அரசுக்குப் போவதாக நாம் அறிந்திருக்கிறோம். தனது எழுத்துலகத் தொடர்புகளை பயன்படுத்தி தகவல்களை திரட்டிக்கொண்டிருந்தார். சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகம் மூலமாக பணமும் கிடைத்து வந்தது. அவர் ஒரு உளவாளிதான். ஆனால் நாம் அவரைக் கடத்தவில்லை."

அதுதான் ஈரோஸ் சார்பாக பாலகுமார் சொன்ன விளக்கம்.

பின்னர் உண்மை தெரியவந்தது. காவலூர் ஜெகநாதனை பிடித்துச் சென்று காதும், காதும் வைத்தது போலக் கதையை முடித்தது யார் தெரியுமா?

ஈரோஸ் இயக்கம்தான்.

### பாலமும்–இயக்கமும்

மற்றொரு சம்பவம். 1985ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தமிழ்ழ அரசு இயங்கத் தொடங்கும் என்று அறிவித்தது ஒரு குழு.

அதன் பெயர், ஈழப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கட்சி. அதன் தலைவர் பெயர் பாலசுப்பிரமணியம்.

ரோகண விஜயவீராவின் கூட்டாளியாக ஜே.வி.பி. அமைப்பில் இருந்த பாலசுப்பிரமணியத்திற்கு தானும் ஒரு தலைவராகும் ஆசை வந்துவிட்டது. தானும் ஒரு இயக்கம் என்று புறப்பட்டார்.

இயக்கம் என்றால் ஒரு தாக்குதலாவது நடத்த வேண்டுமல்லவா. என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, தென்னிலங்கையில் ஒரு பாலம் பழுதடைந்து உடைந்துவிட்டது. (இடம் நினைவில் இல்லை)

பாலம் உடைந்த செய்தியைக் கேள்விப்பட்ட பாலசுப்பிரமணியம் எடுத்தார் லெட்டர் ஹெட்டை. "பாலத்தை உடைத்து தகர்த்தவர்கள் நாமே." என்று உரிமை கோரிவிட்டார்.

சில பத்திரிகைகளும் அதனை வெளியிட்டுத் தொலைத்ததுதான் வேடிக்கை.

அந்தப் பாலசுப்பிரமணியம் தான் "1985 நவம்பரில் சுதந்திர ஈழப் பிரகடனம் செய்யப்படும். சுதந்திர ஈழ அரசு இயங்கும்" என்று அறிவித்திருந்தார்.

அதனை யாருமே ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ள வில்லை.

1982ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வா நினைவுத்தூபி முன்பாக தமிழ்ழ விடுதலை அணியும் தமிழ்ழப் பிரகடனம் செய்திருந்தது.

பாலசுப்பிரமணியத்தின் ஈழப்பிரகடனம் இரண்டாவதாகும்.

மூன்றாவது ஈழப்பிரகடனம் 1990 இல் ஈ.பி.ஆர்.எல்.எஃப் இயக்கத்தால் செய்யப்பட்டது. மூன்று ஈழப்பிரகடனங்களுமே புஸ்வாணமாகிப் போயின.

### உள்மோதல்கள்

1985 இன் பிற்பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எஃப், புளொட், ஈரோஸ் ஆகிய இயக்கங்களுக்குள் உள்பிரச்சனைகள் ஏற்பட ஆரம்பித்தன.

ஈ.பி.ஆர்.எல்.எஃப் அமைப்புக்குள் மத்திய குழுவுக்கும், இரண்டாம் கட்டத் தலைமைக்கும் இடையே விரிசல்கள் எழத் தொடங்கின.

புளொட் அமைப்பிலும் இரண்டாம் கட்டத் தலைமை தமது தலைமைக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்த ஆரம்பித்தது.

இந்த இரண்டு அமைப்புக்களுக்குள்ளும் இரண்டாம் கட்டத் தலைமையினர்தான் இயக்கும் சக்திகளாக இருந்தனர்.

அரசியல் பிரசாரம், இராணுவ வேலைகள் போன்றவை இரண்டாம் கட்டத் தலைமைகளாலேயே முன்வைக்கப்பட்டு வந்தன.

புளொட்டைப் பொறுத்தவரை அதன் தலைவர் உமாமகேஸ்வரன் தாக்குதல் நடவடிக்கைகள் சிலவற்றில் நேரடியாகப் பங்குகொண்டிருந்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப் தலைவர் பத்மநாபா இராணுவ நடவடிக்கைகள் எதிலும் நேரடியாகப் பங்குகொள்ளாமலேயே அரசியல்-இராணுவ இயக்கத் தலைவராக அழைக்கப்பட்டுக் கொண்டிருந்தார்.

ஈரோஸ் இயக்கத் தலைமையும் உத்தரவுகளை போடுவதோடு நின்று கொண்டது.

இயக்க வேலைகளை முன்னெடுத்த இரண்டாம் கட்டத் தலைமைகள் தமது தலைவர்களின் வழிகாட்டும் திறமை குறித்து சந்தேகம் கொள்ள ஆரம்பித்தார்கள்.

புலிகளைத் தவிர, ஏனைய இயக்கங்கள் உட்கட்சி ஜனநாயகம் பற்றி பேசிவந்தனர்.

அதே இயக்கங்களுக்குள் உட்கட்சி பிரச்சனைகள் ஏற்பட்ட போது உட்கட்சி ஜனநாயகம் காற்றில் பறந்தது.

புளொட் தலைவர் உமாமகேஸ்வரன் தமது இயக்க உறுப்பினர்களையே உளவு பார்க்க தனது உளவுப்பிரிவை பயன்படுத்தினார்.

இந்தியாவில் இருந்த பயிற்சி முகாம்களில் பல உறுப்பினர்கள் பிரச்சனைக்குரியவர்கள் என்று சந்தேகப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளானார்கள்.

ஈரோஸ் இயக்கத்திற்குள்ளும், ஈ.பி.ஆர்.எல்.எஃப் இயக்கத்திற்குள்ளும் பிரச்சனை வேறு ஒரு கோணத்தில் தோன்றியிருந்தது.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com



அலசுவது – இராஜதந்திரி

# ஐ.நா 50

அண்மையில் உலகின் கவனத்தைப் பெற்ற முக்கிய நிகழ்வாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் 50வது ஆண்டு பொன்விழாக் கொண்டாட்டங்கள் விளங்கியிருந்தன.

உலகத் தலைவர்கள் பலரும் நியுயோர்க் நகரில் கூடி ஐ.நா.வின் பொன்விழாவைக் கொண்டாடியிருந்தனர்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க ஐ.நா. செல்வதற்கு நாட்டை விட்டுப் புறப்படும்போது இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் ஏற்படாத பெரும் தீ அனர்த்தம் கொழும்பு நகரை அண்டிய எண்ணெய்க் குதங்களில் ஏற்பட்டிருந்தது.

எனவே இத் தீ அனர்த்தம் நாட்டின் நிலைமை ஒரு கொந்தளிப்பான நிலையில் இருப்பதை எடுத்துணர்த்திய தருணத்திலேயே ஜனாதிபதி சந்திரிகா பயணஞ் செய்த எமிரேட்ஸ் விமான சேவையின் போயிங் விமானமும் நியுயோர்க் நோக்கிப் பறந்து கொண்டிருந்தது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் 50 வருடங்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டதாகும்.

இதன் ஆரம்பம் உலகில் நாடுகளுக்கிடையே ஒற்றுமையை வளர்ப்பதையும் கொடிய போர் அனர்த்தங்களைத் தவிர்ப்பதையுமே பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தது.

இருந்தபோதிலும் காலப்போக்கில் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பங்களிப்பு என்பது பல்வேறு மனிதாபிமான நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டதாகவும் விளங்கியிருக்கக் காணப்படுகின்றது.

இரண்டாம் உலக யுத்தக் கொடுமையை சர்வதேச சமூகம் நன்கறியும். ஐரோப்பிய நாடுகள் பலவும் நாஸி ஜெர்மனியின் கெடுபிடி காரணமாக சின்னாபின்னப்பட்டு உருக்குலைந்து போனதை உலக சமூகம் நன்கறியும்.

இது தவிர தூர கிழக்கில் இந்த யுத்தத்தின் உச்சக் கட்டத்தை எடுத்தியம்புவதுபோல ஒன்றன்பின் ஒன்றாக இரு அணுகுண்டுகள் ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களைப் பதம் பார்த்தன.

இந்த அணுகுண்டு அனர்த்தமே மானிட குலத்தை மருட்டிவிட்டதுடன், யுத்தக் கொடுமையை அகிலம் முழுவதற்கும் நன்கு உணர்த்திவிட்டிருந்தது.

இரண்டாம் உலக யுத்தம் ஏற்படுத்திய இத்தகைய மோசமான, மானிட மேம் பாட்டுக்கு ஒவ்வாத தன்மைகளே உலக ஐக்கியத்தின் அவசியத்தை உணரச் செய் ததுடன், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் ஆரம்பத்திற்கும் அடித்தளமிட்டிருந்தது.

இரண்டாம் உலக யுத்தமென்றதும் நேச நாடுகள், நாஸி ஜெர்மனிக்கும் அதன் கூட்டு நாடுகளுக்கும் எதிராக நிகழ்த்திய போரைப் பற்றியே பெரிதும் பேசப்படுவதுண்டு.

ஆனால் அந்த யுத்த அனர்த்தத்தில் அசுரத்தனமான முறையில் ஓர் இன அழிப்பு நடவடிக்கையும் இழையோடியிருந்தது. ஜெர்மன் சர்வாதிகாரி ஹிட்லர் யூத இனத்தவர்களுக்கெதிராகக் கையாண்ட கொடுமையே அதுவாகும்.

துகிலுரிந்தும், நச்சுவாயுக் கூடங்களில் போடப்பட்டும், கால்நடைகள்போலக் கண்மூடித்தனமாகச் சுடப்பட்டும், அடிமைகள்போல நடத்தப்பட்டும் அன்று யூத இனம் அழிக்கப்பட்டிருந்தது.

இரு வருடங்களுக்கு முன்னர் ஹொலிவூட்டில் சுமார் எட்டு ஒஸ்கர் (Oscar) விருதுகளைப் பெற்ற ஷின்ட்லேர்ஸ் லிஸ்ட் (Schindler's list) என்ற திரைப்படம் ஜெர்மனியில் யூதர் இனத்தவர்களுக்கெதிராக மேற்கொள்ளப் பட்ட சித்திரவதைகளையும், கொடுமை களையும் புலப்படுத்தியிருந்தது.

பிரபல ஆங்கில திரைப்பட இயக்குநரான ஸ்டீவன் ஸ்பீல்ட்பேர்க் இத் திரைப்படத்தைத் தயாரித்திருந்தார்.

எனவே நியுயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம், மாபெரும் யுத்தங்கள் உலகளாவிய ரீதியில் இடம்பெறுவதைக் கடந்த 50 வருட காலத்தில் தடுத்து நிறுத்தியதையிட்டு பெருமை கொள்ள முடியும்.

இருந்தபோதிலும் சர்வதேச ரீதியாக இன்றைய உலகில் அமைதியையும், ஆரோக்கியமான பொருளாதார அபிவிருத்தியையும் ஏற்படுத்துவதில் ஐ.நா.ஸ்தாபனம் எவ்வளவு தூரம்

பெருமளவிலான யுத்தத்தில் குதிப்பதை தடுத்து நிறுத்துவதில் ஐ.நா.வின் பங்களிப்புக் குறிப்பிடத்தக்கதாகவே இருந்து வந்தது.

ஆயினும் இன்றைய உலக அரசியல் முற்றிலும் புதிய கோணத்தில் செல்வதையே காண முடிகின்றது.

கிழக்கு, மேற்கு என்றிருந்த 'பனிப்போர்' கெடுபிடிகள் உறைந்து போயுள்ளது.

வார்ஸோ அமைப்பில் ஒன்று

பிரிந்து சென்றுள்ளன. கூடவே சோவியத்யூனியனில் இடம்பெற்ற செச்னியா இன்று தனது தனித்துவத்திற்காக அண்மைக்காலங்களில் ஒரு பெரும் யுத்தத்தையே நடத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இது தவிர யூகோஸ்லாவியா என்ற ஒரே தேசமாக இருந்த நாடுகூட தற்போது பிளவுபட்டுள்ளது. அங்கே பொஸ்னியா, சேர்பியா, குரோஷியா ஆகிய பிரதேசங்கள் தமது சுய நிர்ணயத்தை வலியுறுத்தி அண்மைக் காலங்களில் இரத்த வெறிபிடித்த போராட்டத்தையே நடத்திவரக் காணப்படுகின்றன.

எனவே இன்று உலகில் நாடுகளுக் கிடையிலும், வல்லரசுகளுக்கிடையிலும் யுத்தங்கள், பூசல்கள் இடம்பெறுவது பெரிதும் குறைந்துள்ளது.

ஆயினும் பெரு வல்லரசுகளாக இருந்த நாடுகள் குலைந்து போயும், அமைதியாக இருந்த நாடுகளில் குத்து வெட்டுகள் அதிகரித்து பிரிவினைக் கோஷங்கள் தோன்றியுமுள்ளன.

இலங்கையில் பிரிவினைவாத சூழ்நிலைகளால் அல்லல் பட்டுப்போயிருக்கின்றது. இதனால் கடந்த ஒரு தசாப்த காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் என்பது இலங்கையின் அனைத்துத் துறையையும் முடக்கியிருக்கின்றது.

முக்கிய அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இது தவிர இந்த உள்நாட்டு யுத்தம் 50 ஆயிரத்திற்கும் மேலான மக்களைக் கொன்றுள்ளது. பல கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான சொத்துக்களை நாசமாக்கி விட்டுள்ளது.

கடந்த 17 வருட காலத்தில் இலங்கையில் இருந்தது வேறொரு அரசு: ஆனால்

சமாதானத்தை ஏற்படுத்தும் உயரிய பணியையே சந்திரிகா அரசிடமிருந்து நாட்டு மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

ஐ.நா.வின் பொன்விழா கொண்டாட்டங்களுக்காக உலகத் தலைவர்கள் கூடியிருந்தபோது, நியுயோர்க் ஐ.நா.சபைக் கட்டிடத்திற்கு முன்பாக இன்று பிரச்னைகளை எதிர்நோக்கும் நாடுகளைச் சேர்ந்த மக்கள் தமக்கு நீதியான தீர்வு வேண்டி ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருந்தனர்.

பொஸ்னியா, திபெத் மக்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தியோரில் இடம் பெற்றிருந்தனர்.

இலங்கைத் தமிழர்கள் அடங்கிய ஆர்ப் பாட்டக் குழு ஒன்றும் ஐ.நா. கட்டிடம் முன்பாகக் கூடியிருந்தது. பதாகைகளைத் தாங்கி கோஷங்களையும் இலங்கைத் தமிழர்கள் எழுப்பியிருந்தனர்.

உலகம் முழுவதும் இந்த ஆர்ப்பாட்டக்காரர்களின் கோஷங்கள் ஒளிபரப்பாகியிருந்தன. ஆனால் ஆர்ப் பாட்டக் காட்சி ஒளிபரப்பாகி இலங்கைத் தமிழர்கள் என்ற பதாகை தெரிந்ததுமே அக்காட்சி இலங்கைத் தொலைக்காட்சியில் இருட்டடிப்புச் செய்யப்பட்டது.

ஆனால் முழு உலகமும் இலங்கைத் தமிழர்களும் நீதி கேட்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டது.

நியுயோர்க்கில் பத்திரிகையாளர்களின் கவனத்தைப் பெற்ற உலகத் தலைவர்களில் ஜனாதிபதி சந்திரிகாவும் முக்கிய இடம் பெற்றிருந்தார்.

ஏனெனில் அவர் நாட்டைவிட்டுப் புறப்பட்டு நியுயோர்க்கிற்கு பறந்து

## எண்ணெய்க் குதங்களில் தீ அணைந்தது

வெற்றி கண்டுள்ளது என்பதே கேள்விக்குறியாக இருக்கின்றது.

சர்வதேச ரீதியாக அமைதிக் குலைவுக்கும், பொருளாதார ரீதியான முடங்கல் நிலைமைக்கும் இன்று பல்வேறு காரணிகள் உடந்தையாக இருக்கின்றன.

இரண்டாம் உலக யுத்தத்தையடுத்து நேட்டோ, வார்ஸோ (Nato & Warsaw) உடன்படிக்கை நாடுகள் என்று அமெரிக்க மற்றும் மேற்கத்தேய நாடுகள் ஓர் அணியிலும் அன்றைய சோவியத் யூனியன், மற்றும் கிழக்கு ஜெர்மனி, போலந்து, செக்கோஸ்லாவாக்கியா நாடுகள் ஓர் அணியிலுமாகத் திரண்டு இருந்தன.



கொண்டிருந்தபோது கொழும்பு மாநகரமே தீப்பிழம்பாகிவிட்டது போன்ற காட்சி உலகளாவிய ரீதியில் தொலைக்காட்சி மூலமாக ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.

கொலன்னாவ, ஒருகொடவத்தை எண் ணெய்க் குதங்களில் மூண்ட தீப் பிழம்புக் காட்சியே அப்போது நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதி சந்திரிகா நியுயோர்க் புறப்படும்போது எண்ணெய்க் குதங்களில் மூண்ட தீ, அவர் அங்கிருக்கும் போதே பெரும் சிரமங்களுக்கு மத்தியில் அணைக்கப்பட்டது.

ஆனால் அத் தீயைவிடக் கொடுமையானதும், கொடூரமானதுமாக இலங்கையில் மூண்டுள்ள இனவாதத் தீ விளங்குகின்றது.

எனவே ஐ.நா.விலிருந்தும் நாடு திரும்பி

## ஜனாதிபதியின் நடவடிக்கை இனவாதத் தீயை அணைப்பதாக இருக்க வேண்டும்

இந்த இரு அணிகளுக்குமிடையிலான ஆயுதப் போட்டிகள், அரசியல் கெடுபிடிகள் என்பன பனிப்போர் என்ற நிலையில் (Cold war) அவ்வப்போது சூடுபிடித்திருந்தன. இருந்தபோதிலும் இந்த இரு சாராரும்

சேர்ந்திருந்த நாடுகள் பலவும் தற்போது ஒவ்வொன்றாகப் பிரிந்து சென்றுள்ளன.

சோவியத்யூனியன் என்ற அமைப்பும் இன்று நிலை தளர்ந்துள்ளது. அந்த அமைப்பில் அங்கம் பெற்ற பிராந்தியங்களும் இன்று தனித்தனியாய்ப்

தற்போது அதிகாரத்திலிருப்பது ஜனாதிபதி சந்திரிகாவின் அரசு.

எனவே யுத்தம் தோற்றம் பெற்று அது வளர்ச்சி பெற்ற காலத்தில் பதவியிலிருந்த அரசின் பங்களிப்பைவிட யுத்தத்தை நிறுத்தி ஒரு நிரந்தர

ஜனாதிபதி சந்திரிகா மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இனவாதத் தீயை முற்றாக அணைத்து வடக்கு-கிழக்கின் கொடிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாகவும் இருக்க வேண்டியது இன்றிய மையாததாகின்றது.

---

லங்கா கார்டியன் சஞ்சிகையில் அனுருத்தேஷ்பான்டே எழுதிய கட்டுரையிலிருந்து ஒரு பகுதி:

## குழம்பிய குட்டையில் அரசியல் கப்பல் அரசுக்கு முன்னுள்ள தெரிவுகள்

ஆயுதங்களின் இறக்குமதியும் வெளி நாட்டுத் தலையீடுகளும் கொழும்பை இராணுவத் தீர்வு நோக்கியே நகர்த்தும். இதனால் சிறிலங்காவின் அரசியல் தலைமை இருபுறத்தில் நெருக்குதலுக்கு இலக்காகும். அரசியலில் விரக்தியும் இராணுவத்தில் பதட்டமும் விடுதலைப் புலிகளுக்கு உதவி, உள்நாட்டில் உறுதியற்ற நிலையை தோற்று விக்கலாம். இவை அனைத்துக்கும் முகம் கொடுக்ககூடிய நிலையில் திருமதி சந்திரிகா இல்லை. துரதிஷ்ட வசமாக சிறிலங்கா அரசுக்கு முன்பாக சில தெரிவுகளே இருக்கின்றன.இவற்றிற்கு மத்தியிலும் சிறிலங்காவில் அமைதி தோன்ற முடியும்.

இதற்கு முதலில்,விடுதலைப் புலிகளுக்கு உறுதியளிக்கப்பட்ட சுயாட்சித்திட்டம் பற்றி அரசு பரிசீலிக்க வேண்டும். தமிழர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரேதசங்கள் பற்றி தெளிவான புதியதொரு கொள்கை வகுக்கப்பட்டு வெளியிடப்பட வேண்டும். இரண்டாவதாக, விடுதலைப்புலிகளை தனிமைப்படுத்த இராஜதந்திர முயற்சிகளை சிறிலங்கா அரசு மேற்கொள்ள வேண்டும். மூன்றாவதாக, கடற்படை தனது ரோந்து நடவடிக்கைகளை தீவிரமாக்கி விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வந்து சேர்வதை தடுக்க வேண்டும். சிலர் விடுதலைப் புலிகளின் விருப்பிற்கு இணங்கி கொழும்பு இசைந்து கொடுக்க வேண்டும் எனவும் கூறக்கூடும்.

இவை அனைத்துக்கும் மேலாக போரல்ல சமாதானமே சிறிலங்காவைக் காப்பாற்றும். இராணுவத் தீர்வை நோக்கிய போக்கு சனநாயக சடைமுறைகளைப் பலவீனப்படுத்தும் என்பதுடன் சமூக அமைப்பிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

போரில் யாழ்ப்பாணத்தை இழப்பது கூட நாட்டின் ஏனைய பகுதிகளில் அமை தியை நிலைாட்ட உதவ முடியும். இது எப்படி அமையும் என்பது எனக்கு தெரியாது இந்தக் குழம்பிய குட்டையில் அரசியல் கப்பலை நகர்த்தும் ஆற்றல் கொழும்பின் தலைமைத்துவத்திற்க்கு உண்டா என்பதை காலம் தான் தீர்மானிக்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# மனித வெடிகுண்டு 8

# கடத்தல் நாடகம்



நெதர்லாந்திலுள்ள ஃபிரான்ஸ் தூதரகம் முன்பாக காத்திருந்த கார்லோஸ் தனது அதிரடிப் படையினர் குறிப்பிட்ட நேரத்தில் வந்து சேராமையால் கோபமடைந்தார்.

மாலை 4.30 மணிவரை காத்திருந்துவிட்டு அவ்விடத்தைவிட்டு விலகினார்.

கார்லோஸ் சற்றுத் தூரம் சென்றபோதுதான் தூதரகப் பக்கமாக வேட்டுச் சத்தங்களும், கைக்குண்டுகள் வெடிக்கும் சத்தங்களும் கேட்க ஆரம்பித்தன.

♥♥

மாலை 4.40 மணி. அதிரடிப் படைக் குழுவைச் சேர்ந்த மூவரும் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்துக் கொண்டு தூதரகத்திற்குள் புகுந்தனர்.

கைக்குண்டு ஒன்றை தூதரக வளாகத்திற்குள் வீசியெறிந்தனர்.

தூதரக ஊழியர்கள் திடீர் அதிர்ச்சியில் செய்வதறியாது திகைத்துப்போய், பின்னர் தூதரக கட்டிடத்திற்குள் ஓடத் தொடங்கினார்கள்.

துப்பாக்கி வேட்டுக்களை சரமாரியாகப் பொழிந்த போது தூதரக ஊழியரான பெண் ஒருவர் காயமடைந்தார்.

தூதரகத்தின் உள்ளே மாநாட்டு மண்டபத்தில் தூதர் செனார்ட் ஃபிரான்ஸ் நாட்டு எண்ணை நிறுவனத்தின் பிரதிநிதிகள் 10 பேருடன் பேசிக் கொண்டிருந்தார்.

ஏ.சி செய்யப்பட்ட இறுக்கமான மண்டபம் என்பதால் வெளியே கேட்ட சத்தங்கள் உள்ளே கேட்கவில்லை.

பிரதிநிதி ஒருவர் நீட்டிய ஃபைலை தூதர் செனார்ட் புரட்டத் தொடங்கிய போது மண்டப வாயில் கதவு திறந்தது.

நீட்டிய துப்பாக்கியோடு அதிரடிப் படையைச் சேர்ந்த ஒருவன் உள்ளே புகுந்தான்.

"கனவான்களே! வணக்கம். தயவு செய்து ஒத்துழையுங்கள். இல்லாவிட்டால் தேவையில்லாமல் செத்துப் போவீர்கள். தூதர் செனார்ட்! நாங்கள் தேடிவந்தது உங்களைத்தான். ஆனால், உங்களோடு சேர்த்து 11 கனவான்கள் இருக்கிறீர்கள். இவர்களெல்லாம் யார்? அறிமுகப் படுத்தினால் நல்லது."

பத்துப்பேரும் எண்ணை நிறுவனப் பிரதிநிதிகள். ஃபிரான்ஸ் நாட்டவர்கள் என்று தூதர் அறிமுகம் செய்துவைத்தார்.

பிரதிநிதிகளுக்கு அந்தக் குளிரிலும் பயங்கரமாக வியர்க்கத் தொடங்கியது. தூதர் உட்பட 11 பேரும் தங்கள் கைகளைத் தலைக்கு மேலே தூக்கிக் கொண்டிருந்தார்கள்.

துப்பாக்கியோடு உள்ளே நுழைந்த மற்றொரு அதிரடிப்படை உறுப்பினர் 11 பேரையும் உடல் தடவி சோதனையிட்டான்.

"இனிக் கைகளை கீழே இறக்கலாம் நீங்கள் நிராயுதபாணிகள் என்பதை ஒப்புக் கொள்கிறோம். ஒருவருக்கு பதில் 11 பேர் மாட்டியிருக்கிறீர்கள். ரொம்பச் சந்தோசம். எங்களுக்குத் தேவை உங்கள் உயிர்களல்ல. ஆகவே, அநாவசியமாகக் கொல்ல மாட்டோம். தூதரகம் இப்போது எமது கட்டுப்பாட்டில் இருக்கிறது. நீங்கள் தூங்குவதற்குக் கூட எமது அனுமதி தேவைப்படும்."

◆◆

தூதரகக் கட்டிடக் கதவுகள் யாவும் மூடப்பட்டன. தமக்குத் தேவையான 11 பேரையும் வைத்துக்கொண்டு, தூதரக ஊழியர்கள் அனைவரையும் வெளியே அனுப்பினார்கள் அதிரடிப்படையினர்.

காயமடைந்த பெண் ஊழியர் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப் படுவதற்காக, தூதரக ஊழியர்களால் வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தார்.

தூதரக ஊழியரான பெண் காரிலிருந்து இரத்தம் கொட்டியபடி வாகனத்தில் ஏற்றப் படும் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தான் கார்லோஸ்.

தாமதித்து வந்தாலும், திட்டமிட்டபடி உள்ளே புகுந்துவிட்டனர் என்று தெரிந்து கொண்டு, அவ்விடத்திலிருந்து நழுவி, அருகிலுள்ள தொலைபேசிக் கூண்டுக்குள் புகுந்தான்.

தூதரக தொலைபேசி இலக்கங்கள் சிலவற்றுக்கு டயல் செய்து பார்த்தான். தொலைபேசித் தொடர்புகள் துண்டிக்கப் பட்டிருந்தன.

முன்ஜாக்கிரதையோடுதான் செயற்படுகிறார்கள் என்று மனதுக்குள் பாராட்டிவிட்டு கார்லோஸ் தனது இருப்பிடத்திற்கு திரும்பினான்.

தூதரகத்திலிருந்து ஃபிரான்ஸ் அரசோடு தொடர்பு கொள்ளுமாறு அதிரடிக்குழுவினர் உத்தரவிட்டனர்.

'ஹொட்லைன்' என்று அழைக்கப்படும் பிரத்தியேக தொலைபேசி மூலம் தூதர் செனார்ட் ஃபிரான்ஸ் அரசோடு தொடர்பு கொண்டார்.

"நான் உட்பட ஃபிரான்ஸ் நாட்டுப் பிரஜைகள் பத்துப்பேர் பணயக் கைதிகளாகியிருக்கிறோம். எங்கள் உயிர்களுக்கு செலுத்த வேண்டிய விலையை கடத்தல்காரர்கள் என்னிடம் தெரிவித்திருக்கிறார்கள்."

மறுபுறத்திலிருந்து ஃபிரான்ஸ் அரசின் பொறுப்பான அதிகாரி டென்ஷனாகிப்போய், "என்ன விலை?" என்றார்.

தூதர் நிபந்தனைகளை ஒப்புவித்தார்.

1.யப்பான் செம்படைத் தலைவர் யமடாவை விடுதலை செய்யவேண்டும். அவரை இங்கே அழைத்துவர வேண்டும்.

2.ஒரு போயிங் விமானம் இரண்டு விமான ஓட்டிகளுடன் மட்டும் அம்ஸ்டர்டாமிலுள்ள ஸ்கிஃபோல் விமான நிலையத்திற்கு அனுப்பப்பட வேண்டும். எரிபொருள் போதுமானவரை நிரப்பப்பட்டிருப்பது முக்கியம்.

3. பத்து இலட்சம் அமெரிக்க டொலர்கள் தரப்பட வேண்டும்.

"பயங்கரமான நிபந்தனைகள். மேலே பேசிவிட்டுச் சொல்கிறேன். உங்களுக்கு சேதங்கள் எதுவுமில்லையே"

"இதுவரை இல்லை"

"நம்புங்கள் ஃபிரான்ஸ் உங்களை கைவிடாது!"

"தாங்யூ"

தொடர்பு முடிந்தது. அதிரடிப்படையைச் சேர்ந்த யப்பானியன் தூதரிடம் கேட்டான்: "என்ன சொல்கிறது மேலிடம். நிபந்தனைகள் அநியாயம், நீங்கள் சாகலாம் என்கிறார்களா?"

தூதர் இப்போது பதட்டமில்லாமல் நிலமைக்கு ஏற்ப நடந்துக்கொள்ளும் பக்குவ நிலைக்கு வந்துவிட்டார் "உடனே முடிவு சொல்ல இது என்ன சில்லறை வியாபாரமா நண்பர்களே? யோசித்துத்தானே சொல்லுவார்கள். தாகமாக இருக்கிறது, பானம் ஏதாவது அருந்த அனுமதிப்பீர்கள் அல்லவா?"

"சேர்ந்தே அருந்தலாம். உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?"

"ஏன் கேட்கிறீர்கள்?"

"நீங்கள் செத்துப்போனால் அவர்கள் பாவம்தானே!" யப்பானியன் சொல்ல, தூதர் வறட்சியாய் புன்னகைத்தார். ஏனைய பத்துப் பேரின் முகங்களிலும் ஈயாடவில்லை.

◆◆

கடத்தல் நாடகம் நடந்து கொண்டிருப்பது தனது நாட்டில் என்பதால் நெதர்லாந்து அரசாங்கம் தலையிட்டது.

ஃபிரான்ஸ் அரசு பிடிவாதம் காட்டுவதாலோ, அல்லது தனது கொமாண்டோக்களை அனுப்பி கடத்தல்காரர்களை மடக்க நினைப்பதோ நெதர்லாந்தில் இரத்த ஆறு ஓட வைத்துவிடும் என்று நினைத்தது நெதர்லாந்து அரசாங்கம்.

இரவு பத்து மணிக்கு அதிரடிக் குழுவினர் நெதர்லாந்து அரச அதிகாரிகளுடனும், ஃபிரான்ஸ் அரச அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டனர்.

"காலை மூன்று மணிக்கு முன்னர் எமது நிபந்தனைகளை சட்டுப்புட்டென்று நிறைவேற்றிவிட வேண்டும். இல்லாவிட்டால், கைதிகளை பட்டுபட்டென்று சுட்டு விடுவோம்."

நிபந்தனையைச் சொல்லிவிட்டு ஹொட்லைன் போனை வைத்துவிட்டு, தூதரைப் பார்த்து சிரிப்பொன்றை உதிர்த்த யப்பானியன், தனது கைத்துப்பாக்கியை நீட்டிச் சுட்டான்.

இரண்டு சூடு. இரண்டும் குறிதவறாமல் தூதரின் இரு கால்களுக்கிடையே பாய்ந்து சோபாவில் துளைப்போட்டன.

"சும்மா ஒரு விளையாட்டுக்காக. எமக்கு பொழுது போக வேண்டாமா, அதுதான்!" சிரித்தான், சேர்ந்து சிரித்தது அதிரடிக்குழு.

யமடாவையும், யமடாவை விடுவிப்பதற்கான ஆவணங்களையும், 24 ஃபிரான்ஸ் கொமாண்டோ வீரர்களையும் சுமந்தபடி ஃபிரான்ஸ் விமானம் 'மிஸ்ட்றி 20' ஸ்கிஃபோல் விமான நிலையத்தில் தரையிறங்கியது.

விமானத்திலிருந்த யமடாவை தூதரகத்தில் இருந்த கடத்தல்காரர்களுடன் பேசுமாறு கூறினார்கள் ஃபிரான்ஸ் அதிகாரிகள்.

விமானத்திலிருந்தபடியே தூதரகத்திற்கு போனில் தொடர்பு கொண்டார் யமடா.

"விமானத்திலிருந்து என்னை கீழே இறங்க அனுமதிக்க வேண்டுமானால், தூதர் உட்பட பத்துப்பேரையும், இங்கு கொண்டு வந்து நீங்கள் ஒப்படைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். என்ன பதிலை நான் சொல்ல வேண்டும்?"

"போனை அந்த அதிகாரியிடம் கொடுங்கள்! கொடுக்கப்பட்டது. "ஹலோ அதிகாரி என்னப்பா மிரட்டலா விடுக்கிறாய்? தூதரை ஒப்படைப்பதெல்லாம் இருக்கட்டும். அவருக்கு எந்த இடத்தில் சுட வேண்டும் சொல்லு? இல்லாவிட்டால் நாங்கள் சொன்ன படி செய்!"

ஃபிரான்ஸ் அதிகாரிகள் உடன்பட மறுத்தனர் விமானத்திலிருந்த 24 கொமாண்டோக்களை வைத்து தூதரகத்துக்குள் புகுந்து தூள் கிளப்பமுடியுமா என்று ஆராயத் தொடங்கினார்கள்.

அப்படி ஏதாவது தமது நாட்டுக்குள் நடந்தால் ஃபிரான்சுடன் ராஜதந்திர உறவுகளை துண்டிக்கவேண்டி வரும் என்று அறிவித்தது நெதர்லாந்து அரசு.

வெள்ளிக்கிழமை ஆரம்பித்த கடத்தல் நாடகம் சனிக்கிழமை மாலையும் இழுபறிப் பட்டுக்கொண்டிருந்தது.

□□

ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் செல்வந்த வர்த்தகர் போல தங்கியிருந்த கார்லோஸ், கடத்தல் நாடகத்தையொட்டிய சகல நிகழ்ச்சிகளையும் அறிந்து கொண்டிருந்தான்.

வெள்ளிக்கிழமை மாலைமுதல், சனிக்கிழமை இரவு வரை தன்னோடு ஒரு பெண்ணை தங்கவைத்துக் கொண்டான்.

சனிக்கிழமை மாலை அவளோடு சென்று கடலில் குளித்துக் கொண்டே தனது அடுத்த திட்டத்தை யோசித்தான்.

அவளோடு ஹோட்டலுக்கு திரும்பும் போது மனதில் திட்டம் பூர்த்தியாகியிருந்தது.

"அழகாகத்தானே இருக்கிறாய் இதெல்லாம் எதற்கு?" என்று அவளை துணிகளகற்றி சுத்தமாக்கினான். இரவு சுகமாய் கழிந்தது.

காலையில் எழுந்ததும், அவளிடம் அமெரிக்க டொலர்களை திணித்துவிட்டு, விமான நிலையம் சென்று, பாரிசில் போய் இறங்கினான்.

அன்று ஞாயிற்றுக் கிழமை. நேராக மாஸ்மெலா வீட்டுக்குச் சென்று, அவள் கொடுத்த முத்தங்களைப் பெற்றுக் கொண்டு, அவளுக்குத் தெரியாமல் கட்டிலடியில் இருந்த கைக்குண்டுகள் இரண்டில் ஒன்றை மட்டும் எடுத்துக் கொண்டு கார்லோஸ் வேளியேறினான்.

ஃபிரான்ஸ் நாட்டுக்குப் பாடம் புகட்டினால்தான் கடத்தல் நாடகம் வெற்றியளிக்கும். பாடம் புகட்ட கார்லோஸ் தெரிந்தெடுத்த இலக்கு பல பிணங்களைக் குவிக்கக் காத்திருந்தது.

(தொடர்ந்து வரும்)

# ஹலோ டாக்டர்



"வணக்கம் டாக்டர். மழை வேறு அடிக்கடி தொணதொணக்கிறது. கருப்பு, வெள்ளையென்று பல கலர்களில் பெய்து தொலைக்கிறது. மழைக்காலம் வந்தால் கூடவே சில நோய்களும் வந்துவிடும். அதிலும் ஆஸ்துமா நோய் உள்ளவர்கள் பாடு கஷ்டம்தான். ஆஸ்து மாவைக் குணப்படுத்த முடியாதா டாக்டர்?

"பெரு மழையாகப் பொழிகிறீர்களே. ஆஸ்துமா நோய் பொதுவாக இரண்டு வகைப்படும். குடும்பத்தில் தாய்க்கோ, தந்தைக்கோ இருந்தால், குழந்தைகளுக்கும், பேரன் பேத்திகளுக்கும் வம்சா வழியாக வருவது. இரண்டாவது ஒவ்வாமை காரணமாக வருவது. சிலரது உடற்கூறுகளுக்கும் ஒவ்வாத உணவு வகைகளைச் சாப்பிடுவதால் வரும். உதாரணமாக கருவாடு,முட்டை, கத்தரிக்காய், தக்காளி, சிறு பருப்புக்கள், குளிர்பானங்கள், போன்றவற்றை உட்கொள்வதால் ஏற்படுகின்றன. தூசு, புகை,தலைக்கு அடிக்கடி குளித்தால், குளிரூட்டப்பட்ட அறைகளில் இருப்பது, ஒத்துக்கொள்ளாத மாத்திரிகைகளை சாப்பிடுவது, சிலவகை இருதய நோய் மாத்திரைகள் மூலமாகவும் இரண்டாவது வகை ஆஸ்துமா வரும்"

## இரத்த அழுத்தமா உங்களுக்கு?

"ஆஸ்துமா நோயை எப்படித் தடுக்க முடியும் டாக்டர்?"

நோயின் தொடக்க நிலையில் ஈசினோபீலியா உள்ளதா என்று பரிசோதித்து அறிந்து உடனே முழுவைத்தியம் செய்து கொள்ள வேண்டும். உடலுக்கு ஒத்துக் கொள்ளாத உணவுகளை உடனடியாகத் தவிர்க்க வேண்டும். மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் மருந்துகளை உட்கொள்ள கூடாது. மன உளைச்சல், மனக்குழப்பம் இன்றி அமைதியான சூழலில் இருக்கவேண்டும்.ஒவ்வாமை ஆராய்ச்சி மிகச் சிறந்த முறையில் வளர்ந்துள்ளது. எந்த உணவு ஒத்துக் கொள்ளவில்லை என்று பரிசோதித்து அறிந்து அதற்கு எதிர்ப்புச் சக்தியை உருவாக்கும் மருந்தினை சிறு-சிறு அளவில் வாரம் ஒரு முறை உடலில் செலுத்தி எந்த அலர்ஜியும் தாக்காமல் தடுக்கலாம்.

"சரி, டாக்டர்,இது இரத்த அழுத்தம் சம்பந்தப்பட்ட கேள்வி. உயர் இரத்த அழுத்தம் ஏன் ஏற்படுகிறது?"

"அதிக உடல் பருமன் உள்ளவர்களுக்கும்; உணவில் உப்பு அதிகமாகச் சாப்பிடுபவர்களுக்கும் அநேகமாக ஏற்படக் கூடும். குடும்பத்தில் வேறு ஒருவருக்கு உயர் இரத்த அழுத்த நோய் இருந்தாலும் வம்சாவளியாக வர வாய்ப்புண்டு. நீரிழிவு நோய், சிறு நீரகப் பாதிப்புபோன்ற நோய் உள்ளவர்களுக்கும் உயர் இரத்த அழுத்தம் வரக்கூடும்."

"எப்படிக் கட்டுப்படுத்தலாம் டாக்டர்?"

"உடல் பருமன் உள்ளவர்கள் தினமும் சீரான உடற்பயிற்சி செய்துவரலாம் உதாரணமாக 30 முதல் 45 நிமிடம் வேகமாக நடப்பதும் நல்ல பயிற்சி. உப்பைக் குறைத்துக் கொழுப்புப் பதார்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். போதிய ஓய்வு,கோபத்தை தவிர்த்தல் போன்றவை மூலம் மாத்திரைகள் உட்கொள்ளாமலேயே இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தலாம்."

"கட்டுப்படுத்தாவிட்டால் என்ன நடக்கும் டாக்டர்?"

"சாதாரணமாக கேட்கிறீர்களே! இருதயம், மூளை,சிறுநீரகம் போன்றவை பாதிக்கப்பட்டு உயிருக்கே ஆபத்து நேரலாம்."

"நன்றி டாக்டர். மீண்டும் சந்திக்கலாம்"

# ஒரு நடிகையும் - ஒரு ஓவியரும்

அவருக்கு காந்தியோடும் பழக்கம் இருந்தது. இந்திரா காந்தியோடும் பழக்கம் இருந்தது. இந்திய அரசியல் தலைவர்களையெல்லாம். தத்ரூபமாக வரைந்து பாராட்டும் பெற்றிருக்கிறார். உலகப் புகழ் வாய்ந்த ஓவியர்களில் அவரும் ஒருவர். அவரது பெயர் எம்.எப்.உசேன்.

சில காலங்களுக்கு முன்பு வரை உசேன் திரைப்படங்களையே பார்ப்பது கிடையாது. இப்போது உசேன் மாறிவிட்டார் விழுந்து விழுந்து படம் பார்க்கிறார். ஒரே படத்தை பத்துத் தடவை திரும்பத்திரும்ப பார்க்கிறார்.அதிலோரு விசேஷம் யாதெனில்,ஒரு நடிகையின் படத்தை மட்டும்தான் உசேன் விரும்பிப் பார்க்கிறார்.

அந்த நடிகை மாதுரி டிக்ஷித். தற்செயலாக ஒருநாள் மாதுரியின் ஒரு புகைப் படத்தைப் பார்த்தாராம் உசேன். உடனே மூளையில் பொறி தட்டியதாம். இந்தியில் பாரம்பரியமே மாதுரியின் முகத்தில் இருப்பதைக் கண்டு கொண்டாராம்.

உடனே ஓடிப்போய் 'ஹம் ஆப்கே ஹெயின் கோன்' படத்தைப் பார்த்தார். அவ்வளவுதான் மாதுரியின் பக்தனாகி விட்டார்.




மாதுரி டிக்ஷித் இடையை அசைக்கும் விதம் கிழவரைக் கவர்ந்துவிட்டது. அப்படி நளினமாக இடை அசைவைக் காட்ட யாராலும் முடியாது. 'கதகளி' நடனத்தில் குறைவான அசைவுகளே இருக்கும். ஆனால் பெரிய விளைவுகளை ஏற்படுத்தும். அப்படித்தான் மாதுரியின் அசைவுகளும் என்று ஒரேயடியாகப் புகழுகிறார்.

மாதுரி டிக்ஷித்தின் ஓவியங்களை உசேன் தீட்டித் தள்ளிவிட, விசயமறிந்த மாதுரி அவரை நேரில் அழைத்து பேசியிருக்கிறார்.

போனஸாக அவரை அணைத்தபடியும் போஸ் கொடுத்தார். குளிர்ந்து போன கிழவரும், பிரபல ஓவியருமான உசேன் மாதுரி டிக்ஷித்திற்கு ரசிகர் மன்றமே உருவாக்கிவிட்டார்.

காமசூத்திரத்தில் வாத்சாயனர் சித்தரித்த பெண்களின் சாயல் மாதுரியிடம் இருப்பதை நேரில் ரசித்தேன் என்கிறார் கலாரசனை தெரிந்த ஓவியர்.

# மரணம் துரத்தும் மனிதன்

### ருஷ்டியின் கிழக்கும் மேற்கும்

சல்மான் ருஷ்டிக்கு மரண தண்டனை விதித்து 6 ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர் இன்னும் தலைமறைவு வாழ்க்கைதான் வாழ்கிறார். காவல்துறைப் பாதுகாப்புடன்தான் உயிர் தரிக்கிறார். அண்மையில் 'கிழக்கும் மேற்கும்' என்கிற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரைத் தொகுப்பு வெளியாகியிருக்கிறது. அதிலிருந்து சில துளிகள்.

### ரகசிய வாழ்வு

நான் எனக்கு வேண்டிய துணிமணிகளை



எப்படி வாங்குகிறேன். இன்ன தேதி இன்ன கடையில் இன்னது வாங்குகிறேன் என்று அறிவிப்பு செய்யப் போவதில்லை. யாருக்கும் எனது அடுத்த நிமிட நடவடிக்கை தெரியப் போவதில்லை. அப்படித் தெரிய வாய்ப்பிருந்தால் என் கதி என்னவாகும் என்பதை நீங்களே யூகித்துக் கொள்ளலாம்.

### அரசியல்வாதிகள்.

இவர்களோடு பேசுவதில் எனக்கு மகா எரிச்சல் ஏற்படுகிறது. இரண்டு ஆண்டுகள் இவர்களைச் சந்திப்பதில் கழிந்தாகிவிட்டது. இப்படியே போனால் என்னால் எழுத முடியாது. அப்படியே எழுத முடியாமல் போனால் என் மீது இருக்கும் தாக்குதல் வெற்றியடைந்துவிடும். எதாவது எழுதாமல் இருப்பதும் படுகொலை செய்யப்படுவதும் ஒன்றுதான்.

### எனது புதிய நாவல்

பெரும்பாலான கதை இந்தியாவில் நடக்கிறது. கொஞ்சம் ஸ்பெயின் தேசத்தில். 15-ம் நூற்றாண்டுக் கால பெயிண்டிங்கில் மூழ்கியிருக்கும் ஓர் ஓவியனின் கதை. இது வரலாற்றுப் பூர்வமான நாவல் இல்லை. அந்தக் கால ஸ்பெயின் தேசத்தில் யூதர்கள், கிறித்துவர்கள்,முஸ்லிம்கள் நேச உணர்வோடு மகிழ்ச்சிகரமாக வாழ்ந்தார்கள். என்கிறது வரலாறு. இது பொய் என்பதே எனது நாவல்.

### 15 வயது மகன்

உன் தந்தையின் தலைக்கு என்றைக்குமே ஆபத்து என்பதை அவனுக்குப் புரிய வைத்திருக்கிறேன். இந்த 15 வயதில் அவன் மிக நன்றாகவே புரிந்து கொள்கிறான். நான் அவனது தந்தை அல்லவா-ஆகவே இந்தப் பயங்கரம் அவனுக்கு மிக நன்றாக உறைக்கிறது. அவனுக்கு மத உணர்வு இல்லை என்பதுதான் மிகவும் மகிழ்ச்சி தருகிற விஷயம்.

கல்பனா.



படிப்பகம்

www.padippakam.com

# வானில் ஒரு கரணம்

கனடாவின் ஒன்ராறியோ மாநிலத்தில் விமானிகளது சாகசங்களைக் காண்பிக்க வென ஏரியொன்றின்மீது விமானங்கள் பறந்தன. பார்வையாளர்கள் ஆயிரக்கணக் கில் குழுமியிருந்தனர்.

சாகசத்தில் முந்திவிடத் துடித்த- 'நீர்மூழ்கியைத் தகர்க்கும்' விசேட சண்டை விமானமொன்றின் ஓட்டி விரைந்து குட்டிக் கரணமடித்தார். விமானம் வெடித்து ஏரிக்குள் சென்றுவிட்டது.

பார்வையாளர்களுக்கு ஒரே அதிர்ச்சி. விபத்தின் காரணம் தெரியவில்லை. ஏரிக் குள்ளிருந்து மீட்கப்பட்ட விமானச் சிதைவை கப்டன் லில்லிஃபெயர் பார்வையிடுகின்றார்.

மொத்தம் ஏழு விமானப்படையினர் கொல்லப்பட்டனர். நால்வரின் சடலங்கள் மீட்கப்பட்டதாம். அங்கும் விபத்துக்கான காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை என்ப தால் நமது நாடும் சற்று திருப்திப்பட்டுக் கொள்ளலாம்.

என்றாலும், அங்கு விமானங்கள் விளையாட்டில் மட்டும்தான் ஈடுபடுகின்றன.

## தகவல் பெட்டி





# பகையில்லை-பரிவுண்டு


தாய் இல்லாத இரண்டு பூனைக் குட்டிகள். (அகதிகளாவதும் அநாதைகளா வதும் மனிதர்கள் மட்டுமில்லை) பூனைக் குட்டிகளது அவலம் கண்ட நாய்க்கு பொறுக்கவில்லை. பூனையைக் கண்டால் நாய் பாயும் என்பதுதான் வழக்கம். ஆனால், இந்த நாயார் பாயவில்லை; பரிவோடு இரண்டு பூனைக் குட்டிகளையும் பராமரித்து வருகிறார். அவுஸ்திரேலிய மிருகக்காட்சிச் சாலையொன்றில் 'கிளிக்' செய்யப்பட்ட அதிசய ஒற்றுமைக் காட்சி. மனமுண்டானால் இடமுண்டு. பகைக்கு முடிவும் உண்டு.

# யார் பெரிய ஆள்?

அமெரிக்க ஜனாதிபதிப் பதவி உயர்ந்ததுதான். உலக நாடுகளது தலைவர்களே அண்ணாந்து பார்க்கும் உயர்ந்த பதவியல்லவா? அந்த உயர்ந்த பதவியில் இருக்கும் கிளின்டனையே அண்ணாந்து பார்க்க வைத்துவிட்டார் மிஸ்டர் சக்குமில். உயரம் அப்படி! சக்குமிலோடு கிளின்டனை ஒப்பிட்டுப் பார்த்துச் சொல்லுங்கள். யார் பெரிய ஆள்? இந்த உயரத்தை வைத்து மஜிக் வித்தை காட்டி பிளைத்துக் கொள்கிறார் சக்குமில்.



# பாதையில் ஒரு முறிவு



தென்கொரிய நாட்டில் உள்ள சங்சூ பாலமே படத்தில் உடைந்து நீருக்குள் அமிழ்ந்து காணப்படுகின்றது. வாகன நெரிசல் மிகுந்தவேளை பாலம் தொபுக்கடீர் என்று நொருங்கி ஆற்று நீரில் அமிழ்ந்தது. இந்த விபத்தில் 48 பேர் கொல்லப்பட்டும், 23 பேர் படுகாய மடைந்தும் போயினர்.

மீட்புப் படையினர் விரைந்து ஹெலிகொப்டர் மூலம் காயமடைந்தவர்களைக் காப்பாற்றுகின்ற காட்சி இது. முறிந்த பாலத்தின் மறுமுனையிலிருந்து 'கிளிக்' செய்யப்பட்டது.

# சறுக்குவதில் புதுமை

ஒரு சக்கரத்தின் உதவியுடன் தரை யில் சறுக்கிச் செல்வதுதான் ஸ்கேட்டிங் விளையாட்டு. நெதர்லாந் தில் ஆம்ஸ்டர் டாமில் பாப்ரா என்னும் பெண்மணிக்கு ஒரு புது யோசனை தோன்றியது. ஸ்கேட் டிங் பாதணியை உலோகங்களில் செய்யா மல் மரக்கட்டையில் செய்தால் என்ன? முயன்றார். முயன்றார். வெற்றியும் பெற் றார். உலோகக் காலணிக்குப் பதிலாக மரக்கட்டை காலணிக்கு கிராக்கி வந்து விட்டது. கைமேல் பலன். நல்ல வரு மானம். எவ்வளவு மகிழ்ச்சியாகப் போஸ் கொடுக்கிறார் பாருங்கள். காலணியின் விலை 125 அமெரிக்க டொலர்கள்.





படிப்பகம்

www.padippakam.com

# சி னி வி சி ட்

## தீபாவளி வெளியீடுகள்

முத்து (ரஜினி-மீனா)
குருதிப்புனல் (கமல்-கௌதமி-அர்ஜுன்)
சந்திரலேகா (விஜய்- வனிதா விஜயகுமார்)
ரகசியப் பொலீஸ் (சரத்குமார்-நக்மா)
நீலக்குயில் (பாண்டியராஜன்-ராஜஸ்ரீ)
மக்கள் ஆட்சி (மம்முட்டி-ரோஜா)
துறைமுகம் (அருண்பாண்டியன்-சோபனா)

இவற்றில் 'முத்து' முதலிடத்திலும், குருதிப்புனல் இரண்டாவது இடத்திலும் போய்க்கொண்டிருக்கின்றன.

## குள்ளமணி திருடினாரா?

நடிகர் குள்ளமணி பஸ் ஒன்றில் நடத்துநரின் பணத்தை திருடியதாக குற்றம்சாட்டப்பட்டிருக்கிறார். பொலிசில் புகாரும் கொடுக்கப்பட்டது. பாவம் என்று பொலிசார் விடுதலை செய்துவிட்டார்கள். "நான் பணத்தை திருடவில்லை. ஒரு பெண் பணத்தை திருடியதைப் பார்த்து சத்தம் போட்டேன். அவள் சட்டென்று பழியை என்மீது போட்டுவிட்டாள்!" என்கிறார் குள்ளமணி.

## சரத் விட்டுக்கொடுக்கவில்லை

தீபாவளி ரிலீஸாக வந்துள்ள 'ரகசியப் பொலீஸ்' படத்தில் சரத்குமார்-நக்மா சம்பந்தப்பட்ட காதல் காட்சிகளில் எந்தக் குளிரையும் விரட்டக்கூடிய சூடு. வில்லாதி வில்லனில் சத்தியராஜ் நக்மாவை படாதபாடு படுத்தியிருந்தார். இப்போது சரத்குமார் 'ரகசியப் பொலீஸ்'படத்தில் படுத்தியிருக்கிறார் பாடு! ஒரே நேரத்தில் தமிழ், இந்தி, தெலுங்கு என்று மூன்று மொழிகளிலும் படத்தை வெளியிட்டுள்ளார் சரத். செலவு கிட்டத்தட்ட 6 கோடியாம்.

## 125 படம் பி

விஜயகாந்த் நடித்துள்ள த
படம். 123,124 வது படங்களாக
படமும், அலெக்சான்டர் தி
வுள்ளன. 125 படம் 'உளவு
படமான 'கப்டன் பிரபாகர
போல 125வது படமும் பிரமாத
என்று திட்டமிட்டுள்ளார்
திரைப்படக் கல்லூரி மாண
செல்வன் இயக்க, இப்ராகிம்
தயாரிக்கும் படம் உளவுத்துறை

## முதலமைச்சர் மம்முட்

ஆகஸ்ட் மாதம் வருவத
இருந்த மக்களாட்சி இந்தா
அந்தா என்று தள்ளிப்போ
தீபாவளி வெளியீடாக வந்திரு
கிறது. மம்முட்டி- ரோஜா
ரஞ்சிதா ஜோடி. ரோஜாவி
காதலர் ஆர்.கே.செல்வமணி தா
இயக்குநர். காதலி என்று க
சனையே காட்டாமல் ரோஜாவை
கவர்ச்சியாக நடிக்க வைத்
படத்தை கட்டுத்தள்ளியிருக்கிறா
தமிழக அரசியலை சற்
பிரதிபலிக்கும் படம். மம்முட்
முதலமைச்சர். ராதாரவி மந்தி
ரோஜா கட்சியில் முக்கிய புள்ள
ரௌடியாக இருந்த மம்முட்டிக
கைக்கொடுத்து தூக்கி விடுபவ
அவர்தான். ஆனால் மம்முட்டிக
ரஞ்சிதா பிடித்துக் கொள்கிறா
என்று போகிறது கதை. பணத்த
தாராளமாக செலவிட்டு தயார
கியுள்ள படம்.





அர்ஜுன்-ரோஜா
படம் - ஆயுத பூஜை



## 'உறவுக்காரன்' கார்த்திக்

'சங்கீதாவின் காட்டில் செம மழை. சகல முன்னணிக் ஹீரோக்களுடனும் நடிக்க ஆரம்பித்துவிட்டார். 'சீதனம்'படத்தில் பிரபுவோடு நடித்துக்கொண்டிருக்கிறார். கார்த்திக் நடிக்கும் 'உறவுக்காரன்'படத்திலும் ஒப்பந்தமாகி இருக்கிறார்.

'உறவுக்காரன்'படத்தின் படப்பிடிப்புக்கள் 60 நாட்களில் நடத்திமுடிக்கப்படவுள்ளன.

கங்கை அமரன் எழுதி, சுவர்ணலதா பாடிய பாடல் ஒன்றும் பதிவு செய்யயப்பட்டுள்ளது. குனிஞ்சு,குனிஞ்சு குளிரவைக்கிற குருவம்மா. உன் மனசை புழுஞ்சு மணக்க வைக்கிற பருவம்மா.. என்று தொடர்கிறது பாடல். ஆனந்ராஜ்,செந்தில்,கவுண்டமணி,விசித்ரா ஆகியோரும் நடிக்கிறார்கள். இசை ,தேவா.

## குரு – சிஷ்யன்

'முத்து' படத்தின் மூலம் இயக்குநர் பாலச்சந்தரின் கவிதாலயா நிறுவனத்திற்கு கொழுத்தலாபம். கவிதாலயாவின் அடுத்த படத்தில் நடிக்கப் போகிறார் கமல். கமல் தனது நிறுவனத்திற்கு ஒரு படம் செய்து கொடுப்பதால், கமலின் பட நிறுவனத்திற்காக ஒரு படம் இயக்கிக் கொடுக்கப் போகிறார் பாலச்சந்தர். குருவும்,சிஷ்யனும் பரஸ்பரம் ஒத்துழைக்கிறார்கள்.

## நனைந்தது 4 நாள்

நக்மா ஒவ்வொரு படத்திலும் தனது உடலை வைத்து ஒவ்வொரு விதமாக வித்தை காட்டிக்கொண்டிருக்கிறார்.

தீபாவளி வெளியீடான ரகசியப் பொலிஸ் படத்தில் ஒரு குளியல் பாடலுக்காக 4 நாள் செயற்கை மழையில் நனைந்தாராம். அதற்காக ரசிகப் பெருமக்கள் ஒன்றும் வருத்தப்பட வேண்டாம். நனைவதற்க்கு ஏற்ப வாங்கிக்கொண்டுதான் நடித்தாராம்.

## கமல் நாத்திகர்

கமலஹாசனுக்கு கடவுள் நம்பிக்கை கிடையாது. சமீபத்தில் அவர் சொல்லியிருக்கும் கருத்தைக் கேளுங்கள்; 'எனக்கு அண்மைக்காலமாக ஆன்மீகத்தில் நம்பிக்கை வந்தது. என் நம்பிக்கையை பிள்ளையார் தகர்த்துவிட்டார். நான் மீண்டும் நாத்திகனாகிவிட்டேன்!' என்று கூறியுள்ளார் கமல். பிள்ளையார் பா குடித்ததாக வந்த செய்திகள் ஏமாற்றுவேலை என்கிறார் கமல்.

### அவுஸ்திரேலியாவில் கமல்

'இந்தியன்' படத்திற்காக ஒரு பாடல் காட்சி அவுஸ்திரேலியாவில் படமாக்கப்படுகிறது. கமலும், மனிஷா கொய்ராலாவும் ஆடிப்பாடுவதற்காக பறந்து விட்டார்கள். பல ரக மிருகங்கள் பின்னணியில் இருப்பதுபோல காட்சியமைத்து பாடல் காட்சியை சூட் பண்ணுகிறார்கள்.



கமல்-அர்ஜுன்
படம் - குருதிப்புனல்

## மினி சினி

* தற்போது ஓடிக்கொண்டிருக்கும் மணிரத்னத்தின் சொந்தத் தயாரிப்பான 'ஆசை' இந்தி, தெலுங்கு ஆகிய மொழிகளில் மொழிமாற்றப் படவுள்ளது.

* தமிழில் புதிய படங்களைத் தவிர்த்து வரும் இளையராஜா, கன்னடத்தில் இரு புதிய படங்களுக்கு இசையமைக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

* பிரபு-மோகன்லால் நடிக்கும் மலையாளப் படமான 'காலாபாணி' படத்தை இயக்குபவர் பிரபல மலையாள இயக்குநர் பிரியதர்ஷன் என்பது தெரிந்த செய்தி. பிரியதர்ஷன், மோகன்லாலை வைத்து இயக்கும் 25வது படம் இது.

* ரஜினியின் 'தளபதி' படத்தில் வில்லனாக நடித்தவர் பிரபல இந்தி நடிகர் அம்ரீஷ்பூரி. இவர் ஆர்.கே.செல்வமணி தயாரிப்பில் நெப்போலியன்-ராம்கி நடிக்கும் 'ராஜாளி' படத்தில் நடிக்கவிருக்கிறார்.

* விஜயசாந்தி நடிக்க 'தலைவாசல்' 'கர்ணா' போன்ற படங்களை இயக்கிய செல்வா இயக்குவதாக இருந்த தெலுங்குப் படமொன்றில் விஜயசாந்திக்குப் பதிலாக கௌதமியை நடிக்க வைக்க முடிவு செய்துள்ளார் படத்தின் தயாரிப்பாளர்.

* ஜெயராம்-குஷ்பு நடித்த 'கோலங்கள்' படத்தை இயக்கிய மலையாளப்பட இயக்குநர் ஐ.வி.சசி, தனது அடுத்த படத்தையும் தமிழிலேயே உருவாக்கவுள்ளார். இந்தப் படத்திலும் ஜெயராம் தான் ஹீரோ.

* 'செந்தமிழ்ப்பாட்டு' 'சேதுபதி ஐ.பி.எஸ்' போன்ற படங்களில் வில்லனாக நடித்த காசன்கான், இப்பொழுது 'பத்மாலயா' என்ற தெலுங்குப் படத்தில் இரண்டாவது கதாநாயகனாக நடித்து வருகிறார்.

* ஆர்.கே.செல்வமணி இயக்கத்தில் சத்யராஜ் நடிக்கும் 'அடிமை' படத்திற்கு முதலில் 'சுப்ரீம் கோட்' எனப் பெயரிடப்பட்டு மாற்றப்பட்டது.

* 'பணக்காரனில்' ரஜினி பெண் வேடம் போட்டார். அதன் பின்னர் 'திருமூர்த்தியில்' விஜயகாந்த், 'கட்டபொம்மனில்' சரத்குமார் 'ஆணழகனில்' பிரசாந்த். தற்போது 'பிள்ளையார் சுழி' படத்தில் பாண்டியராஜன் பெண் வேடத்தில் நடிக்கிறார்.

* நாசரின் 'அவதாரம்' படத்தில் வில்லனாக அறிமுகமாகிய பாலாசிங், இப்போது கமலின் 'இந்தியன்' படத்திலும், பாரதிராஜா இயக்கத்தில் விஜயகாந்த் நடிக்கும் புதிய படத்திலும் வில்லனாக நடித்துவருகிறார்.

* சத்யராஜின் மனேஜர் ராமநாதன் 'ராஜ் பிலிம்ஸ் இன்டர்நஷனல்' என்ற தனது நிறுவனத்தின் சார்பில் அண்மையில் 'காவல்காரன்' என்ற தலைப்பைப் பதிவு செய்துவைத்துள்ளார். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.நடித்த பழைய படம் ஒன்றின் பெயர் 'காவல்காரன்'.

* ஒன்பது மாதக் குழந்தை கதாநாயகனாக நடித்த ஆங்கிலப்படமான 'பேபீஸ் டே அவுட்' இப்போது தெலுங்கில் 'சிசிவேரி' என்ற பெயரில் தயாராகி வருகிறது. இந்தப் படத்தில் நாகார்ஜுனா-அமலா தம்பதியின் மகன் அகில் கதாநாயகனாக நடிக்கிறார்.

## மற்றொரு பிரபலம்

மணிரத்னம் கதை,வசனம் எழுதி இயக்கும் ஆனந்தம் படத்தில் மோகன்லால், ஐஸ்வர்யாராய் ஜோடியாக நடிப்பது பழைய செய்தி. படத்தில் மற்றொரு பிரபல நடிகரும் நடிக்கிறார். இந்திய ஜனாதிபதி விருது வாங்கிய நானாபடேக்கர்தான் அவர். தமிழிலும், இந்தியிலும் ஒரே நேரத்தில் தயாராகிறது 'ஆனந்தம்.'

## புதிய பட

'முத்து' படம் ஒகேயாகிவிட்ட
கே.எஸ்.ரவிகுமார் 'பரம்பரை
இயக்குவதில் குதித்துவிட்டார்.
விஜயகாந்த் நடிக்கும் ப
கே.எஸ்.ரவிக்குமார் இயக்கப் போ
மெட்ராஸ் படத்தை தயாரி


படிப்பகம்

www.padippakam.com

## ...மாண்டம்

...ம் அவரது 122 வது ...ரதிராஜா இயக்கும் ...ட்டும் வெளியாக ...றை'. 100 வது ...வெற்றிபெற்றது ...வரவேண்டும் ...ஜயகாந்த். ... ரமேஷ் ...ராவுத்தர்



விஜய்-சுவாதி
படம் - வசந்த வாசல்

# முத்து முந்திக்கொண்டிருக்கிறது

தீபாவளி வெளியீடாக சென்னையில் மட்டும் நான்கு திரையரங்குகளில் வெளியாகியுள்ளது 'முத்து'. ரஜினிகாந்த் இரு வேடங்களில் தோன்றியிருக்கிறார். 'பாட்சா'படப் பாதிப்பு 'முத்து'வில் தெரிகிறது.

"நான் எப்போ வருவேன், எப்படி வருவேன் என்று யாருக்குமே தெரியாது. ஆனா சரியான நேரத்திலே வருவேன்"என்று ரஜினி பேசும் வசனம் மேலும் புதிர் போடுகிறது. 'பாட்சாவில்'"நான் ஒரு தடவை சொன்னா நூறு தடவை சொன்ன மாதிரி"என்று ரஜினி பேசிய வசனம் பிரபலமாகியது. 'முத்துவில்' ரஜினி ஸ்டைல் வசனம்: "நான் கொடுத்த வாக்கையும், கொடுத்த பொருளையும் திரும்பிவாங்குறதில்லை." அப்பாவும், மகனும் அதையே பேசுகிறார்கள்.

மீனா ரஜினி படம் என்பதால் சற்றுத் தாராளமாகவே பொலிவு காட்டியிருக்கிறார். நடிக்கத்தான் அவருக்கு நோ சான்ஸ். ராதாரவியும்,பொன்னம்பலமும்தான் வில்லன்கள். ரகுவரன் சில காட்சிகளோடு சரி. செந்தில்,வடிவேலு இருவரையும் ஓரம் கட்டிவிட்டு நகைச்சுவையில் தூள் கிளப்பியிருக்கிறார் ரஜினி.

மீனாவை வைத்துக்கொண்டு ரஜினி பேசும்,"ஏன் அம்மா என்னை வம்புக்கு இழுக்கிறீங்க. அதனால உங்களுக்குத்தான் தொந்தரவு" அப்பட்டமாக ஜெயலலிதாவுக்கு 'நச்' என்ற குத்து. ஏ.ஆர்.ரகுமான் இசை துள்ளல். வைரமுத்துவின் பாடல்களும் கைக்கொடுத்துள்ளன.

ரஜினி ரசிகர்களை 'முத்து' ஏமாற்றவில்லை. தீபாவளிப் படங்களில் 'முத்து'வசூலில் முதலிடத்தில் போய்க்கொண்டிருக்கிறது. ரஜினியை எப்படிப் பயன்படுத்துவது என்பதில் இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார் தேர்ச்சிகாட்டியிருக்கிறார்.




ராஜா-சங்கீதா
படம் - நிலம் பார்க்கும் நிலவு

## காதோடு சொல்லுகிறோம்

'தீபாவளி' ரேஸ் படங்களில் மீன் நடிகை சூப்பர் காந்தோடு நடித்தபடம் தூள் ளெப்புகிறது. அதனால் அவர் முதலிடத்தை பெற்றுவிட்டதில் அவரோடு போட்டு பாடும் நடிகைகளுக்கு புகைச்சல். குறிப்பாக பூவின் பெயர் கொண்ட நடிகைக்குத்தான் வருத்தம் அதிகமாம்.

'துறைமுக' நாயகன் 'வி' நடிகையை சுற்றிக்கொண்டிருந்தார். இப்போது இருவருக்கும் இடையே லடாயாம். முன்னர் 'மாவீரன்' பெயர் கொண்ட நடிகருக்கும் 'வி' நடிகை திடீரென்று டாட்டா காட்டியிருந்தார். 'வி' இப்போது 'ராம்' 'ராம்' என்று உச்சரித்துக்கொண்டிருக்கிறாராம். மலையாளத்தில் இருந்து தமிழுக்கு வந்த நாயகனின் பெயரில் ஒரு பகுதி அதுதானே!

சங்கீத நடிகை எந்த ஊரில் படப்பிடிப்பில் இருந்தாலும் அங்கு ஆஜராகி விடுகிறாராம் நடிகரும், இயக்குநருமான 'பா' தீபன். நான் 'சீதை'யாக இருந்துமென்ன அவர் ராமனாக இல்லையே என்று கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறாராம் மனைவி.



## எம் ஜி ஆர் இரசிகர்

சத்யராஜ் எம்.ஜி.ஆர் ரசிகர் என்பது தெரிந்த சங்கதிதான். பல படங்களில் எம்.ஜி.ஆர் மாதிரி ஆடிப்பாடியுமிருக்கிறார். தற்போது மாமன் மகள் படத்தில் எம்.ஜி.ஆர் போலவே மேக்கப் போட்டு சில காட்சிகளில் தோன்றுகிறார் சத்யராஜ். சினிமா தியேட்டர் நடத்தும் சத்யராஜ் எம்.ஜி.ஆர். படங்களை திரையிடும்போது, அந்தப் படங்களில் எம்.ஜி.ஆர். எப்படி வருகிறாரோ அப்படித் தோன்றுவாராம். 'நல்ல நேரம்' படத்தில் மூன்று யானைகள் சூழ எம்.ஜி.ஆர் காரில் இருந்து பாடுவாரல்லவா அதுபோலவே ஒரு காட்சியிலும் நடித்திருக்கிறாராம் சத்யராஜ்.

## காதலுக்கு நோ

ஈரமான ரோஜா, வனஜா-கிரிஜா போன்ற படங்களில் நடித்தவர் மோகினி. அவருக்கும் பட அதிபரின் மகன் ஒருவருக்கும் காதல் ஏற்பட்டு கலகலவென்று வளர்ந்தது. இப்போது பொலபொலவென்று உதிர்ந்து போய்விட்டது. பட அதிபர் தனது மகனை கட்டிப்போட்டு விட்டாராம். கலங்கிப்போயிருக்கிறார் மோகினி.

## அமெரிக்காவுக்கு பறந்தார்

நடிகை மோகனா அமெரிக்காவுக்குப் பறந்துவிட்டார். அங்கு பிரபல கம்பனி ஒன்றில் வேலை கிடைத்திருக்கிறதாம். பத்திரிகையாளர் மாநாடு வைத்து ரசிகர்களுக்கு பிரியாவிடையெல்லாம் சொல்லிவிட்டுத்தான் விமானத்தில் ஏறினார். வழியனுப்பத்தான் ரசிகர்கள் யாரும் போகவேயில்லை.

## ...தில் விஜயகாந்த்

...க்குநர் ...டத்தை ... ...றையும் ...மிஸ்டர் ...வனம் தயாரிக்கப் போகும் படம் அது. விஜயகாந்த்தின் ஜோடியாக நடிக்க முன்னணி நடிகை ஒருவரைப் போடப்போகிறார்கள்.

விஜயகாந்த் நடிக்கும் படத்தை கே.எஸ்.ரவிக்குமார் இயக்குவது இதுவே முதல் முறையாகும்.

## தாயகம்

'ஃபைவ் மேன் ஆமி' என்னும் ஆங்கிலப்படத்தின் தழுவலாகத்தான் 'தாயகம்' படத்தை தயாரித்துள்ளாராம் இப்ராகிம் ராவுத்தர். தமிழ் பட ரசிகர்களின் ரசனைக்கு ஏற்ப மாற்றங்கள் செய்யப்பட்டு கதை தயார் செய்யப்பட்டதாம்.

## ஆட வரவில்லை

'தொட்டாச் சிணுங்கி' படத்தில் ஒரே ஒரு பாடல் காட்சிக்கு ஆடவருமாறு நிரோசாவை அழைத்தார்கள். நல்ல சம்பளம் என்பதால் முதலில் ஒப்புக்கொண்ட நிரோசா பின்னர் சொல்லாமல் கொள்ளாமல் வாபசாகிவிட்டார். ரஜினிகாந்த்தை புகழ்ந்து ஒரு பாடல் காட்சியை 'தொட்டாச்சிணுங்கி' படத்திற்காக படமாக்கியிருக்கிறார்கள். ரேவதி-ரகுவரன் ஜோடியாக நடித்துவரும் படம், கார்த்திக் கௌரவ வேடத்தில் மட்டும் வருகிறார்.

## யம்மா! யம்மா!

இந்தியில் பிரபுதேவா நடிக்கும் படத்தின் படப்பிடிப்பு அடுத்த மாதம் அமோகமாக ஆரம்பமாகிறது. இந்தி திரையுலக பிரபல இயக்குநர் ராஜ்குமார் சந்தோஷி படத்தை இயக்குகிறார். படத்தில் நடிக்க பிரபுதேவா வாங்கியுள்ள சம்பளம் இந்திய பணமதிப்பில் ஒண்ணே கால் கோடி. யம்மா! யப்பா!


படிப்பகம்

www.padippakam.com

## சுயசோதனை

# மன உளைச்சலைச் சமாளிக்கத் தெரியுமா உங்களுக்கு?

ஒவ்வொருவருக்கும் தினமும் பல வழிகளில் மன உளைச்சல் ஏற்படும். சில நேரங்களில் அது இன்பமாகவும் இருக்கும். எனினும் பல நேரங்களில் மன உளைச்சல் பெரும் சங்கடத்தைக் கொடுக்கும்! நீங்கள் எப்படி மன உளைச்சல் பிரச்சனையை கையாளுகிறீர்கள். நிதானம் இழந்து விடுகிறீர்களா? நிலைமையை சமாளித்து விடுகிறீர்களா? இதோ ஒரு எளிய சுய சோதனை! சரி / தவறு என இங்குள்ள கேள்விகளுக்கு விடை அளியுங்கள்.

(1) வீட்டில் ஏதாவது விழா என்றால், எனக்கு பயமாக, டென்ஷனாக இருக்கும்.

(2) குழந்தைகள் விளையாட்டு சத்தம் எனக்கு எரிச்சலை ஏற்படுத்தும்.

(3) முழுவதும் அன்னியர்களே இருக்கும் அறைக்குள் நுழையும்போது, தடுமாறு வதைப்போல உணர்வேன்.

(4) குறித்த நேரத்துக்கு ஒரு இடத்துக்கு போகாவிட்டால் என் மீதே எனக்கு கோபம் வரும்.

(5) டிராபிக் ஜாமில் சிக்கி நின்று கொண்டிருக்கும்போது, வண்டியில் தாளம் போடுவேன் அல்லது நகத்தை கடிப்பேன்.

(6) எனது கருத்தை வேறு யாரும் உடனே புரிந்து கொள்ள முடியாத அளவு வேகமாக சொல்வேன்.

(7) சுற்றுலா பயணம் செல்வதற்கு தயாராவதற்குள் போதும், போதுமென்றாகி விடும் என நினைப்பேன்.

(8) தனியாக அமர்ந்து சாப்பிடுவது எனக்கு தர்மசங்கடமாக இருக்கும்.

(9) பழக்கமான இடத்தில் வசிக்கத்தான் எனக்குப் பிடிக்கும்.

(10) ஒருவர் மீது ஒருவர் கூறும் குற்றச்சாட்டுகள், புகார்களை நான் சில நேரங்களில் ரசிப்பேன்.

(11) ஏதாவது தவறு செய்து விட்டால் அதை சரி செய்வதில்தான் என் கவனம் முழுவதும் இருக்கும்.

(12) என் உதவி இல்லாமலேயே எந்த அளவு செயல்பட முடியுமோ அந்த அளவு செயல்படுமாறு எனது குடும்பத்தினரிடம் அடிக்கடி கூறுவேன்.



**மதிப்பெண்:**

9–12 'சரி!': நீங்கள் எப்போதும் இறுக்கமான முகத்தை கொண்டிருப்பீர்கள். உங்கள் வீட்டு விசேஷமான புதுமனை புகுவிழா, திருமணம் போன்றவை அதிக மன உளைச்சலை தரக்கூடியதுதான். இதில் நீங்கள் வீணாக மனதை போட்டு குழப்பிக் கொள்வீர்கள். கவலையை விடுங்கள், நிதானமாக செயல்படுங்கள்.

5 – 8 'சரி!': பலவித மன உளைச்சலை சந்திக்கும் மக்களை நீங்கள் சமாளிக்க வேண்டி இருக்கும். எனவே, உங்கள் பிரச்சனையை சமாளிக்க நிதானமாக செயல்படுங்கள். மன உளைச்சலுக்கு காரணம் என்ன என நிதானமாக சிந்தித்துப் பாருங்கள். இதனால் உங்களுக்கு நல்ல பலன் கிடைக்கும்.

0–4 'சரி!': வாழ்க்கை என்றுமே உங்களுக்கு மகிழ்ச்சியானதுதான். எதற்கும் கவலைப்படாத தன்மை உடையவர் நீங்கள். எனினும் சில நேரங்களில் உஷாராக இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

# எரிவாயு அடுப்புக்கள்

## அவதானம் அவசியம்

தற்போது எரிவாயு (Gas) அடுப்புகள் பயன்படுத்துவோர் தொகை அதிகரித்து வருகின்றது. எரிவாயு பயன்படுத்துவோர் மிகவும் கவனத்துடன் இருக்கவேண்டும். எரிவாயு பயன்படுத்துவோர் கவனிக்க வேண்டிய சில விஷயங்கள்.



**எரிவாயு இருக்கும்இடம் எப்படி இருக்க வேண்டும்?**

• சிலிண்டரை பக்க வாட்டில் படுக்க வைக்கக் கூடாது. எப்போதும் நின்ற நிலையில் இருக்க வேண்டும்.

• அதன் அருகில் நெருப்பு, தணல் விளக்குகள் இருக்கக் கூடாது.

• தரை மட்டத்திலிருந்து சற்று உயரத்தில் இருப்பது நல்லது.

• சிலிண்டரை எளிதில் அகற்றும் வண்ணம் வசதியான இடத்தில் வைக்க வேண்டும்.

**அடுப்பு எப்படி இருக்க வேண்டும்?**

• தரை மட்டத்திலிருந்து இரண்டடிக்கு மேல் இருப்பது அவசியம்.

• அடுப்புகளை சுவர் ஒட்டி இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

• அடுப்புக்குப் பக்கத்தில் உள்ள ஜன்னல்களுக்குத் திரைச்சீலை வைக்கக்கூடாது.

• அடுப்பு எரியும்போது மின் விசிறியை உபயோகப்படுத்தக் கூடாது.

• சூடான பாத்திரங்களை இறக்கத் துணிகளைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து இடுக்கிகளைப் பயன்படுத்தவும்.

• பொங்கும் பொருட்கள் அடுப்பில் இருக்கும் போது கவனமாக அருகில் நின்று பொங்கி வழியாத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

• சூடாகி இளகும் பொருட்களை அடுப்பிற்கு அருகில் வைக்கக்கூடாது.

**எரிவாயு கசிவு ஏற்பட்டால்...?**

• சிலிண்டர் வால்வையும், அடுப்பின் குமிழையும் உடனடியாக மூடி விடவும்.

• அருகில் எரியும் விளக்குகளையும், தீச் சுடர்களையும் அணைக்கவேண்டும்.

• தீக் குச்சிகளைப் பற்ற வைக்கக் கூடாது.

• ஜன்னல் கதவுகளைத் திறந்து வையுங்கள்.

• மின்சார சாதனங்களைத் தொடக் கூடாது.

சிலிண்டரை எடுத்து வரும் போதே வாயு கசிவுகள் இருக்கின்றனவா? என்பதை சிலிண்டர் கொண்டு வருபவரிடம் அல்லது [illegible] வேண்டும்.

# லேடீஸ் ஸ்பெஷல்

# இருபாலருக்கும் பொதுவான பயிற்சி

தொந்தி விழுந்து மிகவும் அசிங்கமாகக் காட்சியளிக்கும் ஆண்-பெண்களுக்கு உட்டியாணாசனம், பலன் கொடுக்கும் யோகாசனங்களில் ஒன்று. இந்த ஆசனத்தை எப்படிச் செய்ய வேண்டும் என்பதைப் பார்ப்போம்.

துணியொன்றை நிலத்தில் விரித்து, அதில் ஏறி நிற்க வேண்டும். பின்னர் கால்களை இரண்டு அடி தூரத்திற்கு அகலமாக்கி வைத்துக்கொள்ள வேண்டும்.

நின்ற நிலையிலேயே மூச்சை நன்றாக உள்ளுக்குள் இழுத்து வெளியே விட வேண்டும். பிறகு வயிற்றை எந்த அளவுக்கு உள்ளுக்குள் முடியுமோ அந்த அளவுக்கு உள்ளுக்குள் எக்க வேண்டும். அப்போது மூச்சை உள்ளுக்குள் இழுக்கக் கூடாது.

வயிற்றை எக்கும்போது எவ்வளவு நேரம் அதே நிலையில் இருக்க முடியுமோ? அவ்வளவு நேரம் இருக்கலாம். பின்னர் வயிற்றைக் மெல்லத் தளரவிட வேண்டும்.

சில நிமிடம் ஓய்வு எடுத்து விட்டு மீண்டும் இந்தப் பயிற்சியைச் செய்ய வேண்டும். புதிதாகப் பயிற்சியைத் தொடங்குபவர்கள் முதலில் மூன்று தடவை செய்தால் போதும். நாளடைவில் நன்றாகப் பயிற்சி பெற ஆரம்பித்ததும் தினமும் 10 தடவை கூடச் செய்யலாம். ஆனால் பயிற்சியின் போது வயிறு சத்தமாகக் காலியாக இருக்க வேண்டும்.

**உட்டியாணாசனம் செய்வதால் எத்தகைய நன்மைகள் கிடைக்கின்றன தெரியுமா?**

★ பெண்கள் கொடி இடைப்பெற்று அழகு பெற முடியும்.

★ தொந்தி கரைந்து வயிறு உள்ளடங்கி பார்ப்பதற்க்கு அழகாக இருக்கும்.

★ அஜீரணம், மலச்சிக்கல், வாயு போன்ற கோளாறுகள் நீங்கும்.

★ கல்லீரல் நன்றாக இயங்கும்.

**எச்சரிக்கை**

★ வயிற்று நோய்கள் இருப்பவர்கள் கண்டிப்பாக இந்த ஆசனத்தைச் செய்யக்கூடாது.

★ இரத்த அழுத்தம் இருப்பவர்களும் இந்த ஆசனத்தைச் செய்யக்கூடாது.

# சின்ன சின்ன யோசனைகள்

1. அன்னாசிப் பழத்தை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் வயிற்றுப் பூச்சிகள் ஒழியும். மேலும் முகம் பொலிவு பெறும்.
2. தேள் கொட்டிய இடத்தில், ஒரு எலுமிச்சம் பழத்தை இரண்டாக வெட்டி, இரு பாதியையும் ஒன்றன்பின் ஒன்றாகத் தேய்க்க விஷக்கடுப்பு குறையும்.
3. மலச்சிக்கல் உடையவர்கள் தினமும் காலையில் எலுமிச்சைச் சாறு அரை டம்ளருடன் ஒரு தேக்கரண்டி உப்பு சேர்த்து அருந்த மலச்சிக்கல் குணமாகும்.
4. காய்ந்த வேப்பம் பூக்களைத் தணலில் இட்டு அதன் புகையை வீடு முழுவதும் காட்டினால் கொசுத் தொல்லை ஒழியும்.
5. பல் சொத்தைக்கு கண்டக்கத்தரி விதைகளைப் புகை பிடிக்க, பல் சொத்தை இல்லாமல் போகும்.
6. தண்ணீரைச் செப்புப் பாத்திரத்தில் வைத்து உபயோகிக்க வேண்டும். ஏனெனில் செம்பு கிருமிகளை ஒழிக்கும் தன்மையுடையது.
7. வில்வம் இலையைக் காயவைத்து, பொடியாக்கி வெண்ணெயுடன் கலந்து இரு வேளை சாப்பிட வெள்ளைபடுதல் குணமாகும்.
8. உலர்ந்த திராட்சையை நெய்யில் வறுத்துச் சாப்பிட இருமல் குறையும்.
9. கஸ்தூரி மஞ்சளைத் தணலில் சுட்டு அதன் புகையை உள்ளுக்கு இழுக்க, சுவாச இரைப்பு குறையும்.
10. துளசிச் சாற்றைத் தேமலில் தடவி வர, தேமல் சிறிது சிறிதாக மறையும்.

# கர்ப்பிணிகள் கவனிக்கவும்

ஒரு பெண் கர்ப்பமுற்றவுடன், முதல் பரிசோதனையின்போது, இரத்தப் பரிசோதனை செய்து, இரத்தச்சோகை (அனீமா) இருக்கிறதா என்பதை கண்டறிய வேண்டும்.

இரத்தத்தில் சீனியின் அளவு சரியாக இருக்கிறதா என்பதையும் கண்டறிய வேண்டும்.

மாதந்தோறும் செய்யும் மருத்துவ பரிசோதனைகளில் கர்ப்பப் பையின் அளவு, இரத்த அழுத்தம், எடை போன்றவற்றைப் பரிசோதிக்க வேண்டும்.

ஐந்தாவது, ஆறாவது மாதங்களில், அல்ட்ரா சவுண்ட் சோதனை செய்து, குழந்தையின் வளர்ச்சி இயல்பாக உள்ளதா என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

# மரடோனாவுக்கு தடை விலகியது

உலகப் பிரசித்தி பெற்ற கால்பந்து வீரர்களில் ஒருவரான ஆர்ஜென்டினாவின் மரடோனா இங்கிலாந்தில் உள்ள ஒக்ஸ்போர்ட் சென்று கால்பந்து விளையாட்டு குறித்து உரையாற்றுகிறார்.

இது குறித்து, அந்தப் பல்கலைக் கழகம் விடுத்திருந்த அழைப்பை மரடோனா ஏற்றுக் கொண்டார். நவம்பர் 6ம் திகதி இங்கிலாந்து செல்கிறார். இந்த அழைப்பு தனக்கு பொருமையளிப்பதாகவும் மரடோனா தெரிவித்தார். மரடோனா தனது மனைவி, பிள்ளைகள், தந்தையுடன் இங்கிலாந்து செல்வதாகவும் அவர் கூறினார்.

34 வயதான மரடோனா இதுவரை நான்கு உலகக்கிண்ணப் போட்டிகளில் கலந்து கொண்டுள்ளார். இரண்டு முறை போதை மருந்து உபயோகித்துவிட்டு விளையாடியதால் பிடிபட்டார். 2வது முறையாக விதிக்கப்பட்ட தடைமுடிந்து கடந்த மாதம் தான் அவர் மீண்டும் கால்பந்து விளையாடத் தொடங்கியுள்ளார்.

1986ல் நடைபெற்ற உலகக் கோப்பைப் போட்டியின்போது இங்கிலாந்து–ஆர்ஜென்டினா அணிகள் மோதிய ஆட்டத்தில் மரடோனா விதிகளுக்கு மாறாகப் பந்தைக் கையால் குத்தி கோலுக்குள் திணித்தார். மரடோனாவின் இந்தச் செய்கையைக் கவனிக்காத நடுவர், அதை கோல் என்று அறிவித்து விட்டார். இந்த கோல் குறித்து மரடோனா பின்னர் கூறுகையில், "கடவுளின் கை" அடித்த கோல் இது என்று குறிப்பிட்டார்.

இங்கிலாந்து கால்பந்து ரசிகர்கள் மனதில் இந்தச் சம்பவம் இன்னும் மறையவில்லை.

மரடோனா தன்னை மாற்றிக் கொண்டு வருகிறார். நடுவர்களோடு மோதுவது, சற்றே திமிரோடு நடந்துக்கொள்வது என்பவற்றை மறந்து வருகிறார் என்று கூறப்படுகிறது. அது உண்மையா என்பது போகப் போகத்தான் தெரியும். மரடோனாவின் மாற்றம் தொடர்ந்தால் உதைப்பந்தாட்டக் களம் சூடுபிடிக்கும்.


தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ்
பரிசுக் கூப்பன்
இல 11

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ்
இணைந்து வழங்கும்
தங்கமாலை
பரிசுப் போட்டி

* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* முரசு 116 முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.


# "இப்போது விளையாடுவது கிரிக்கெட்டே அல்ல"

## ஒரு முன்னாள் வீரரின் அதிரடிப் பேட்டி

டெஸ்ட் போட்டியில் 230 விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் பி.எஸ்.சந்திரசேர். இந்திய அணியில் எழுபதுகளில் கொடிகட்டிப் பறந்த ஸ்பின்னர். தற்போது பக்கவாதம் மற்றும் பல நோய்களால் பாதிக்கப்பட்டு இருக்கிறார். நான் எப்போதுமே மனதில் பட்டதை வெளியே சொல்லிவிடும் ரகம் என்று தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்கிறார் பி.எஸ்.சந்திரசேர். அவரது பேட்டியிலிருந்து நீங்களே அவரைப்பற்றி மதிப்பிட்டுக் கொள்ளுங்கள்.



**கேள்வி: நீங்கள் விளையாடிய அந்தக்கால கிரிக்கெட்டுக்கும், தற்போதைய கிரிக்கெட்டிற்கும் வேறுபாடு என்ன?**

**பதில்:** இப்போது விளையாடுவது கிரிக்கெட்டே அல்ல. பணம்தான் விளையாடுகிறது. அதற்கு அடுத்தபடி 'குருப்'பிஸம்தான் இருக்கிறது. நாங்கள் அந்த நாளில் டைகர் (பட்டோடி) கீழ் விளையாடிய போதும், அஜித் வடேகரின் கீழ் விளையாடியபோதும் முழுமையாக ஒரே அணியாகத்தான் விளையாடினோம். இப்போது வித்தியாசம் இருக்கிறது. ஜெயித்தால் நிறையப் பணம் கிடைக்கும் என்றால் ஜெயிக்கிறார்கள். ஜெயிப்பதை விட தோற்றால் அதிக பணம் என்றால் வேண்டுமென்றே தோற்கிறார்கள். இக் கால வீரர்களுக்கு பணம்தான் முக்கியம்.

**கேள்வி: அது எப்படி, பணம் வாங்கிக் கொண்டு தோற்கிறார்கள் என்கிறீர்கள்?**

**பதில்:** அதை நான் வேறு சொல்ல வேண்டுமா? நியூஸிலாந்துக்கு சென்ற இந்திய அணியின் துணை மேலாளர் வெங்கட்ராவே கூறியிருந்தாரே. அந்தப் புகார் பற்றிப் பூசி மெழுகினார்களே தவிர, எந்த விசாரணையும் இதுவரை நடக்கவில்லை.

**கேள்வி: இந்தக் காலத்து கிரிக்கெட் வீரர்களுக்கு பணம் கிடைப்பது போல் உங்கள் காலத்தில் கிடைக்காததால் குற்றம் சாட்டுகிறீர்களா?**

**பதில்:** இல்லவே இல்லை. (ஆணித்தரமாக மறுக்கிறார்) எங்கள் காலத்து வீரர்களுக்கு அந்த எண்ணமே கிடையாது. 1975 என்று நினைக்கின்றேன். டைகர்தான் கப்டன். அவருக்கும் சலிம் துரானிக்கும் இடையே பேச்சுவார்த்தை கூடக் கிடையாது. அவ்வளவு சண்டை. ஆனால், இங்கிலாந்துக்கு எதிராக சென்னையில் நடந்த போட்டியில் இருவரும் ஜோடி சேர்ந்து நூறு ரன்களுக்கு மேல் எடுத்தனர். அந்த ரன்களே நாங்கள் வெற்றி பெற உதவியது. அப்போது எங்களுக்கு இப்போதுள்ள வீரர்களுக்கு போன்ற சலுகைகள் கிடையாது. ஆனால் ரசிகர்கள் கொடுத்த மரியாதையே தனி. 1971 இல் இங்கிலாந்தை அவர்கள் மண்ணில் வெற்றி கண்டோம். திரும்பி வந்தபோது பம்பாய் விமான நிலையத்தில் நாங்கள் தங்கியிருந்த ஹோட்டல் வரை ரசிகர்கள் கொடுத்த வரவேற்பு இருக்கே, அது மாதிரி உற்சாகத்தை இப்போது பார்க்கவே முடியாது.

(ஆனால் 1974 இல் அதே இங்கிலாந்திடம் பரிதாபமாக தோற்றுவிட்டு இந்திய அணி பம்பாய் திரும்பியபோது அதாவது 42 ரன்னோடு சகல விக்கெட்டுக்களையும் இழந்து திரும்பிய போது, விமான நிலையத்திலிருந்து வடேகர் வீடுவரை ரசிகர்கள் கல்மாரி பொழிந்ததையும் மறக்க முடியாது.)

**கேள்வி: அனில் கும்ளே வீசும் லெக் ஸ்பின் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**பதில்:** உங்களுக்கு வேண்டுமானால் கும்ளே ஸ்பின்னராக இருக்கலாம். என்னைப் பொறுத்தவரை கும்ளே போடுவது லெக்கட்டர்ஸ்தான். பேட்ஸ்மேன்கள் லெக் ஸ்பின் என்று ஆடி ஏமாந்து விடுகின்றனர். பேட்ஸ்மேன் பந்து வந்த நேரத்தைக் கணிப்பதில் தவறு செய்து தங்கள் விக்கெட்டைப் பறிகொடுக்கின்றனர். ஸ்பின் என்றால் பந்து மெதுவாக வரும். கட்டர்ஸ் என்றால் வேகமாக வரும்.

**கேள்வி: பேட்ஸ்மேன்களை ஏமாற்ற வேண்டும் என்றுதானே பந்து வீச வேண்டும். நீங்கள் கும்ளேயைக் குறை கூறுகிறீர்களே?**

**பதில்:** நானும், வெங்கட்டும் கூட அந்தக் காலத்தில் கட்டர்ஸ் போடுவோம். ஆனால் அதை ஒரு ஆயுதமாகத்தான் உபயோகித்தோம். எப்பவும் போடமாட்டோம். ஆனால் கும்ளே ஸ்பின் செய்ய வேண்டும் என்று போடுகிற பந்து எல்லாம் நேராகவே செல்கிறது. இப்போது அவுஸ்திரேலிய வீரர் ஷேன்வோர்ன் போடுவதுதான் ஒரிஜினல் லெக் ஸ்பின். கும்ளே போடுவது கட்டஸ்தான். நான் அடித்துச் சொல்வேன்.

**கேள்வி: இந்திய அணி பற்றிய தங்களது கருத்தென்ன? அடுத்த வருடம் நடக்கும் உலகக் கோப்பை போட்டியில் இந்தியா ஜெயிக்குமா?**

**பதில்:** இந்திய அணி நல்ல வலுவான அணி பேப்பரில்! ஒற்றுமையாக இந்தியா வெல்ல வேண்டும் என்ற வெறியில் ஆடினால் ஜெயிக்கும். தோற்றால் அதிக பணம் கிடைக்கும் என்று பந்தயம் கட்டுபவர்கள் சொல்வார்கள். அதற்கு மயங்காமல் உறுதியுடன் ஆடினால் ஜெயிக்க முடியும்.



படிப்பகம்

www.padippakam.com

## கண்ணீரிற் கரையும் காதலோவியம்

நீ மட்டும்
நகர்ந்து செல்லாதே!
என்னிடம்
விட்டுச் செல்லும்
அன்பின்
அடித்தளங்களையெல்லாம்
பெயர்த்துக் கொண்டு போ!
--
உன் நினைவுகளை
நிரந்தரமாகக்
கொன்றுவிடக்
கருதும் போது
கோடானு கோடி
ஏக்க அலைகள்
என்னுள்ளே
எழுந்து
எதிர்ப்புக் காட்டுகின்றன!
--

உனது அன்பின்
ஆணிவேர்
அறுபட்ட பின்னரும்
உன் நினைவு விழுதுகள்
நித்தியமாக-என்
நெஞ்சத்தைப் பற்றியுள்ளன!
--
எனது
கண்ணீர் வாழ்க்கையின்
ஈரத்தை
சேர்த்துக் கொள்ள
ஒரு காகிதம் அனுப்பும்
கருணை
கூடவா
உனக்கில்லாமற் போனது?
--

"இனி எனக்காக
அழவேண்டாம்" என்ற
உன் இறுதிப்
பிரகடனத்தின்
பின்னர் தான்
வற்றாத
விழிநீரோடைகள்-என்
இரு விழிகளிலிருந்து
இறங்கிவரத் தொடங்கின!
--
சுவரே... இங்கு,
சிதைந்து கொண்டிருக்கையில்
எதிர்காலம்
என் வாழ்விலெப்படி
ஓவியம் வரையும்?

செல்வி. பஹீமா ஜஹான் ஸஹீர், தெடேகொல, மெல்சிரிபுர.

## புதிது

நித்தம்
புதிது வேண்டும்
○○
நிலவும்
காற்றும்
வான் நிலவும்
கொட்டுகின்ற
மழையும்
புதிதாக
○○
உன்
கைகளுள்
கசக்கின்ற
காப்புற்ற
துப்பாக்கிகளை
கக்கித் துப்பும்
குண்டுகளுடன்
புதைத்துவிடு.
○○
சிறகுகள்
புதிது முளைக்கும்
சிந்தனைகள்
நவீனமாகும்
சிரிப்பும்கூட
பூக்கும்
புத்தம்
புதிதாக!

ஜெயமணி-வெள்ளவத்தை

## வண்டு போட்ட கவிதை

நடு நிசி விழித்த
கண்கள்-
உந்தன் விழிகளில்
கதிர் குத்தின!
○○
ஜீவனற்ற துண்டமாய்
உன்-
ஹிருதயம்
பிணமாகிவிட்டது!
இனி-நீ
செத்துப்போவதில்
நியாயமில்லை!
○○
ரத்தம் கண்டித்த
அந்த-
ஹிருதயத்தை வெட்டிப்போடு
நாயும் தின்னாது
புழுத்துப் போகும்!

செத்துப்போன
உன்னை வைத்து
இனி-
கவிதை எழுத
முடியாது!
○○
நான்
புழுத்துப்போவேன்
என்-
கல்லறைக்கருகில்
நீ சுவாசித்தால்-!
○○
குங்குமமிடு
சந்தனமிடாதே!

அக்கரைப்பற்று-எம்-யே-தஸ்லீம்

## இது வசந்த காலம்

இது வசந்தகாலம்
பட்டாம் பூச்சியின்
சிறகடிப்புகளாய்
உன்
விழியசைவுகள்.
❧
உன்...
பார்வையின் பாஷைகளுக்கு
அர்த்தம் தேடி
நான்
இரவுகளைத் தொலைத்து
வகுப்பறைகளில் தூங்குவேன்!
❧
உனக்குத் தெரியுமா...
எனக்கு மட்டும்
சூரியோதயம்
காலை எழுமணிக்கு
உன் கண்களுக்குள்!
மாலை நான்கு மணிக்கு
உன் கூந்தலுக்குள்!!

தாமரைப் பெண்ணே!
உனது நினைவுகள்
சுகமானவை தான்
சுகந்திருக்குள்ளும்
ஒரு சோகம்
மறைந்திருக்கிறதே!
❧
சகி...
புனைக்கு
மணிகட்டுவது யார்?
நீயா...நானா.
சொல்!
இது வசந்தகாலம்
எதற்கு...இன்னும் தாமதம்!

எஸ்.சுகுமார்-நம்பிலுவில்-01

# தேன் கிண்ணம்

## நுளம்பு வட்டம்

நுளம்பு வட்டம்
நன்றாக இருட்டி விட்டது
நெருப்பு நாக்கை
புரட்டிச் சுவட்டும்
மெழுகுவர்த்தி என்னெதிரில்.
✻✻
மிக நீண்ட மௌனத்தின் பின்
ஒரு கவிதை பிறந்தது.
✻✻
பொங்கல் பானை போல்
நெஞ்சு விம்மி தணிந்து போனது.
✻✻

கற்பனை நெருடல்
கனாச் சொட்டுக்களாய்
காகித உறிஞ்சலில்
கரைந்து போயின
✻✻
இன்றைய பொழுதில்
தவம் கலைவதற்குள்
அக்கவிதையைக் கீற வேண்டும்.
✻✻
விழிகளின் முன்னே
நுளம்பு வந்து கிறுகிறுத்தது.
உள்வாங்கிக் கொண்ட
அவலங்களை பதியவிடாமல்
காதுமடலில் நொண நொணத்தது.
✻✻

ஓர் அசிங்கக் கவிதையின்
ஆவியே இந்த நுளம்பு?
நாசித்துவாரத்தினுள்ளும்
கண்களினுள்ளும்
புகுந்து விடத் துடிக்கும்
பணங்கொசு வேறு.
✻✻
வெற்றுத் தாளில்
எழுதி முடித்து பேனாவை மூடினேன்.
எச்சம் பீச்சிய திருப்தியில்
வாலைச் சுருட்டி
விட்டிலைப் பிடித்தது
பல்லி!
✻✻

கன்னியா.

## துப்பாக்கிச் சதி

மிகப்பயங்கரமாக
ஓலைக்குடிலொன்று
உடைந்து விழுந்தது...!
ஒரு துப்பாக்கி
உஸ்ணம் தாங்காமல்
உமிழ்ந்து கொண்டிருந்தது!
பறவைகள் சடசடத்துப்
பறந்தன...!
மண்ணெங்கும்
செங்குருதி
சிதறிக்கொண்டிருந்தது!
பிஞ்சிமகவொன்று
சப்பிச் சுவைத்த
முலைக்காம்போடு
சப்தத்தைக் கேட்டு
சப்தமிக்காமல்
மௌனித்துப்படுத்தது--!
சுவரில் மாட்டப்பட்ட
சுவாமிப்படம்
சுக்குநூறானது...!
எங்கும் மனித சடலங்கள்
ஈதுவொரு
துப்பாக்கியின் சதி!

ஹப்புத்தளையூர்-எப்.லெனட்குமார்.

## என் சரிதம்

கவலைகளின்றி
சுமைகளின்றி
வாழ்க்கையை சுவைத்து
சுகித்திருந்தேன்
'ஒரு பத்தில்!'
❧
கனவுகளின் சுமையோடு
கல்விச் சுமையும் தாங்கி
காதலையும் படித்தேன்
'இருபத்தில்!'
❧
மோகக் குளத்தில் விழுந்து
தா(ப)கத்தில் தவித்து
சாட்சிப் பத்திரங்களோடு
சந்தேகமும் சுமந்து
வயிற்றுக்கு உணவும்
வாழ்க்கைக்கு கனவும்
தரும் 'வேலை' பெற்று
திரும(ர)ண மேடையேறினேன்.
'முப்பத்தில்!'
❧
'கவிதை கசந்தது,
'கலை கசந்தது,
பற்றாக்குறை
பட்ஜெட்டில்
'மனைவி'யும் குடும்பமும்
கசந்த நிலையில்
'கடனு'க்கு வாழ்ந்த
கடமை வாழ்க்கை
'நாற் பத்தில்!'
❧
'நரை' கொண்ட தலையும்
பிறை கொண்ட நெற்றியும்
வாடிச் சுருங்கிய வதனமும்
வாட்டி எடுக்கும்
குடும்பத் தொல்லையுமாய்
வதை பட்டு வாழ்ந்தேன்
'ஐ(ம்) பத்தில்!'
❧
நான்
சுமந்து வந்த
சுமைகளுக்கு நானே
'சுமை' யாகிப் போனேன்.
அடியிலேயே
கால் இடறி விழுகின்றேன்
இந்த 'அறுபத்தில்!'

கே.ராம்ஜீ உலகநாதன்-எல்ல

## மௌன யுத்தம்...!

என்
மனக்காயங்களுக்கு
மறந்து போயும்
உன்னால்
மருந்துபோட
முடியவில்லையே!
☛☛
எத்தனை
ஆசைகள்
நம்
சின்ன இதயங்களில்,
அத்தனையும்
இத்தனை விரைவில்
சிதைந்து போவதற்கு
உன்னிடம்
ஏன்?
அப்படியொரு ஆவல்!
☛☛
நம்
மௌன யுத்தத்தின்
கொடுமைகளால்
அதிகாலையில்....
நாம்
பவனிவரும்
பாதையெங்கும்
அந்த
மனிதர்களின்
முகங்களில்
ரத்தக்கறை படிந்த
சோகங்களை
பார்த்தாயா?
☛☛
எனக்கு
பிடித்தமான உணவு,
பிடித்தமான உடை,
பிடித்தமான பாடல்,
இவற்றையெல்லாம்
நீ தெரிந்து கொண்டதற்கு
என்னை....
முழுவதுமாக
புரிந்து கொண்டதற்கு
அர்த்தமாகாது
என்பதை
இப்போது ஏன்
புரியவைத்தாய்!


ஹைந்தளை நவா

## தொலைந்த நிலவு

இன்றே
காற்றைக்கிழித்து
மேகத்தை துளைத்து பறப்போம்
உயர உயர.
OXO
காக்கைகளும்
பருந்துகளும்
பார்க்கட்டும்
நாம்
வானம்பாடிகள்.
OXO
சன்னி எடுத்து
சந்திரனில் கூடுகட்டலாம்
சிறகை விரித்து
பற பற உயர உயர.
OXO

நானாகிய நீயும்
நீயாகிய நானுமாக
பறப்போம்
தொல்லையில்லா
கவலையில்லா
சந்திரனில் கூடுகட்ட
இன்றே
பற....
OXO
வேண்டாம் வேண்டாம்
நாளை
காற்றைக் கிழித்துப்
பறப்போம்
ஏனென்று எண்ணுவாய்?
இன்று
அமாவாசை.

ச.தியாகசேகரன்.





'பிரமிடுக்குள்ளே இருந்த விலை மதிப்புமிக்க புராதனப பொருள்களை திருடிக்கிட்டு வந்திட்டோம். யாரு கண்டுக்கப் போறா?'

# இந்த வாரம் உங்கள் பலன்

(05.11.95 முதல் 11.11.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | | |
|---|---|---|
| துலாம் | - | சூரியன், புதன், இராகு. |
| விருட்சிகம் | - | வியாழன், செவ்வாய், வெள்ளி |
| கும்பம் | - | சனி |
| மேடம் | - | கேது |

★ சந்திரன்- மீனம், மேடம், இடபம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 | மணி |
| திங்கள்-உயர்ந்த நிலை, பெரியோர் உதவி. | காலை 6 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், இனசன நன்மை. | பி.ப. 2 | மணி |
| புதன்- வீண்குறை கேட்டல், கடன் தொல்லை. | காலை 7 | மணி |
| வியாழன்- அந்நியர் நட்பு, பணவிரயம். | பகல் 12 | மணி |
| வெள்ளி - பொருள்வரவு, காரியானுகூலம். | காலை 7 | மணி |
| சனி- ஆடம்பரச் செலவு, பயனற்ற செயல். | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 6 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, இனசன நன்மை. | பகல் 12 | மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | காலை 7 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, பயனற்ற செயல். | பி.ப. 2 | மணி |
| வியாழன்- கௌரவ மிகுதி, குடும்பச் செல்வாக்கு. | காலை 7 | மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், காரியானுகூலம். | பகல் 12 | மணி |
| சனி- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 6 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில்நிலை மந்தம், மனக் கவலை. | காலை 7 | மணி |
| திங்கள்- உறவினர் உதவி, பணவரவு. | பகல் 12 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, செலவு மிகுதி. | காலை 6 | மணி |
| புதன்- துயர் நீங்கும், வீண்குறை கேட்டல். | பி.ப. 2 | மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, மன்குறை நீங்கும். | காலை 6 | மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், தனலாபம். | பகல் 12 | மணி |
| சனி- முயற்சி பலிதம், இனசன நன்மை. | காலை 7 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 7 | மணி |
| திங்கள்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 8 | மணி |
| புதன்- பயனுள்ள செயல், வீண் செலவு. | பி.ப. 2 | மணி |
| வியாழன்- ஆடம்பரச் செலவு, மனக்கவலை நீங்கும். | மு.ப. 10 | மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, கௌரவம். | பகல் 12 | மணி |
| சனி- அந்நியர் உதவி, புதிய முயற்சி. | காலை 7 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 12 | மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், துயர் அதிகம். | காலை 7 | மணி |
| செவ்வாய்-அந்நியர் சகவாசம், கௌரவம். | பி.ப. 2 | மணி |
| புதன்- துயர் அதிகம், காரியத்தடை. | காலை 7 | மணி |
| வியாழன்-பெரியோர் உதவி, கௌரவம். | பகல் 12 | மணி |
| வெள்ளி- மனக்கசப்பு, வீண்விரயம். | காலை 8 | மணி |
| சனி- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-8

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, காரியானுகூலம். | பகல் 12 | மணி |
| திங்கள்- பொருள் வரவு, புதிய முயற்சி. | காலை 7 | மணி |
| செவ்வாய்- மனக்கவலை நீங்கும், உயர்ந்த நட்பு. | பி.ப. 2 | மணி |
| புதன்- பயனுள்ள செயல், காரியத்தடை. | காலை 8 | மணி |
| வியாழன்- வீண்குறை கேட்டல், மனக்கிலேசம். | பகல் 12 | மணி |
| வெள்ளி- அந்நியர் நட்பு, கௌரவக் கேடு. | காலை 6 | மணி |
| சனி- பணக் கஷ்டம், உறவினர் உதவி. | காலை 6 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-2

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணத்தடை. | பகல் 12 | மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், அந்நியரால் நன்மை. | பி.ப. 1 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், இனசன விரோதம். | காலை 8 | மணி |
| புதன் - தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 | மணி |
| வியாழன்- உறவினர் பகை, செலவு மிகுதி. | காலை 7 | மணி |
| வெள்ளி- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. 2 | மணி |
| சனி- இனசன நன்மை, கௌரவம். | காலை 6 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 2 | மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், கௌரவக் கேடு. | காலை 6 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் 12 | மணி |
| புதன்- மனக்கவலை, இனசன நன்மை. | காலை 6 | மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், புதிய முயற்சி. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், மனமகிழ்ச்சி. | காலை 6 | மணி |
| சனி- உறவினர் உதவி, தொழில் சிறப்பு. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | பகல் 12 | மணி |
| திங்கள்- மனக்கவலை, செலவு மிகுதி. | காலை 6 | மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, பணவரவு. | பகல் 12 | மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், கௌரவம். | காலை 8 | மணி |
| வியாழன்-தொழிலில் மேன்மை, உயர்ந்த நிலை. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- தூர இடப்பயணம், செலவினால் கஷ்டம். | காலை 7 | மணி |
| சனி- புதிய முயற்சி, பணவரவு. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் பிரச்சனை, மனஅமைதி குன்றல். | காலை 6 | மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, புதிய முயற்சி. | பகல் 12 | மணி |
| செவ்வாய்- இனசன விரோதம், கௌரவக் குறைவு. | மு.ப. 10 | மணி |
| புதன்- புதிய முயற்சி, உயர்ந்த எண்ணம். | பி.ப. 1 | மணி |
| வியாழன்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 8 | மணி |
| வெள்ளி- செய்தொழில் மந்தம், அந்நியர் நட்பு. | பகல் 12 | மணி |
| சனி- உறவினர் நன்மை, மனமகிழ்ச்சி. | பி.ப. 3 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | காலை 6 | மணி |
| திங்கள்- பயனுள்ள செயல், கௌரவம். | காலை 7 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், பணத்தட்டுப்பாடு. | பகல் 12 | மணி |
| புதன்- வெளியிடப் பயணம், உறவினர் பகை. | காலை 7 | மணி |
| வியாழன்- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | காலை 8 | மணி |
| வெள்ளி- தொழில் பிரச்சனை, செலவு மிகுதி. | பகல் 12 | மணி |
| சனி- வீண் முயற்சி, மனக்குழப்பம். | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழிலில் உயர்ச்சி, முன்னேற்றம். | பகல் 12 | மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, மனமகிழ்ச்சி. | காலை 7 | மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, கௌரவம். | பி.ப. 2 | மணி |
| புதன்- தூரஇடப் பயணம், கௌரவம். | காலை 6 | மணி |
| வியாழன்- புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | பி.ப. 1 | மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, பணவரவு. | பி.ப. 2 | மணி |
| சனி- வீண் மனஸ்தாபம், அந்நியர் பகை. | காலை 6 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3


படிப்பகம்





## தேன் சிட்டு

சின்னஞ் சிறிய தேன் சிட்டு அது
திரிந்து பறக்குது வான் தொட்டு!
வண்ண அலகைத் திறந்திட்டு இசை
வார்க்கும் அமுதக் குரல்மெட்டு!

கன்னங் கரிய விழிகளிலே நமைக்
காணும் அழகு தனியழகு!
பின்னிய கூட்டின் வளைகளிலே அது
பேசும் குரலே புத்தழகு!

கூடிக் களிக்கும் அரங்கினிலே நம்
குரலை உயர்த்திப் பாடுவதால்
பாடல் அரங்கம் நடப்பதென தமிழ்ப்
பாவலர் நெஞ்சம் பறந்தனவோ?

ஏடுகள் இன்றித் தமக்குள்ளே கவி
எழுதிப் படிக்கும் கவிக்குலமோ?
நாடு நகரம் மகிழ்ந்திடவே இசை
நல்க வந்த புள்ளினமோ?

-எம்.முத்துக் கிருஷ்ணன்-

"வலிமை, வலிமை என்று பாடுவோம்-என்றும்
வாழுஞ் சுடர்க்குலத்தை நாடுவோம்.
கலியை பிளந்திடக்கை யோங்கினோம்-நெஞ்சில்
கவலை இருளனைத்தும் நீங்கினோம்"
– சுப்பிரமணிய பாரதியார்.

## மன்னர் கொடுத்த அதிர்ச்சி

**பாப்பா முரசு சிறுகதை**

குணபுரி மன்னர் குணாளன் வழக்கம் போல் நகர சோதனைக்காக மாறு வேடம் பூண்டு குதிரையில் சென்று கொண்டிருந்தார்.

நகரின் மையப் பகுதியில் ஒரு பெரிய கட்டடம் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

பல தொழிலாளர்கள் அங்கே வேலை செய்து கொண்டிருக்க, ஒருவன் அவர்களை அதட்டி, உருட்டி வேலை வாங்கிக் கொண்டிருந்தான்.

ஒரே கல்லால் செதுக்கப்பட்ட ஒரு கருங்கல் தூணை ஐந்தாறு பேர் சேர்ந்து தூக்கி நிறுத்த முயன்று கொண்டிருந்தனர்.

அந்தத் தூணோ மிகவும் பெரியது. கனமானது. அவர்களால் அந்தத் தூணை எவ்வளவு முயன்றும் தூக்கி நிறுத்த முடியவில்லை. ஆனாலும் அவர்கள் முயற்சியை விடவில்லை. தொடர்ந்து தூக்க முயன்று கொண்டிருந்தனர்.

இன்னும் ஒரு நபர் துணைக்குச் சேர்ந்தால் போதும். கல்தூணை எளிதாக தூக்கி நிறுத்தி விடலாம். ஆனால் அந்த நபருக்கு எங்கே போவது?

தலைவனோ அவர்கள் அருகே நின்று,

"இந்தக் கல்லைத் தூக்க இத்தனை பேரா! ம்.... சீக்கிரம் தூக்குங்கள்" என்று சத்தமிட்டுக் கொண்டிருந்தான்.

இந்தக் காட்சியைக் குதிரையில் இருந்தபடி பார்த்துக் கொண்டிருந்த மன்னர் குணாளன், குதிரையில் இருந்து கீழே குதித்து தலைவன் முன் வந்து நின்றார்.

"ஐயா! அந்தக் கல்தூணைத் தூக்க அவர்கள் அத்தனை சிரமப்படுகிறார்களே, நீங்களும் ஒரு கை கொடுத்து உதவினால் என்ன?" என்று கேட்டார்.

அந்தத் தலைவன் மாறுவேடம் பூண்டிருந்த மன்னரை ஏற இறங்க ஒரு முறை பார்த்து விட்டு,

"நான் யார் தெரியுமா? இந்தக் கட்டுமானப் பணியின் பொறுப்பாளன். தலைவன். பிறரை வேலை வாங்குவது தான் என் வேலை. அதை விட்டு விட்டு நான் வேலை செய்வதா? என் கௌரவம் என்னாவது. தவிர அந்தத் தலையெழுத்தும் எனக்கில்லை!" என்றான்.

இதைக் கேட்ட குணாளன், அவனை எரித்து விடுவது போல் பார்த்தான். பிறகு அந்தத் தொழிலாளர்களுடன் சேர்ந்து அந்தக் கல்தூணைத் தூக்கி நிறுத்தினார்.

தொழிலாளர்கள், சிறிதும் முன்பின் அறிந்திராதவர் வந்து செய்த உதவிக்காக, குணாளனுக்கு நிறைய நன்றிகள் சொன்னார்கள்.



தலைவன் அவர் அருகே வந்து, "நீர் யாரோ தெரியாது. ஆனாலும் உம் உதவிக்கு நன்றி" என்று சொன்னான்.

குணாளனோ அவனைச் சுட்டெரிப்பது போல் பார்த்து, "இதில் நன்றி சொல்வதற்கு எதுவுமில்லை, பிறரது கஷ்டத்தில் பங்கெடுத்துக் கொள்வதாலும், உடலால் உழைப்பதாலும் யாருக்கும் எவ்வித கௌரவக் குறைச்சலும் வந்து விடாது. கௌரவம் போய்விடும் என்பதற்காக உழைக்காதவன், மனிதனே அல்ல. இது போன்ற உதவி அடுத்தடுத்து உமக்குத் தேவைப்பட்டால் மன்னர் குணாளனுக்கு சொல்லி அனுப்பும். உடனே நான் வருகிறேன்!" என்று சொல்லி விட்டு யாருடைய பதிலுக்கும் காத்திராமல் தனது குதிரையில் ஏறி மறைந்தார் குணாளன்.

தனக்காக வேலை செய்து விட்டுப் போனவர் தம் நாட்டு மன்னர் என்பதை அறிந்து தலைவன் அவமானத்தால் கூனிக்குறுகி நின்றான்.

## ஆரம்பிக்கப்பட்ட ஆண்டுகள்

- உலக வங்கி -1945
- ஆசியஅபிவிருத்தி வங்கி -1966
- கொழும்புத் திட்டம் -1950
- ஆசிய அபிவிருத்தி திட்டம் -1967
- உலக சுகாதார நிறுவனம் -1948
- யுனிசெப் நிறுவனம் - 1946
- யுனெஸ்கோ நிறுவனம் -1946
- சார்க் அமைப்பு -1985
- அணிசேரா நாடுகளின் திட்டம்-1961
- நேட்டோ அமைப்பு- 1949

-ஜே.எஸ். மரியதாஸ்
பாலையூற்று

## School என்றால் என்ன?

School என்ற ஆறு எழுத்துக்கள் கொண்ட ஆங்கிலச் சொல்லின் விளக்கம் தெரியுமா?

S-Sincere-உண்மையுள்ள
C-Character-நடத்தை
H-Health- ஆரோக்கியம்
O- Obedient- கீழ்ப்படிவு
O-Order-ஒழுங்கு
L-Learn-அறிவு

என்டனி டெக்ஸ்டர் பர்னாந்து
புனித பெனடிக் கல்லூரி
கொட்டாஞ்சேனை, கொழும்பு-13.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 11.11.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 115
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 112

பரிசுக்குரியவர்:
அ. சு. முகம்மட் றயீஸ்
மருதமுனை, ஸம்ஸ் மத்திய கல்லூரி, கல்முனை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ஜே. நிரஞ்சனி<br>இ/ஸ்பிரிங்வூட் த.வி., இறக்குவானை. | மு.இ.சி. ஷபானா<br>அ.மு.க.வித்தியாலயம், அக்கரைப்பற்று-06. |
| சௌம்யா ஸ்ரீராம்<br>க/அசோகா வித்தியாலயம், கண்டி. | ஏ.எச். ஹாரிஷ், நஸ்ரியா மகா வித்தியாலயம், சிலாபம். |
| எம்.எம். நிலூஜான், களு/ஜீலான் மத்திய கல்லூரி, ஹேனமுல்லை, பாணந்துறை. | சோதிலிங்கம் நரேஸ்குமார், பெரியகல்லாறு-03, காளிகோவில் வீதி, உதயபுரம். |
| நுஸ்றி ஜமால் முகம்மட்<br>ஷீகத வித்தியாலயம் றாஜகிரிய. | பீ. ஆர். அன்ரூ<br>புனித அந்தோனியா கல்லூரி, வத்தளை. |
| எம்.ஜே. பாத்திமா. அரபா, மாளிகாஹேன முஸ்லிம் மகா வித்தியாலயம், பேருவலை. | எம்.எப். நாதீரா<br>அல் இர்சாத் மஹா வித்/ மெதகம. |

## வாரம் ஒரு நாடு

### ஈராக்



தலைநகர்- பாக்தாத்
பரப்பளவு- 4,38,446 சதுர கிலோ மீற்றர்
மக்கள் தொகை- 1.99 கோடி
மொழி-அரபி (ஆட்சிமொழி), குர்திஷ்
எழுத்தறிவு- 60%
சமயம்- இஸ்லாம்

நாணயம்- ஈராக்கி டினார்.
தனி நபர் வருமானம்- 2400 டொலர்.
வரலாறு. முன்பு மெசப்பத்தேமியா என அழைக்கப்பட்டது. 1932 இல் பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம் பெற்றது. மன்னர் 1958 இல் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இராணுவ ஆட்சி. ரெவலூஷனரி கொமாண்ட் கவுன்சில் (ஆர்.சி.சி) எனும் 22உறுப்பினர் கொண்ட புரட்சி இராணுவப் படையே ஆட்சி செய்து வருகிறது. 250 உறுப்பினர் கொண்ட தேசிய சபை உள்ளது. 1990 குவைத் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து, மக்களில் ஒரு பகுதியினர் இராணுவத்திற்கு எதிராக கிளர்ச்சியை ஆரம்பித்தனர்.
பொருளாதாரம். நாட்டின் பொருளாதாரத்தில் மிக முக்கிய பங்கு வகிப்பது பெற்றோல். உலகில் எண்ணெய் உற்பத்தி நாடுகளில் ஐந்தாவது இடத்தைப் பெற்றுள்ளது. மூன்றில் கால்பங்கு மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்பவர்கள். பேரீச்சம் பழம் மிக அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகிறது.

## விடுகதைகளும் விடைகளும்

1.கிண்ணி போல பூப்பூக்கும் கிடாரம் போல காய்காய்க்கும் அது என்ன?

2.வாயால் கேட்கமாட்டான். பிறர் கொடுப்பதைக் கொண்டு வயிற்றை நிரப்பிக் கொள்வான். யார் அவன்?

3. பூங்கா ஒன்றுக்கும் இப்பெயர் உண்டு. சில பாடசாலைகளுக்கும் இப்பெயர் உண்டு. முதல் மூன்று எழுத்துக்களை எடுத்தால் படத்தின் பெயர் ஒன்று உண்டு. அந்தப் பெயர் என்ன?

4. பச்சை பச்சையாய் இருக்கும். பாவற்காயும்மல்ல; பக்கமெல்லாம் முள்ளுண்டு பலாக்காயுமல்ல; கனிந்தால் சாப்பிடலாம் வாழைப்பழமுமல்ல; சகோதரன் பெயருண்டு ஆனால் உடன் பிறந்தோனுமல்ல. அது என்ன?

5. மாகாணங்களில் ஒன்றையும் வழிக்கு ஒத்த சொல் ஒன்றையும் இணைத்தால் படத்தின் பெயர் வரும். அந்தப் படம் எது?

6. கைகளிலும் இருப்பான் சுவர்களிலும் இருப்பான் சொந்தக்கால்களிலும் இருப்பான் அவன் யார்?

7. ஒரு பெண்ணின் பெயரையும்காற்றுக்கு ஒத்த சொல் ஒன்றையும் இணைத்தால் பண்டிகைத் திருநாள் ஒன்றின் பெயர் வரும். அது என்ன?

8. கடையிலே ஒருவனாக இருப்பான் வீட்டுக்கு வந்தால் இருவராக மாறுவான். யார் அவன்.

9.குளம் ஒன்று. கொடியும் ஒன்று. பூவும் ஒன்று. அது என்ன?

10.ஆண்களும் பெண்களும் வீசும் வலை, ஆதாயம் தேடும் வலை, நீரிலே விழாத வலை, நெருப்பிலே வேகும் வலை. அது என்ன?


**விடைகள்:**

1. சுரக்காய். 2. தபால் பெட்டி
3. விகாரமகாதேவி 4. அண்ணா வண்ணம் பழம்.
5. கிழக்கு வாசல் 6. கடிகாரம்.
7. தீபாவளி 8. தேங்காய்
9. விளக்கு 10.இடியப்பம்

ஏ. ஆர்.பாத்திமா பர்வின்
மட்- அல்ஹிறா வித்தியாலயம், காத்தான்குடி. 05.

## செய்து பாருங்கள்

### வளையல் பிரேம்



இதைச் செய்வதற்கு இரண்டு பிளாஸ்டிக் வளையல்கள் தேவை. வளையல்களில் ஒன்றை விட மற்றொன்று சற்று சின்னதாக இருப்பது போல் எடுத்துக்கொள்ளுங்கள்.

சின்ன வளையலை எடுத்து அதன்மேல் அழகான படம் ஒன்றை வைத்து விட்டு, அதன்மீது பொலித்தீன் பேப்பரை வையுங்கள். இப்போது பெரிய வளையலை எடுத்து அதன்மீது வைத்து அழுத்துங்கள். சின்ன வளையலும், படமும் பெரியவளையலுக்குள் மாட்டியிருக்கிறதா? இனி வெளியில் தெரியும் பேப்பரை வெட்டிவிடுங்கள்.இபபோது வளையல் பிரேம் ரெடி. இதை அப்படியே சுவரில் ஒட்டி விடுங்கள்.

பாப்பா முரசுக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப் படுகின்றன.
அனுப்பவேண்டிய முகவரி:
பாப்பா முரசு
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.



www.padippakam.com
படிப்பகம்



## பட்டுக்கோட்டை பிரபாகர்

பதினைந்து நிமிடங்கள் முடிந்த பின்...

"அவையோர்களே... இப்போது நான் தயார். உங்களில் 50 பேர் வரிசையாக வந்து இந்தப் புத்தகத்தில் எது வேண்டுமானாலும் கேட்கலாம்."

ஐம்பது பேர்களுக்கு நூறு பேர்களுக்கு மேல் குவிந்தார்கள். முதல் ஐம்பது பேரை மட்டும் வரிசைப்படுத்தி ஒவ்வொருவராக மேடைக்கு அனுப்ப.... அவர்கள் புத்தகம் வாங்கி புரட்டி ஏதோ ஒரு பக்கத்தில் ஏதோ ஒரு கேள்வி கேட்க, டாண் டாண் என்று பதில் வந்தது.

"முப்பத்தி இரண்டாம் பக்கத்தில் கடைசி வரி என்ன?"

"சுகுமார், நீங்க இவ்வளவு மோசமானவரா இருப்பீங்கன்னு நான் நினைக்கவே இல்லை என்று கதறினாள் அவள்!"

"சுட்டதுதான் சுட்டீங்க மார்பில சுட்டிருக்கலாம். இப்படி கோழைத்தனமா முதுகிலே சுட்டுட்டிங்களே மாமா?- இதை யார் சொல்கிறார்கள்?"

"வளர்ப்புப் பையன் ரகுபதி சொல்கிறான்"

"உங்களில் உத்தமர்கள் மட்டும் அவள் மேல் கல்லெறியுங்கள் என்றார் ஏசு. அதைப் போல உன்னைச் சுத்தப் படுத்திக் கொண்டு என்னிடம் வா என்றேன். இதில் என்ன தவறு?-

இது எந்தப் பக்கத்தில் இடம் பெறும் வசனம்? "

"நானூற்றிப் பதினேழாம் பக்கம் மேலிருந்து எட்டாவது பாரா."

சரவணகுமாரின் ஒவ்வொரு பதிலுக்கும் அரங்கத்தில் ஆர்ப்பாட்டமான ஆரவாரம்.

ஆனி, பார்க்கர் ஸ்மித் காதில், "நாம் இறங்கியுள்ள பிராஜெக்ட் மிகவும் மதிப்பானதுதான். சந்தேகமே இல்லை" என்றாள்.

சுபா தன் கிட்பேக் சகிதம் எழுந்து மேடையோர புகைப்படக் கும்பலுடன் கலந்து நின்று கொண்டான்.

சரவணகுமார் ஐம்பது பேருக்கும் பதில் சொல்லி வணக்கம் வைத்து நிகழ்ச்சியை நிறைவு செய்ததும் நன்றியுரைக்க அமைப்பு நபர்வர..... செருப்பு சத்தங்களுடன் சகலரும் எழுந்து கொண்டனர்.

கண்ணாடி போட்ட நரைத்த தலை டாக்டர் தன் சூட்கேசுடன் மேடையை சமீபித்து, படிகளிடல் ஏறி மேலே வந்து சரவணகுமாரைக் கை குலுக்கிப் பாராட்டிக் கொண்டிருக்க...

பார்க்கர் ஸ்மித்தும், ஆனியும் வெளியேறிக் கொண்டிருந்தனர்.

மேடையில் சரவணகுமாரைப் பாராட்டியவர்கள் விலகிக் கொண்டிருக்க ....காமிரா சகிதம் சென்ற சுபா, "எக்ஸ்கியூஸ்மி சரவணகுமார், ஒரு பத்திரிக்கை அட்டைப் படத்துக்கு டிரான்ஸ்பரன்சி எடுத்துக்கட்டுமா உங்களை?"

"எடுத்துக்கங்க."

"இங்கே கூட்டமாய் இருக்கே... அந்த ரூமுக்குள்ளே போய்டலாமா? ரெண்டே நிமிஷம்."

"வாங்க."

அந்த மேக்கப் அறையில் இவர்கள் இருவரைத் தவிர வேறுயாருமில்லை. சரவணகுமாரை அப்படி நிற்க வைத்து, இப்படி நிற்க வைத்து, காமிரா வழியாகப் பார்த்த சுபா முகத்துக்கு அருகில், "குளோசப் " என்று சொல்லி காமிராவின் ஒரு பட்டனை அழுத்த...

சர்ரென்று சரவணகுமாரின் மூக்கின் மேல் பீச்சியடித்தது அந்த திரவம். காற்றில் கலந்தது. அவன் சுவாசத்தில் கலந்தது. தடுமாற வைத்தது. மயக்கத்தில் உடனடியாக ஆழ்த்தியது. சரிந்து விழ வைத்தது.

சுபா கைக் குட்டையால் சரவண குமாரின் முக ஈரம் துடைத்து விட்டு அறைக்கு வெளியே அவசரமாக ஓடி வந்து, அங்கே இங்கே அலைந்து கொண்டிருந்த அமைப்பாளார்கள் மத்தியில் படபடப்பாகக் கத்தினான், "சரவணகுமார் மயக்கம் போட்டு விழுந்திட்டான், இங்கே யாராச்சும் டாக்டர்ஸ் இருக்காங்களா?"

மேடையருகில் நடந்து கொண்டிருந்த நரைத்த தலை கண்ணாடி டாக்டர் விரைந்து ஓடி வந்து, "ஐ ஏம் எ டாக்டர். எங்கே பையன்?"

டாக்டருடன் இருபதுக்கும் மேலானவர்கள் அந்த அறைக்குள் நுளைய..... டாக்டர் அவசரமாக தன் சூட்கேஸை திறந்து ஸ்டெத் எடுத்து காதில் பொருத்தி, மார்புத் துடிப்பை சோதித்து பல்ஸ் பார்த்து,"மை காட்! பல்ஸ் இறங்கிட்டு இருக்கு. பிடிங்க என்கிட்டே கார் இருக்கு. பக்கத்தில தான் என் கிளினிக். கமான், சீக்கிரம்."

டாக்டர் வேகமாக ஓட.... சுபாவும் இன்னோருத்தனும் சரவணகுமாரைத் தூக்கிக் கொண்டு பின்னால் விரைய... டாக்டர் தன் காரில் அமர்ந்தார். பின் சீட்டில் சரவண குமாரைக் கிடத்தினதும் சுபா மட்டும் ஏறிக் கொண்டதும்,"பக்கத்தில்தான். காயிதே மில்லத் காலேஜ் தாண்டி ராகவா காலி கிளினிக்னு பேரு. கூட்டம் வேணாம். வேற வண்டில வாங்க" என்றார் டாக்டர். ஸ்டார்ட் செய்தார்.

அரங்கத்தை விட்டு வெளியே நடந்து வந்த பார்க்கர் ஸ்மித், ஆனி உள்பட பெரும்பாலானவர்கள் பரபரப்பு காட்சியை கவனித்து என்ன, என்ன என்று ஆள் மாற்றி, ஆள் மாற்றி கேட்டுக் கொண்டார்கள்.

சரவணகுமார் மயங்கி விட்டான். ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்கிறார்கள் என்கிற செய்தி தினத்தந்தியின் மொழிப் பிரகாரம் காட்டுத் தீயென பரவியது.

டாக்டரின் கார் தங்களைக் கடந்து சென்றபோது பின் சீட்டில் அமர்ந்திருந்த சுபாவைப் பார்த்து விட்ட பார்க்கர் ஸ்மித், இவன் நம் அருகில் அமர்ந்திருந்த புகைப் படக்காரன் அல்லவா என்று நினைத்துக் கொண்டார்.

வேறு இரண்டு கார்களில் அமைப்பைச் சார்ந்த முக்கியப்பட்டவர்கள் அமர்ந்து கொண்டு புறப்பட்டு சாலைக்கு வந்த போது.....

டாக்டரின் அம்பாஸிடர் காணாமல் போயிருந்தது.

சுபா தன் மடியில் தலைவைத்து படுத்திருந்த மயக்க சரவணகுமாரைப் பார்த்துக் கொண்டே, "விக்கும், கண்ணாடியும், ஸ்டெத்தாஸ்கோப்பும், கார்ல டாக்டர் ஸ்டிக்கரும் எல்லாரையும் கச்சிதமா நம்ப வச்சிடுச்சி செல்வம். நேரா, உன் வீட்டுக்குப்போ, கொஞ்சம் ஊரை சுத்திக் கிட்டுப் போ. இருட்டான சந்து வர்றப்போ ஒரு நிமிஷம் நிறுத்து. நம்பர் பிளேட் மாத்திடலாம்." என்றான்.

தலையின் விக்கைக் கழற்றிக் கொண்டு, கலைத்துக் கொண்ட செல்வம், "ஒரே ஒரு விஷயம் எனக்குப் புரியலை சுபா" என்றான்.

"என்ன?"

"இப்படியே நீ நேரா பம்பாய்க்குப் பயணப்பட்டுடலாமே... எதுக்காக என் வீட்டுல பத்திரப்படுத்தணும் இவனை? போலீஸ் முழிச்சிக்கிட்டதுக்கப்புறம் கொண்டு போறது சிரமம் இல்லையா?"

"எனக்கு எதுவும் சிரமம் இல்லை. அததுக்கு தனித்தனி திட்டம் எப்பவும் கை வசம் இருக்கும். இப்ப நீ கட்டியிருக்கிற வாட்ச் என்ன விலை?"

"நானூறு ரூபா"

"நாப்பது ரூபா தர்றேன். தருவியா?"

"எந்த முட்டாள் கொடுப்பான்?"

"அதே மாதிரி நான் முட்டாளாகச் சம்மதமில்லை."

"புரியல்லை."

"டபுள் கிராஸ்ன்னா என்ன தெரியுமா? விவரமா பேசிக்கலாம் போ."

கார் காற்றை அறுத்துக் கொண்டு அதன் உச்சமான சாத்திய வேகத்தில் விரைந்து கொண்டிருக்க....

இரண்டு கார்களில் வந்த அமைப் பாளர்கள் காயிதே மில்லத் காலேஜ் தாண்டி ராகவா கிளினிக் எங்கே இருக்கிறது என்று சின்சியராய், நம்பிக்கையாய் விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

திடுபுடலாக. போலீஸ் ஆஜரானது.

அரங்கத்தில் நாய்கள் சுற்றி சுற்றி வந்தன.

அமைப்பாளர்கள், வந்தவர்கள், போனவர்கள் எல்லோரும் கேள்விகளால் கொத்தப்பட்டார்கள்.

"டாக்டர்ன்னு எப்படி நம்பினீங்க?"

"போட்டோகிராஃபர் முகம் எப்படி இருந்திச்சி?"

"பத்திரிகைக்கு அட்டைக்குன்னு சொன்னவன் எந்த பத்திரிகைன்னு சொன்னானா?"

"உங்கள்ல ஒருத்தர்கூடவா கார் நம்பர் கவனிக்கலை?"

"கார்ல டாக்டருக்கான சிம்பல் ஸ்டிக்கரைத் தவிர வேற ஏதாச்சும் அடையாளங்கள் பார்த்திங்களா?"

"டாக்டர் எப்படி இருந்தாரு?"

"மைகாட்! சரவணகுமார் அப்பாவுக்கு இன்னும் தெரிவிக்கலையா? ஏன்?"

இன்ஸ்பெக்டர் சந்திரஹரி உடனே போனை அள்ளி...

"மிஸ்டர் ஜீவானந்தம் வீடுதானே? நீங்க அவர் மனைவியா? சரிங்க. மாஸ்டர் சரவணகுமார் வீட்ல இருக்காரா?"

"ராணி சீதை ஹால்ல ஒரு புரோக்ராம் கொடுக்க போயிருக்கான். இன்னும் வரலை. நீங்க யார் சார்?"

"நான் வந்து.... ஒரு சபா செகரெட்டரி.. உங்க ஹஸ்பண்ட் இல்லையா?"

"ஏதோ பார்ட்டின்னு போயிருக்கார். பத்து மணிக்கு வந்துடேறன்னு சொன்னார். பத்து மணிக்கு மேல போன் செய்ங்க சார்."

"சரிம்மா" என்று வைத்து மணி பார்க்க.... 9.50. பத்து மணிக்கு நேரில் சென்று சொல்லலாம். பேசலாம். இப்போதே கலவரப்படுத்த வேண்டாம். இப்போது சில முயற்சிகள். முதலில் டிராஃபிக் போலிசுக்குத் தகவல்!

சந்திரஹரி வாசலில் நிறுத்தியிருந்த ஜீப்புக்குச் சென்று வயர்லெசில் தகவல் சொல்லி அறிந்து கொண்டவரையில் டாக்டர் அண்ட் போட்டோகிராபர் அடையாளம் சொல்லி பிரௌன் கலர் அம்பாஸிடர் என்று சொல்லி வைத்துவிட்டு... ஒரு சப் இன்ஸ்பெக்டரை அழைத்து....

"கொஞ்சம் பாஸிடிவாவும் யோசிக்கலாம். உண்மையிலேயே அது மயக்கம்தான். உண்மையிலேயே அவர் டாக்டர் தான். அவசரத்திலே கிளினிக்குப் பேரை தப்பா சொல்லியிருந்தா? அதனால நீங்க போனுக்குப் பக்கத்தில உட்கார்ந்து மௌண்ட் ரோட் வட்டாரத்தில இருக்கிற அத்தனை பிரைவேட் ஆஸ்பத்திரிக்கும் போன் செஞ்சி 12 வயசுபட பையனை மயக்கத்திலே கொண்டாந்து அட்மிட் செஞ்சாங்களான்னு விசாரிங்க. பார்க்கலாம். சம்திங் ராங்ன்னு தான் படுது."

அடுத்தபடியாக சந்திரஹரி தன் உயர் அதிகாரிகளுக்குத் தெரிவித்து விட்டு ஜீவானந்தம் வீட்டிற்குப் புறப்பட்டார்.

ஜீவானந்தம் இருந்தார். பக்குவமாக விஷயம் சொல்லப்பட்டதும் குதித்தார்.

"என்ன, கடத்திக்கிட்டுப் போய் விட்டாங்களா? ஒரே பையன் சார் எனக்கு. எனக்கு மூணு மந்திரிங்களைத் தெரியும். விடியறதுக்குள்ளே அவன் மேல ஒரு கீறல்கூட இல்லாம கொண்டாந்து சேர்க்கப் பாருங்க" என்று உடனே போனெடுத்து.....

"சார், நான் ஜீவானந்தம் பேசறேன். நம்ம பையனை யாரோ கடத்திட்டாங்களாம் சாமர்த்தியமா. ஆமாம், அவனைத்தான். ஏன்னு புரியலை. பிளாக்மெயிலா? இல்லை. இதுவரைக்கும் அப்படி ஒண்ணும் இல்லை. எனக்குப் பதறுது. ஒரே கண்மணி. சரி. சரி. நம்பிக்கையா இருக்கேன்" என்று வைத்தார்.

"சார், இது கடத்தல் தானான்னு இன்னும் உறுதியாகலை. எதற்கான கடத்தல்ன்னும் தெரியலை. நீங்க பணக்காரர், சரவணகுமார் உங்க ஒரே பையன்கிற கோணத்தில இது பணத்துக்கான பிளாக்குமெயிலாகத்தான் படுது. எதாச்சும் ஒரு வல்கயில கடத்தினவங்க உங்களை காண்டாக் செய்வாங்கன்னு எதிர்பார்க்கிறேன். உங்க போன்ஸ்ல டேப் பொருத்த கருவிகளை எடுத்து வரச் சொல்லியிருக்கேன். என் அதிகபட்ச கடமைகளைச் செய்வேன். தைரியமா இருங்க" என்றார் சந்திரஹரி.

இதற்குள் மாடியில் தூக்கம் கலைந்த அவர் மனைவி இந்திரா இறங்கி வந்து விபரம் கேட்டு சொய்ய் என்று மயக்கமாகி.. தண்ணீர் தெளித்து நிமிர்த்தியதும் அழ ஆரம்பித்து.... இந்த அமர்க்களம் நடுவில் போன் அடித்தது.

"இருங்க, எடுக்காதீங்க" என்ற சந்திரஹரி மற்றொரு போனில் எக்ஸ்சேஞ்சைத் தொடர்பு கொண்டு சுருக்கமாகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, ஜீவானந்தத்தின் போன் எண்ணைச் சொல்லி,"இதற்கு வருகிற கால்களை டிரேஸ் பண்ணுங்க ப்ளீஸ்" என்று விட்டு "இப்ப எடுங்க" என்றார்.

ஜீவானந்ததம் லேசான நடுக்கத்துடன் எடுத்தார்.

"ஹலோ மிஸ்டர் ஜீவானந்தம். கவலைப் படாதீங்க. உங்க பையன் சரவணகுமார் பத்திரமாக இருக்கான். போன்ல விபரமாக பேசறது எங்களுக்கு நல்லதில்லை. அதனால நாளைக்கு வேற வழில உங்களை தொடர்பு கொள்றோம். பாங்க்லேர்ந்து அஞ்சு லட்சம் எடுத்து ரெடியா வச்சிக்கிங்க."

தொடர்பு துண்டிக்கப்பட்டது. ஜீவானந்தம் விரயமாக ஹலோ, ஹலோ என்று கத்தி, பட்டனைத் தட்டிப் பார்த்து வைத்து ஒரு வார்த்தை மாறாமல் இன்ஸ்பெக்டரிடம் சொல்ல... அவர் உடனே எக்ஸ்சேஞ்சைக் கேட்டார்.

"ஸாரி சார். ட்யூரேஷன் போதாது. சில செகண்ட்ஸ்ல கட் ஆயிடுச்சி"

சோர்வாய் வைத்தார். ஆனால் எதற்காக கடத்தல் என்று ஒரு திக்கு தெரிந்துவிட்டதில் திருப்தியுற்றார். உடனே மேலதிகாரியைப் பிடித்தார்.

"அப்படியா? சரி. பிளாக்மெயில் கேஸ்களில் ஸ்பெஷலிஸ்ட் இன்ஸ்பெக்டர் நியூட்டனை என்கேஜ் செய்றேன். அவரோட நீங்க கோவாப்ரேட் செய்ங்க. கடத்தப்பட்ட செய்தி பேப்பர்ல வர்றதை தவிர்க்க முடியாது. ஏன்னா ஹால் வெளில ஒப்பனா கடத்திருக்காங்க. ஆனா இந்த பிளாக்மெயில் விஷயத்தை பேப்பர்களுக்கு போகாம பார்த்துக்கங்க."

"யெஸ் சார்"


ஜீவானந்தம் உறுதியாய் சொன்னார், "நீங்க எல்லாரும் விலகிக்கங்க. எனக்கு பணம் பெரிசில்லை. அஞ்சி லட்சம் அவன் எங்கே எப்படி தரச் சொல்றானோ அப்படி தந்து நான் மீட்டுக்கிறேன். போலீஸ் தலையீடு தெரிஞ்சா அவனை எதாச்சும் பண்ணிடுவாங்க."

"எங்க மேல நம்பிக்கை வைங்க சார். அப்படி எல்லாம் எதுவும் ஆய்டாது. நியூட்டன்ற இன்ஸ்பெக்டர் இதிலே எக்ஸ்பர்ட். இப்ப வந்துடுவார். உங்க பையனை பத்திரமா மீட்டுத் தர வேண்டியது எங்க பொறுப்பு" என்று சந்திரஹரி சமாதானப் படுத்த ஆரம்பித்தார்.

டெலிபோன் பூத்தைவிட்டு வெளிப் பட்டான் சுபா.

வந்து காரில் ஏறிக்கொண்டு, "ம், போ" என்றான்.

கார் தன் பயணத்தைத் தொடர்ந்தது. திருவொற்றியூர் செல்லும் சாலையில் ஒரு கிளைத் தெருவில் தனிமை வீட்டின் முன் நின்றது. எட்டிப் பார்க்கக்கூடத் தெருவில் நாதியில்லை.



வீட்டைத் திறந்து, சரவணக்குமாரை இருவருமாகத் தூக்கி வந்து உள்ளே கிடத்தி அவன் கண்ணை, வாயை, கையை, காலை தனித்தனியாகக் கட்டி கட்டிலில் படுக்க வைத்து, அறையைப் பூட்டி அடுத்த அறைக்கு வந்தார்கள்.

"உன்னை என்னால புரிஞ்சிக்கவே முடியலை சுபா" எனற்ான் செல்வம்.

"என்ன புரிஞ்சுக்கணும், சொல்லு!"

"என்னமோ டபுள்கிராஸ்ன்றே. திடீர்னு சரவணகுமார் அப்பாவுக்கு போன் செஞ்சி பிளாக்மெயில் செய்றே. என்ன இதெல்லாம்?"

"ஒரே பிராஜக்ட்ல பல லட்சம் சம்பாதிக்க இந்த திட்டம். பம்பாய் ஷேட் கிஷன்சந்த் ரெண்டு லட்சத்துக்கு இவனைக் கேட்டிருக்கான். நான் அவனுக்கு போன் செஞ்சி அஞ்சு தந்தாதான் ஒப்படைப்பேன், பையன் நம்ப கஸ்டடிதான்னு சொல்லப்போறன். நிச்சயம் சம்மதிப்பான். அதுக்கப்புறம் பம்பாய் பயணம். இதுக்கு நடுவிலே குருட்டாப் போக்குல ஜீவானந்தத்தை மிரட்டி வச்சிருக்கேன். ஒரே பையன் அஞ்சு லட்சம் தர நிச்சயம் சம்மதிப்பார். அதையும் சாமர்த்தியமா வாங்கிக்கிட்டு அவருக்கும், போலீசுக்கும் பெப்பே காட்டிட்டு பம்பாய்ல பையனை ஒப்படைச்சுடுவேன். எப்படி ஐடியா?"

"ரொம்ப ரிஸ்க்குடா."

"அதெல்லாம் பாத்தா லட்சங்கள் பார்க்க முடியாது. உனக்குத் தர்ற ரேட்டை உசத்திட்டேன் செல்வம். இதிலே உனக்கு ஒரு லட்சம் ரொக்கமா தர்றேன். ஓக்கே."

"அப்படின்னா ட்ரிபிள் ஓக்கே. நான் என்ன சொல்லணும் சொல்லு."

"ரெண்டு நாளைக்கு லீவு போட்டுட்டு வீட்லயே இரு. பையனுக்கு நினைவு திரும்பறப்ப எல்லாம் விட்டமின் மாத்திரையும், தூக்க மாத்திரையும் மாத்தி மாத்தி கொடு. பத்திரமா இவனைப் பார்த்துக்க. என்ன?"

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எஸ். சந்திரசேகர்
வயது: 23
முகவரி: 37/47, சிவபுரி, திருகோணமலை.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர்: எஸ். நௌசாத் மௌலானா
வயது: 20
முகவரி: இல. 2/6, என்.எச்.எஸ். மாளிகாவத்தை, கொழும்பு-10.
பொழுது போக்கு: பாடல், பத்திரிகை.



பெயர்: எம். றிஹான்
வயது: 18
முகவரி: 175, தொடங்கொல்ல, அக்குறணை, கண்டி.
பொழுது போக்கு: வானொலி, தொலைக்காட்சி.



பெயர்: ஏ. மாலா
வயது: 25
முகவரி: P.O.BOX-18907, FARAWANIYAH, KUWAIT.
பொழுது போக்கு: பத்திரிகை வாசித்தல்.



பெயர்: என். ஜீவகுமார்
வயது: 25
முகவரி: AL- FARSAN, P.O.BOX-18936, JEDAH-21425, K.S.A.
பொழுது போக்கு: பத்திரிகை, புத்தகம், கரம் விளையாடுதல்.



பெயர்: ஜிப்ரி மௌலானா
வயது: 28
முகவரி: CABLING TECHNICIAN, P.O.BOX-9226, DUBAI, U.A.E.
பொழுது போக்கு: தொலைக்காடசி, பேனா நட்பு.

பெயர்: ஏ.றியால்
வயது: 18
முகவரி: [illegible], பழைய சந்தை வீதி, சாய்ந்தமருது-[illegible].
பொழுது போக்கு: சினிமா, வானொலி, பத்திரிகை.

பெயர்: எஸ். சத்திய செல்வன்
வயது: 18
முகவரி:39, சமகிபுர, இறக்குவானை.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, பேனாநட்பு.

பெயர்: எஸ். யூனூஸ்
வயது: 21
முகவரி: கல்பிட்டி வீதி, புத்தளம்.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, உதைபந்து.

பெயர்: ரி. சிறி
வயது: 24
முகவரி: RIGI BLICKAM ST, 6374 BUOCHS (W.W), SWITZERLAND.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எம். இராமகிருஷ்ணன்
வயது: 19
முகவரி: 74ஏ, காலி வீதி, தெஹிவளை.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை, நாவல்கள்.

பெயர்: எம். ஜிப்ரி
வயது: 23
முகவரி: அல் அமான் ஹேன, பேருவளை.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, நாவல்கள்.

www.padippakam.com

# 49

# மக்சீம் கார்க்கி




பாடுங்கள், அம்மா, என் அருமை அம்மா!" என்று கத்தினான் ஹஹோல்; "அதுதான் வாழ்க்கை!"

அவன் முதலில் தானே பாடத் தொடங்கினான்; அவனது குரல் பிற சப்தங்களையெல்லாம் விழுங்கி விம்மி ஒலித்தது. தாய் அவனைத் தொடர்ந்து சென்றாள். திடீரென அவள் தடுமாறினாள்; கால் தவறி ஆழங்காணாத பாதாளக் குழிக்குள் விழுந்தாள்; அந்தப் பிலத்தின் சூன்யத்தில் பயங்கரக் குரல்கள் கூச்சலிட்டு அவளை வரவேற்றன.......

மேலெல்லாம் நடுங்கிக் குளிர அவள் திடுக்கிட்டு எழுந்தாள். அவளது இதயத்தை ஒரு கனமான முரட்டுக் கை அழுத்திப் பிடித்து, கொஞ்சம் கொஞ்சமாக இறுக்கி முறுக்கிப் பிழிவதில் ஆனந்தம் காண்பதுபோல் தோன்றியது. ஆலைச் சங்கு இடைவிடாது அலறி முனகி, தொழிலாளர்களை அறைகூவி அழைத்துக்கொண்டிருந்தது. அது இரண்டாவது சங்கு என்பதை அவள் உணர்ந்து கொண்டாள். அந்த அறை முழுவதிலும் புத்தகங்கள் இறைந்து கிடந்தன; எல்லாம் நிலைகுலைந்து தலைகீழாய்க் கிடந்தன; தரையில் சேறுபடிந்த பூட்ஸ் கால்களின் தடங்கள் காணப்பட்டன.

அவள் எழுந்தாள்; முகங்கை கழுவவோ, பிரார்த்தனையில் ஈடுபடவோ எண்ணாமல், அங்குள்ள பொருள்களை எடுத்து அடுக்கி, அறையைச் சுத்தம் செய்வதில் முனைந்தாள். சமையலறையில் கிடந்த கம்பின் மீது-கொடியின் சிறு பகுதி இன்னும் ஒட்டிக் கிடந்த அந்த கம்பின் மீது அவள் பார்வை விழுந்தது. அவள் குனிந்து எடுத்து, அடுப்பில் வைக்கப் போனாள். ஆனால் திடீரென வேறொரு எண்ணம் தோன்றவும் அவள் பெருமூச்சு விட்டவாறே அதில் தொங்கிய கொடித் துணியை அகற்றி, அதை ஒழுங்காக மடித்து, தனது பைக்குள் வைத்துக்கொண்டாள். அவள் அந்தக் கம்பை முழங்காலில் கொடுத்து முறித்து, அடுப்புக்குள் எறிந்தாள். பிறகு ஜன்னல்களையும் தரையையும் தண்ணீர் விட்டுக் கழுவினாள். தேநீர்ப் பாத்திரத்தைக் கொதிக்கவைத்து விட்டு உடை உடுத்துக் கொண்டாள். பின்னர் அவள் சமயலறையில் இருந்த ஜன்னல் அருகே அமர்ந்தாள். அவள் மனதில் அதே கேள்வி மீண்டும் எழுந்தது:

"இனி என்ன?"

தான் தனது காலைப் பிரார்த்தனையைச் சொல்லவில்லை என்பது ஞாபகம் வந்தவுடன் அவள் அங்கிருந்து எழுந்து விக்கிரகங்களை நோக்கி வந்தாள்; அவற்றின் முன்னே சில கணங்கள் நின்றாள்; பிறகு மீண்டும் உட்கார்ந்தாள். அவள் இதயம் சூன்ய வெளியாக வெறிச்சோடிக் கிடந்தது. நேற்றைய தினத்தில், தெருக்களிலே உற்சாக வெறியோடு கத்திச் சென்ற ஜனங்கள், இன்று தங்கள் தங்கள் வீடுகளுக்குள்ளே அடைந்து முடங்கிக் கிடந்து, இயற்கைக்கு மீறிய சம்பவங்களைப் பற்றி அமைதியாகச் சிந்தித்துக் கொண்டிருப்பதைப் போல, அதிசய மோனம் நிலவிக் கொண்டிருந்தது.

திடீரென அவள் தனது இளமைக் காலத்தில் கண்ட ஒரு விசயத்தை நினைவு கூர்ந்தாள்; சவுசாய்லவ் குடும்பத்தினருக்குச் சொந்தமான பண்ணையில் பழம்பூங்காவனம்; பூங்காவனத்தில் ஒரு பெரிய தடாகம். தடாகம் முழுவதிலும் நீரல்லிப்பூக்கள் நிறைந்து பூத்திருந்தன. இலையுதிர் காலத்தில் மப்பும் மந்தாரமுமான ஒரு நாளன்று அவள் அந்தத் தடாகக்கரை வழியாக நடந்து சென்றாள். செல்லும்போது அந்தத் தடாகத்தின் மத்தியில் ஒரு படகு நிற்பதைக் கண்டாள். குளம் கருநலமாக இருண்டு நிச்சலனமாக இருந்தது. அந்தப் படகு அந்தக் கரிய நீர்த்தடாகத்தின் மீது, பழுப்பிலைகளின் கூட்ட அலங்காரத்தோடு ஒட்டிக் கிடப்பதாகத் தோன்றியது. காய்ந்து கருகிப்போன அந்த இலைகளுக்கு மத்தியில், அசைவற்ற மோன நீர்த்தடாகத்தில், தன்னந் தனியாக,துடுப்புக்களோ மனிதத்துணியோ இன்றி ஸ்தம்பித்துக் கிடந்த அந்தப் படகிலிருந்து ஏதோ ஒரு இனந்தெரியாத துக்கத்தின் சோகம் தோன்றுவதாக அவளுக்குத் தெரிந்தது. வெகு நேரம் வரையிலும் அவள் கரையருகிலேயே நின்றாள்; யார் அந்தப் படகை தடாகத்தின் மத்தியில் தள்ளி விட்டார்கள், எதற்காகத் தள்ளிவிட்டார்கள் என்பதை எண்ணி யெண்ணி அதிசயித்தாள். அன்று மாலையில் அவள் ஒரு விஷயம் கேள்விப்பட்டாள். அந்தப் பண்ணை நிலத்தில் வேலை பார்த்து வந்த ஒருவனின் மனைவி, குடு குடு வென்ற நடையும், சிக்குப் பிடித்த சிகையும் கொண்ட ஒரு சிறு பெண், அந்தக் குளத்தில் மூழ்கி இறந்து விட்டதாக யாரோ சொன்னார்கள்.

தாய் தன் கரத்தால் நெற்றியை வழித்துவிட்டுக் கொண்டாள். அவளது மனதில் அன்றைய தனத்துக்கு முந்தின நாளன்று நடந்த சம்பவங்களின் நினைவுகளிடையே எண்ணற்ற சிந்தனைகள் நடுநடுங்கி மிதந்து சென்றன. வெகு நேரம் வரையிலும் அவள் அந்தச் சிந்தனைகளால் திக்பிரமையுற்று அமர்ந்திருந்தாள். அவளது கண்கள் குளிர்ந்து போய்விட்ட தேநீர்க் கோப்பையின் மீது நிலைகுத்திப் பதிந்து நின்றன. அதே சமயத்தில் தனது கேள்விகளுக்கெல்லாம் விடையளிக்கக் கூடிய யாராவது ஒரு படாடோபமற்ற புத்தி படைத்த மனிதனைக் காண வேண்டும், கண்டு கேட்க வேண்டும் என்ற ஆவல் பெருகிக் கொண்டிருந்தது.

அவளது ஏக்கம் நிறைந்த ஆவலுக்குப் பதிலளிப்பது போல், நிகலாய் இவானவிச் மத்தியானத்துக்கு மேல் வந்து சேர்ந்தான். என்றாலும் அவனைக் கண்டதும் அவளுக்குத் திடீரென ஒரு திகிலுணர்ச்சி ஏற்பட்டது. எனவே அவன் செலுத்திய வணக்கத்துக்குக் கூடப் பதில் கூறாமல், அமைதியாகச் சொன்னாள்:

"நீங்கள் ஏன் வந்துவிட்டீர்கள்? இப்படிச் செய்வது ஒரு பெரிய முட்டாள்தனம். நீங்கள் இங்கிருப்பதைக் கண்டால் அவர்கள் உங்களையும் பிடித்துக் கொண்டு போய் விடுவார்கள்!"

அவன் அவளது கையைப்பற்றி இறுக அழுத்தினான் தனது மூக்குக் கண்ணாடியைச் சரி செய்து கொண்டு, அவள் பக்கமாக நெருங்கிப் குனிந்து விறுவிறுவெனப் பேசினான்: "பாவெல்,அந்திரேய், நான்-எங்கள் மூவருக்குள்ளும் ஒரு ஒப்பந்தம். அவர்கள் கைது செய்யப்பட்டுவிட்டால், மறுநாளே நான் உங்களை இங்கிருந்து நகருக்குக் கொண்டு போய் விடுவது என்பது எங்கள் ஏற்பாடு" என்றான். அவனது குரல் பெருந்தன்மை நிறைந்ததாகவும், அவளது நலத்தில் அக்கறை கொண்டதாகவும் இருந்தது. "சரி இங்கு ஏதாவது சோதனை நடந்ததா?"

"ஆமாம் அவர்கள் எல்லாவற்றையும் வெட்கமோ மனச்சாட்சியோ இன்றி உலைத்துப் பலைத்து எறிந்து விட்டுப் போனார்கள்" என்றாள் அவள்.

"அவர்கள் எதற்காக வெட்கப்பட வேண்டும்?" என்று தன் தோளைக் குலுக்கிக் கொண்டு கேட்டான் நிகலாய். பிறகு அவள் ஏன் நகருக்கு வீடு மாற்றிக்கொண்டு செல்ல வேண்டும் என்பதை விளக்கிச் சொன்னான்.

அவனது நட்பும் பரிவும் கலந்த நயவுரையை அவள் காது கொடுத்துக் கேட்டாள்; லேசாகப் புன்னகை புரிந்து கொண்டாள். அவன் கூறும் காரணங்களை அவள் புரிந்து கொள்ளாவிட்டாலும், அவள் மனத்தில் எழும்பிய அன்பு கனிந்த நம்பிக்கையைக் கண்டு அவளே வியந்து கொண்டாள்.

"பாஷாவின் விருப்பம் அதுவானால், உங்களை நான் ஏதும் சிரமத்துக்கு ஆளாக்காது இருந்தால்...."என்றாள் அவள்.

"அதைப்பற்றி கவலையே வேண்டாம்" என்று குறுக்கிட்டான். "நான் தன்னந் தனியாகத்தான் வாழ்கிறேன். எப்போதாவது என் சகோதரி மட்டும் என்னைப் பார்க்க வருவாள்."

"நான் சும்மா வந்து இருந்து கொண்டு உங்கள் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருக்க முடியாது!" என்றாள் அவள்.

"விருப்பம் இருந்தால்,அங்கு வேலை தேடிக்கொள்ளலாம்"என்றான் நிகலாய்.

வேலை என்ற எண்ணம்,தனது மகனும் அந்திரேயும் பிற தோழர்களும் செய்யும் வேலையோடு எப்படியோ பிணைப்புற்றிருப்பதாக அவள் உணர்ந்தாள். அவள் நிகலாய்க்குப் பக்கமாக நெருங்கிச் சென்று அவன் கண்களை ஊடுருவிப் பார்த்தாள்.

"உண்மையாகவா? உங்களால் தேடித்தர முடியுமா?" என்று கேட்டாள்.

"என் வீட்டில் அதிகமாக வேலை ஒன்றும் இருக்காது, நான்தான் பிரம்மச்சாரி ஆயிற்றே....."

"நான் அதைப்பற்றி நினைக்கவில்லை-வீட்டு வேலையைப் பற்றியல்ல!" என்று மெதுவாகச் சொன்னாள் அவள்.

அவள் பெருமூச்செறிந்தாள்; தான் சொன்னதை அவன் புரிந்து கொள்ளாமல் போனதால் மனம் நொந்தாள். அவனோ அவளருகே குனிந்து பார்த்தவாறு புன்னகை புரிந்தான். சிந்தனை வயப்பட்டவனாகப் பேசினான்:

"நீங்கள் மட்டும் பாவெலைப் பார்ப்பதற்கு அனுமதி பெற்று அவனைச் சந்தித்து தமக்காக ஒரு பத்திரிகை வெளியிட வேண்டும் என்று நம்மைக் கேட்டுக் கொண்ட அந்த விவசாயிகளின் முகவரிகளை அவனிடமிருந்து எப்படியாவது தெரிந்து கொண்டுவர முடிந்தால்...."

"எனக்கே அவர்களைத் தெரியும்" என்று உவகையோடு கூறினாள் அவள். "நான் அவர்களைக் கண்டுபிடித்து,நீங்கள் என்ன செய்யச் சொல்கிறீர்களோ அத்தனையும் செய்கிறேன். நான்தான் அவர்களுக்குச் சட்ட விரோதமான புத்தகங்களைக் கொடுத்து உதவுகிறேன் என்று எவரும் என்னைச் சந்தேகப் படமாட்டார்கள். கடவுள் கிருபையால் நான் தொழிற்சாலைக்குள்ளே கூடப் பிரசுரங்களைக் கொண்டு போகவில்லையா?"

தன் முதுகிலே ஒரு மூட்டையும் கையிலே ஒரு தடிக்கம்பும் தாங்கி,கிராமங்களையும் காட்டுப் பிரேதசங்களையும், சாலை வழிகளையும் கடந்து நடந்து திரிய வேண்டும் என்று ஒரு ஆவல் அவள் மனதில் திடீரென எழுந்தது.

"இந்த வேலைக்கு என்னை ஏற்பாடு செய்யுங்கள். உங்களை மிகவும் கேட்டுக் கொள்கிறேன். எல்லாப் பிரதேசத்திலுள்ள சகல ரோட்டுப் பாதைகளிலும் நான் செல்லுவேன். கோடையிலும் குளிர் காலத்திலும் நான் சாகிற வரையிலும்- ஒரு கர்மயாத்திரிகனைப் போலச் சுற்றித் திரிகிறேன். எனக்கு இது ஒரு மோசமான வேலையென்று நினைக்கிறீர்களா?"

வீடு வாசலற்ற ஒரு தேசாந்திரியாக வீடுவீடாய், கிராமத்துக் குடிசை வாயில்களில் சென்று கிறிஸ்துவின் பெயரைச் சொல்லிப் பிச்சையெடுக்கின்ற ஒரு யாத்திரை வாசியாகத் தன்னைக் கற்பனை பண்ணிப் பார்த்ததால் ஏற்பட்ட சோக உணர்ச்சி அவள் இதயத்தில் நிரம்பி நின்றது.

நிகலாய் அவளது கரத்தை லேசாகப் பற்றிப் பிடித்து, தனது கதகதப்பான கையால் அதைத் தட்டிக் கொடுத்தான். பிறகு அவன் கடிகாரத்தைப் பார்த்து விட்டுச் சொன்னான்:

" சரி அதைப்பற்றி நாம் பின்னர் பேசிக்கொள்ளலாம்."

"நம்முடைய குழந்தைகள், நமது இதயத்தின் அன்புருவங்களான நம் குழந்தைகள், தங்களது வாழ்வையும் ஆசைகளையும் துறந்து, சுயநலத்தைப் பற்றிய எண்ணம் சிறிது கூட இல்லாமல் பாடுபட்டுச் சாகும் போது, நான், ஒரு தாய், சும்மா இருக்க முடியுமா?"

நிகலாயின் முகம் வெளுத்தது.

"இந்த மாதிரி வார்த்தைகளை நான் இதற்கு முன்பு கேட்டதேயில்லை" என்று அவளது முகத்தையே பரிவு கலந்த பார்வையோடு நோக்கியவாறே அமைதியாகச் சொன்னான் அவன்.

"நான் வேறு என்னத்தைச் சொல்ல?" என்று தன் தலையைச் சோகத்தோடு அசைத்துக் கொண்டும், கைகளை வெறுமனே ஆட்டிக் கொண்டும் கேட்டாள் அவள். "என் நெஞ்சுக்குள்ளே துடிதுடிக்கும் இந்தத் தாயின் துடிப்பை எடுத்துக் கூறுவதற்கு மட்டும் எனக்கு வார்த்தைகள் இருந்தால்...."

அவள் எழுந்தாள். உத்வேகம் நிறைந்த எத்தனையோ சொற்கள் அவளது தலைக்குள்ளே பின்னி முடைந்து குறுகுறுப்பதால், அவளது இதயத்தில் ஏற்பட்ட பெரும் பலத்தினால் அவள் எழுந்து நின்றாள்.

"அந்த வார்த்தைகளைக் கேட்டு ஒவ்வொருவரும் அழுவார்கள். கடைகெட்டவர்கள் கூட, வெட்கமற்ற பிறவிகள் கூடக் கண்ணீர் சிந்துவார்கள்!"

நிகலாயும் எழுந்தான்; மீண்டும் ஒரு முறை கடிகாரத்தைப் பார்த்தான்.

சரி அப்படியென்றால் இதற்கு ஒத்துக் கொள்கிறீர்கள். நகருக்கு-என் இடத்துக்கு-வருகிறீர்கள், இல்லையா?

அவள் தலையசைத்தாள்.

"சரி. எப்போ? கூடிய சீக்கிரத்தில், சரிதானே" என்று பரிவோடு கூறினான் அவன்; "நீங்கள் வருகிற வரையில் எனக்கு கவலைதான்."

அவள் அவனை வியப்புடன் பார்த்தாள். அவள் அவனுக்கு என்ன வேண்டும்? அவள் முன் தலை குனிந்தவாறு, குழப்பமான புன்னகை செய்தவாறு, கரிய கோட்டணிந்து, சமீப நோக்குடன் கூனி நின்று கொண்டிருந்தான் அவன். அவனது தோற்றம் அவனது இயற்கைக்கு முரண்பட்டுத் தோன்றியது.

(தொடர்ந்து வரும்)

# மேரியின் கைக்குட்டை

## கிண்ணியா சத்தார்

வானம் எல்லாத் திசையிலும் கருத்திருந்தது.

பெய்து கொண்டிருந்த மழையும் வேகத்தை அதிகரிக்க ரோய் உதடுகளுக்குள் ஏதோ முணுமுணுத்தான்.

'மேரி நீ எந்த முகாமிலிருக்கிறாய்? மேரி நீ எந்த முகாமிலிருக்கிறாய்?' மனது கேட்டுக் கொண்ட கேள்விகளுக்கு விடை தெரியாமல் தவித்தான் ரோய். இன்றா நேற்றா இரண்டு வருடங்கள்!

மேரி உன் முகம் எனது தோல்விகளையெல்லாம் தோற்கடித்து விடுகிறது. ஏதோவொரு புதுமையான சுகத்தை நீ அருகிலிருக்கும் போது நான் பெறுகிறேன். இது சொர்க்கமாவதானால் நான் இறந்து விட்டவனா? என்னால் அப்படி அதிகமான நன்மை என்ன செய்யப்பட்டிருக்கிறது. அது உன்னைச் சந்தித்ததாக இருக்குமோ? அப்படியானால் நான் இன்னும் இறக்கவில்லை. இப்போது பூமியில் உன்னருகில் தானிருக்கிறேன். இப்படித்தான் மேரி அவனருகிலமர்ந்தால் அவனுக்கு வார்த்தைப் பித்தம் பிடித்துவிடும்.

ரோய் குடையை விரித்தவனாய் முன்னே ஓடிக்கொண்டிருந்த வாய்க்கால் அருகே போய் அமர்ந்தான்.

சின்னப் பருவத்தில் அவளுடன் அவன் காகிதக் கப்பல் ஓடவிட்டு விளையாடிய வாய்க்கால் அது.

அழுதான் ரோய். அவனுடைய கண்கள் வடித்த நீர்த்துளிகள் வாய்க்காலுக்குள் காணாமல் போனது. அப்போது தொலைந்து போன அவனின் பழைய வாழ்க்கை படமாக வந்தது.

காமினி,தேவராஜ்,சலீமோட தோழமையான நாட்கள். அவை தண்ணியெடுக்க வரும் கன்னிகளைக் கிண்டல் பண்ணவென்று ஒதுங்கும் நாவல் மர நிழல்.

காவல் கட்டளையை மீறி கள்ளத்தனமாக குரும்பை பறிக்கும் ஆத்தங்கரை தென்னந்தோப்பு.

கிராமத்தின் பிரதான வீதியில் அடைத்து நிற்கும் ஆலமரம்.

அதன் கீழே காசில் தாடித்தாவின் வயோதிபத் தேனீர்க் கடை. அந்த நிழலிலமர்ந்து அரசியல் பேசும் தலைப்பாகையணிந்த வாசிக்கத் தெரிந்த வயோதிபங்கள்.

வட்டமிட்டு அவர்கள் வாசிக்கக் கேட்கும் சில கை நாட்டுக்கள். அத்தோடு அவனுக்கொரு மேரி.

பிடிவாதக்காரி!

பக்கத்து வீட்டுத் தூரத்தையே அதிக தூரமாகக் கருதும் கிராமத்துச் சிட்டுக்கள். வயதுக்கு வந்ததும் வயலுக்கு வராத சில வைராக்கிய காரிகள்.

வேலிக்கு மதில்களில்லாத கிராமத்தில் மார்புக்கு மட்டும் தாவணி மதில் தயாரிக்கும் பல தங்க நிலாக்கள்.

அதிலொன்று அவனின் நிலா.

அவனொரு கவிதைக்காரன்; எழுதுவான்.

மேரி....
பாலியலில் நான் பாலர்.
நீ ஐந்தாம் ஆண்டு!



சிணுங்குவாள் வலிக்குமாறு அவனைக் கிள்ளுவாள்.

வாதாடி வாதாடி அவனிடம் தோற்றுப் போவாள்.

கோபத்தில் கொஞ்ச நேரம் ஊமையாகிப் போவாள்.

மேரி உன் ஊடல் 'கொஞ்ச நேரம் தான்' என்று இரட்டையாகப் பேசி அவளை இறுக அணைக்க அவளின் உதடுகள் முத்தத்திற்கு லீவு கேட்க முடியாமல் மூச்சுத் திணறும் இந்நேரம் இரவாகியிடும்.

மறுவிடியலில் மூங்கில் காட்டுக்குள் அவளின் மடியில் கிடந்தவாறு தன்னையெழுதும் படி எச்சரிப்பாள். ரோய் தன்னை மீறி எழுதுவான். தானொரு மகா கவிஞன் என்ற திமிர் பிடித்தவனாய் அவளை வர்ணிப்பான்.

நீ சிரிக்கிறாயா
ராகங்கள் சமைக்கிறாயா,
சிகையில் எந்த மேகத்துண்டு
என்னை மீறி
ஏறி உட்கார்ந்தது?

இன்பமாய் வாழ்ந்த அவர்களின் காதலுக்கும் ஊருக்கும் அன்றையொரு இரவு சாவு மணியடிக்க அவர்கள் தடம் புரண்டு வெவ்வேறு இடத்துக்கு தூக்கிவீசப்பட்டார்கள். அந்த ஊர் மக்களின் வாழ்க்கை அன்றுதான் தடம் புரண்ட சங்கதியை தனக்குள் சகித்துக் கொண்டது. ஆனால் ரோயும் மேரியும் விலாசம் தெரியாமல் இன்றுவரை தவிப்புகளுக்குள்ளேயே தங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

'மேரி நீ எந்த முகாமிலிருக்கிறாய்?'

நான் இப்போது நமதூர் வந்து விட்டேன். நீயும் வந்துவிடு. வாய்க்காலிடம் சொல்லிக் கொண்டிருந்த ரோயின் விழிக்குள் ஒரு மழைத்துளி வந்து ஒங்கியடித்தது.

அவன் பொக்கெட்டுக்குள்ளிருந்த கைக்குட்டையை மெதுவாக எடுத்து மேரி இதுவரை நீ தந்த இந்தக் கைக்குட்டை எனது கண்ணீர்த்துளிகளை மட்டுமே தத்தெடுத்துக் கொண்டிருந்தது. இன்றுதான் முதல் முதலாய் ஒரு மழைத்துளியையும் இதற்குள் கலந்து விடப் போகிறேன். என்றவாறு மழடித் துளியைக் கைக்குட்டைக்கு வலிக்காமல் கவனமாகக் கைப்பற்றினான்.



படிப்பகம்

www.padippakam.com

# 'ஒரே ஒரு ஊரிலே..'

கிண்ணியா அமீரலி

தலைமுடி வெட்ட முப்பது ரூபாய் சேர்... 'சேவ்' பண்ண பத்து ரூபாய் சேர்...'என்ற சல்மான் நானாவிடம் பத்து ரூபாயைக் கொடுத்து - 'தலையில் சவரம் பண்ணிவிடு!' என்று சொல்லி வயிறு புண்ணாகும்படி சிரிக்க வைத்த 'றகுமான் சேர்' எனக்கு சொன்ன கதையைத்தான் சொல்லப் போகிறேன்.

முதலில்-

யார் இந்த றகுமான் சேர்? அறிவுப் பொக்கிஷம்! நடந்து வரும் புத்தகம்! நகைச்சுவைகள் தத்துவம்.

எலி வராமல் தடுப்பதற்காக தயிர் டின்னில் 'பூனை'யின் படத்தை ஒட்டியும் - எறும்பு வராமலிருக்க சீனி போத்தலில் 'மிளகாய்' என்று எழுதியும்- வைத்த றகுமான் சேரை பாரதிராஜாவுக்கு யாராவது அறிமுகம் செய்து வைத்தால் புண்ணியம்.

ஐதுரூஸ் நானாவின் கடையில் தோசை வாங்கிப் போக வந்த றகுமான் சேர்....

'தோசை மட்டும்தான் காசு... 'சம்பால்' சும்மா...? என்றதும், 'அப்படியா... ரொம்ப சந்தோஷம்... அப்படீன்னா கொஞ்சம் சம்பால் தா..... வீட்டில பழைய சோறு கிடக்கு....'என்றாராம்.

கோழிக்கூடுகளுக்குப் பக்கத்தில்..... பதுங்கிப் பதுங்கி வந்த கள்வனிடம்... 'புடிச்சித் தரட்டுமா?' என்று கேட்டாராம்.

சின்ன வயதில்... சித்திரப் பாட சேரிடம் 'செத்த நாய்' அல்லது 'கருவாடு' வரைந்து தருமாறு அடம் பிடித்துஅழுதாராம் இந்த றகுமான் சேர்.



ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இவர் பண்ணிய அட்டகாசங்கள் அநேகமாம்; ஆனாலும்... எல்லோரும் இவரோடுதான் சிநேகமாம்.

அதிகாலை ஐந்துமணிக்கு வந்த முதலாவது சீ.டீ.பி..பஸ்ஸைக் கை காட்டி நிறுத்திக் கண்டக்டரிடம் சிகரட்டுக்கு நெருப்புக் கேட்டார் என்றால்... றகுமான் சேரைப்பற்றிக் கேட்கவா வேண்டும்?

'பிரச்சனைக்கு எந்த ரானா'சேர் வரும்... பெரிய றானாவா? சின்ன ரானாவா?' என்று கேட்டேன். சிரித்துக் கொண்டே சொன்னார் றகுமான் சேர்; 'பெரிய பிரச்சனை என்றால் பெரிய றானா...'சின்னப் பிரச்சனை என்றால் சின்ன ரானா...

நான் கிண்ணியாவுக்கு வந்தால்.... றகுமான் சேரைச் சந்திக்காமல் வருவதே கிடையாது.

'அப்படியா.... ரொம்ப சந்தோஷம்... தினமுரசுக்கு என்னைப் பத்தி நீ எழுதுறதும்... ஓ...கே... தாராளமா எழுது... தினமுரசு பரவாயில்லப்பா... நான் கேட்டதாகச் சொல்லு....? என்றார் றகுமான் சேர். கதை கேட்கப் போன என்னிடம்... 'தம்பி... கவனமாகக் கேட்டுக்கோ... நேற்று நான் ஒரு கனவு கண்டேன். கனவில்... ஆயிரம் ரூபாய் நோட்டுடன் ஒரு கடைக்குச் சென்றேன். புரியாணி சாப்பிட்டேன். வட்டிலாப்பம் சாப்பிட்டேன். வாழைப்பழம் சாப்பிட்டேன். விரும்பிய எல்லாவற்றையும் சாப்பிட்டேன். ஆனாலும் ஒரு மனவருத்தம் தம்பி.. மிச்சக் காசு வாங்குவதற்கிடையில்- விழிப்பு வந்து விட்டது எனக்கு' என்று கூறிச் சிரித்த றகுமான் சேர் 'சரி... நாளைக்கு வா... கதையைச் சொல்கிறேன்' என்றார்.

மறுநாள்-

றகுமான் சேருடன் மிகவும் நெருக்கமான நண்பன் கபூருடன் எழிலரங்கு மைதானத்திற்கு அவரைச் சந்திக்கச் சென்றேன்.

றகுமான் சேர் வந்தார்.

'கதையை ஆரம்பிக்கலாமா...?'

'சொல்லுங்க சேர்..'

'ஒரே ஒரு ஊரிலே...' கதை சொல்லத் தொடங்கினார்.

'ம்.. சொல்லுங்க சேர்..'-நானும் கபூரும் மிகவும் ஆவலுடன் அமைதியாக இருந்து கதை கேட்டோம்.....

'ஒரே ஒரு ஊரிலே...'- என்று மீண்டும் ஆரம்பித்தார்.

'ம்... ஒரே ஒரு ஊரிலே...'

'அங்கே ஒருத்தனுமே இல்லத் தம்பி'

# ஓடிப்போனவள்

ஜெயந்திபுரம் இதயா

அன்று ஞாயிற்றுக் கிழமை விடுமுறை நாள். கோயிலுக்கு போயிற்று வரலாம் என்று அவசர அவசரமாக உடுத்திக் கொண்டிருந்த என்னை எனது நண்பி பிரபா அழைக்கும் சத்தம் கேட்டு வாசலிற்கு விரைந்தேன். "ஏய் மலர் உனக்கொரு விசயம் தெரியுமா? நம்ம சாந்தி ஓடிட்டாளாம்."

"ஓ எனக்கு நேற்று காலையிலேயே தெரியுமே." ஊர் வம்பளக்கிறதில் இவள் மகா கெட்டிக்காரி. யார் ஓடினா இவளுக்கென்ன? மனதிற்குள் நான் அர்ச்சனை செய்துக்கொண்டேன். பிரபா விட வில்லை தொடர்ந்தாள். "இதுக்கு அந்த சசிசேர் தான் காரணம்."

"அப்படியா!" என்றேன் நான்.

அன்று பாடசாலை முழுக்க இதே கதைதான். ஊருக்குள்ளும் கதை பரவி விட்டது. அக்கம் பக்கத்து வீட்டார் உறவினர் நண்பர் அனைவரும் தங்கம்மாவின் வீட்டுக்கு வந்து விசாரித்துப் போயினர்.



"சொறிக்கல்முனைப் பாடசாலையில் ஆசிரியராக இருக்கும் சசி சேர் சாந்தியின் வீட்டுக்கு அடிக்கடி வந்து போறதும் அவர்கூட சாந்தி சேர்ந்து போனதையும் நான் என் இரண்டு கண்ணாலையும் பார்த்திருக்கின்றேன் பல தடவை. சொன்னா கோவிச்சுக்குவாங்களோன்னு இருந்திட்டன். எப்படி எப்படி போர் எடுக்கணும்னு தலையில விதிச்சப்படிதான் நடக்கும்" என்று பக்கத்து வீட்டு ராசாத்தியக்கா அருகிலிருந்தவளின் காதிற்குள் கிசு கிசுத்தாள்.

சாந்தி நல்லாப் படிச்சு பெரிய உத்தியோகம் வாங்கணும்னுதான் நான் நினைச்சிட்டிருந்தன். அவள் நேர்மாறா செய்திட்டாளே என்று தங்கம் அலுத்துக் கொண்டாள் தனக்குள்.

மறுதினமே வெளியான பத்திரிகை அனைத்திலும் கொட்டை எழுத்துக்களில் சாந்தியின் செய்தியே பிரசுரமாகியிருந்தது. ஊர் முழுவதும் இதே பேச்சாகவே இருந்தது. சாந்தியின் அப்பா அன்ரனி கந்தோர் வேலை விடயமாக வெளியூர் சென்றிருந்தவர் விஷயமறிந்து அலறியடித்து ஓடி வந்தார். வந்ததும் வராததுமாக மனைவியிடம் எங்கடி அவள் சாந்தி என்றார்.

பள்ளிக்கூடத்துலதானுங்க என்றதுதான் தாமதம் வந்த களைப்பிற்கு சிறிது தண்ணீர் கூட அருந்த மறந்தவராய் வந்த வேகத்திற்கே பாடசாலைக்கு ஓடினார். அங்கே பாடசாலை மாணவர்கள் நிறைந்திருந்தனர். எல்லோரையும் விலக்கிக் கொண்டு ஓடிய அன்ரனி மகளை கட்டியணைத்து முத்தமிட்டுப் பாராட்டினார்.

"அகில நாடுகளிற்கிடையில் நடந்த ஓட்டப் போட்டியில் உங்கள் மகள் முதலாவதாக ஓடி தங்கப் பதக்கத்தை வென்றிருக்கிறார். இதற்கெல்லாம் காரணம் இதோ அல்லும் பகலும் பாடுபட்டு பயிற்சியளித்த சசி மாஸ்ரரிற்கு முதலில் வாழ்த்துச் சொல்லுங்கள்" என்றார் அதிபர்.

"பெஸ்ட் ஆப்த லக்" என்று கையை நீட்ட அங்கே புன்னகையுடன் கையை நீட்டினார் சசி சேர்.

# செல்ல வைத்தவர்கள்

தேவகடாட்சம்

"டேய்! ரமணன்! கொஞ்சமெண்டாலும் பொறுப்போடு நடக்கப்பாரடா! தனிய கூலி வேலை செய்து உழைச்சு இந்த குடும்பத்த காப்பாத்திறன். உனக்குக் கீழ் ரெண்டு தங்கச்சிமார் இருக்குதுகள். இதுகளப்பத்தி யோசிக்காம நடக்கிறியே. எப்ப இந்த 'அப்பா' என்ற 'மெஷின்' இயங்காம நிக்குதோ, அண்டைக்குத்தான் தெரியும் உனக்கு!" என்று இதய அடித்தளத்தில் உறைந்திருந்த உணர்வுகளை வார்த்தையால் கொட்டியவண்ணம் இருந்தார் பொன்னம்பலம்.



இவை எதையுமே காதில் போட்டுக் கொள்ளாதவாறு அவரின் மகன் ரமணன், கண்ணாடியின்முன் நின்று கொண்டு, இப்போதைய நாகரிகத்திற்கு ஏற்றல் போல் தன் தலைமுடியை அலங்கரித்துக் கொண்டு இருந்தான்!

"நான் சொல்லுறது காதில விழாதோ உனக்கு" என்று மேலும் ஒரு உச்ச தொனியில் கேட்டார் பொன்னம்பலம்.

"ஓம்! ஓம்! கேக்குது! நான் என்ன படிக்காமலா இருக்கிறன். ஆனால் பள்ளிக் கூடத்தில் விளையாட்டிலும் சேத்துட்டாங்க! அந்த கிரிக்கெட் விளையாட்டில நான் திறமையா இருக்கிறதால அதுக்குரிய சாமான்கள் வாங்கச் சொல்லி 'சேர்' சொல்லியிருக்கார்." என்று எதையுமே லட்சியம் செய்யாதது போல் கூறினான் ரமணன்.

"மகன்! நீ கெட்டிக்காரன்! இல்லை எண்டு சொல்லல்ல! இந்த காரியங்கள் எல்லாம் நமக்கு பொருந்தாது. மேலே பார். ஓலையில இருக்கிற ஓட்டையால நட்சத்திரங்களை எண்ணலாம். சாகாம சீவனோடு கிடந்தா உன்ர படிப்பிற்காக எப்பிடி கஸ்டப்பட்டாலும் உழைச்சுத்தருவன். ஆனா, இந்த 'பணக்கார விளையாட்டிற்கு' பணம் கட்ட என்னால முடியாது! நீதான் யோசிச்சுப்பார்! இந்த முறை சோதினை எடுக்கிற நீ, கவனமாக படி! நீ தான் குடும்பத்த காப்பாத்திற மூத்த பிள்ளை" என்று தன் மகனின் போக்குக்கு அமைவாக அடங்கி பவ்வியமாக கூறினார் பொன்னம்பலம்.

தெருவெங்கும் அல்லோலகல்லோலம். பாடசாலைவிட்டு வரும் தமிழ் மாணவர்களை பொலிசார் கைது செய்து காவலில் வைத்திருந்தார்கள். பெற்றோருக்கு காரணம் புரியாது பதறிக் கொண்டு நின்றார்கள்! அதில் பொன்னம்பலம் குடும்பமும் இணைந்து கொண்டிருந்தது. அடுத்த நாள்! பெரும்பாலான மாணவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். ரமணனோடு சோந்து நான்கு பேர் விடுதலை செய்யப்பட வில்லை. பொன்னம்பலம் போகாத 'பெரிய' இடங்கள் இல்லை. பொலிஸ் நிலையத்தில் தனது நிலையையும், தன் மகனின் கல்வி நிலையையும் பலமாக எடுத்துரைத்துக் கொண்டு நின்றார்.

நான்கு நாட்களின் பின்னர் ரமணனுக்கு விடுதலை. தாயும், தகப்பனுமாக சேர்ந்து ரமணனின் வெளிக்காயங்களுக்கு மருந்துகள் இட்டனர். ஆனால் ரமணனின் உட்காயங்களுக்கு..... அவர்களால் மருந்திட முடியவில்லை.

"மகன்! என்ன கேட்டு அடித்தார்கள்?" என்று மெதுவாக கேட்டார் பொன்னம்பலம்.

மெதுவாக சிரித்தபடி "கேட்கட்கூடாத கேள்விகளை கேட்டு எனது முழங்கையை பார்த்தார்கள். நான் 'கிரிகெட்' விளையாட்டிற்கு பயிற்சிசெய்யும் போது, முழங்கையில் ஏற்பட்ட அந்த உராய்வு காயத்தை கேட்டுத்தான் கூட...." என்று முகத்தை மூடிக் கொண்டு அழுதான். குடும்பமே சேர்ந்து அழுதது.

அன்று! பாடசாலைக்குச் சென்ற ரமணன் வீடு திரும்பவில்லை. அவனோடு நான்கு பேர் இல்லை. இப்போது பொன்னம்பலத்திற்கு புரிந்தது. அவன் அங்குதான் போய்விட்டான். போகவைத்து விட்டார்கள்.

ரமணன் தனக்குத் தெரிந்த பாதையில் சென்றுவிட்டான். பொன்னம்பலத்தால் தேடவும் முடியாது. வெளியில் கூறவும் முடியாது.

# உறவு என்பது எதுவரை...

நிந்தவூர் எம். ஹிதாயத்

அன்பின் சுரேஷ்க்கு,

இருபதாம் திகதி எனக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது. நீங்களும் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும். உங்களுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன்.

இப்படிக்கு
என்றும் உங்கள்
ரோஹினி.

கடிதத்தை மடித்துக்கொண்டே நாட்காட்டியை பார்த்தேன். இன்று பத்தொன்பதாயிற்றே. ஊருக்குப் போவதானால் எப்படியும் ஒருநாள் வேண்டும். அவள் திருமணத்திற்குப் போவது சாத்தியமில்லை. இரண்டு நாள் கழித்துப் போகலாம். போகா விட்டால் கோபப்படுவாளே. சமாளித்துக் கொள்ளலாம்: சிந்தித்துக் கொண்டே மனேஜரிடம் சென்றேன்.

ஒருவாரம் லீவு போட்டு விட்டு. இரண்டு நாள் கழித்து ஊருக்குப் புறப்பட்டேன். போகும் போது கையோடு ரோஹினிக்குப் பிடித்தமான ஆனால் யாராலுமே கொடுக்க முடியாத பெறுமதி மிக்க பரிசையும் அவளுடைய கல்யாணப் பரிசாக வாங்கிக் கொண்டேன். (பரிசு என்ன என்று சொல்ல விரும்பவில்லை. சொல்வது முறையுமல்ல. என்னவாக இருக்குமென்று நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள்) ஊருக்கு செல்வதற்கு முன்னர் ரோஹினி யார் என்பதைச் சொல்லி விடுகிறேன். பல்கலைக் கழகத்தில் நானும் அவளும் படித்துக் கொண்டிருக்கும் போது நூல் நிலையத்தில் எங்களுக்குள் ஏற்பட்ட புத்தக மோதல் பின் காதலாக..... மன்னிக்க வேண்டும். நேசமாக வளர்ந்தது. பவ்யமாக பேசிக் கொண்டோம். பரஸ்பரமாய் சிரித்துக் கொண்டோம். அந்நியோன்னியமாகப் பழகினோம்.

அவளும் நானும் ஓர் ஊர் என்பதால் எங்கள் நட்புக்கு இடைஞ்சல் இல்லை. தொடர்ந்தோம். இன்று வரை தொடர்கிறோம்.

மறுநாள் காலை பதினொரு மணியளவில் ஊர்வந்து சேர்ந்தேன். குளித்து பயணக் களைப்பு தீரவேண்டும் என்பதற்காக சற்று ஓய்வெடுத்தேன். மாலையில் ரோஹினியின் வீட்டுக்குப் போனேன்.

அங்கே அவள் எனக்காகவே காத்திருந்தவள் போல் என் கார் சத்தம் கேட்டவுடனேயே வாசல் படிக்கு வந்து விட்டாள். காரில் இருந்து இறங்கிய என்னை புன்ன கையோடு வரவேற்றாள்.

"வாங்க சுரேஷ்! உங்களை அன்றே எதிர் பார்த்தேன். ஏன் வரவில்லை?" என்றாள் கோபமாக.

"ஐ அம் சொறி ரோஹினி. உன் இன்விடேஷன் கார்ட் பத்தொன்பதாம் திகதிதான் கிடைத்தது. என்னால் வர முடியல்ல. கோபமா?"

"கோபந்தான். இப்போவாவது வந்தீங்களே... சரி உள்ளே வாங்க. இருந்து பேசலாம்." என்றவள் உள்ளே போக அவளைப் பின்தொடர்ந்தேன். நாட்காலியில் உட்கார்ந்த நான் கையிலிருந்த பரிசுப் பொதியை அவளிடம் நீட்டினேன். அதை வாங்கிக் கொண்ட அவள் எந்தவித சலனமும் இல்லாமல் என் பக்கத்தில் உட்கார்ந்து பொதியைப் பிரிக்க ஆரம்பித்தாள்.

நான் கொடுத்த பரிசை விரித்துப் பார்த்த ரோஹினி,

"பியூட்டி புல்! இதை எங்கே வாங்கினீங்க சுரேஷ்?" என்றாள் ஆச்சரியத்தை கண்களில் காட்டிக்கொண்டே.

"நான் வரும்போது கொழும்பிலேயே வாங்கி வந்தேன். அது சரி எங்கே உங்களுடைய கணவர்? ஆளையே காணோம்" என்றேன்.



"அவர் ஒரு வேலையாக வெளியே போயிருக்கிறார். வந்து விடுவார்" என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவள் கணவரும் வீட்டுக்குள் நுழைந்தார். பக்கத்திலிருந்த ரோஹினி மரியாதைக்காக எழுந்துக் கொண்டாள். என்னை அவரிடம் அறிமுகப்படுத்தி வைத்தாள். நான் புன்னகைத்தேன். பதிலுக்கு அவரும் புன்னகைப்பார் என்னோடு மனம் திறந்து பேசுவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அது நடக்கவில்லை. மாறாக நாங்கள் இருவரும் அருகருகே அமர்ந்திருந்தது அவருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்க வேண்டும். எதுவும் பேசாமல் உள்ளே போனார். எனக்கு என்னவோ போல இருந்தது. இப்போவே எழுந்து ஓடிவிடலாமா என்று கூட நினைத்தேன். ஆனால் முடியவில்லை.

என்னை விட்டு அகன்று சென்ற ரோஹினி ஐந்து நிமிடம் கழித்து காப்பி டம்ளருடன் வந்தாள். அதை வாங்கி அவசரமாக அருந்திவிட்டு எழுந்து விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தேன். காருக்குள் ஏறி சாவியைத் தேடினேன். சாவியைக் காணவில்லை. அதை மறந்து போய் ரோஹினியின் வீட்டில் வைத்துவிட்டு வந்துவிட்டது ஞாபகத்திற்கு வந்தது. எடுத்து வர எண்ணி மீண்டும் ரோஹினியின் வீட்டுப் படியை நெருங்கிய போது ரோஹினியும் அவள் கணவரும் வாக்குவாதமாய் பேசிக்கொண்டிருப்பது எனக்குக் கேட்டது.

"யாரடி அவன்? உனக்கும் அவனுக்கும் என்னடி தொடர்பு? அவனுக்கு வெவ்வளை இருந்தால் என் கண்முன்னாலேயே உன் பக்கத்திலிருந்து தொட்டுப் பேசுவானாடி?" அவள் கணவர் ஆவேசமாய் சீறினார்.

"ஏன் இப்படியெல்லாம் பேசறீங்க? நான் தான் அப்பவே சொல்லிட்டேனே. அவர் என் கூடப்பிறந்த அண்ணன் மாதிரின்னு. இன்னும் என் மேலே உங்களுக்கு நம்பிக்கை வரலை?"

ரோஹினி அழுதாள்.

"யாரடி நம்பரது? கண்டவனெல்லாம் உன்னைத்தங்கச்சி என்று கூப்பிடுவான். அவனையெல்லாம் நீ அண்ணனென்று கட்டிப் பிடிச்சிட்டு அழுவே.!"

"அவரு ஒன்டும் கண்ட கண்டவரு இல்லை!"

"என்னையா எதிர்த்துப் பேசறே?"

ரோஹினியின் கன்னத்தில் பளாரென அறை விழும் சப்தம் கேட்டது. இனிமேலும் என்னால் அவ்விடத்தில் நிற்க முடியவில்லை. என் இதயம் இடிந்துவிடும் போல் இருந்தது. என் உடம்பெல்லாம் உதறல் போட்டது. எனக்கு மயக்கம் வந்துவிடும் போல் இருந்தது. சற்றேனும் தாமதிக்காமல் உள்ளே நுழைந்தேன்.

என்னை எதிர்பார்க்காத ரோஹினி பேயறைந்தவள் போல் உறைந்து போய் நின்றாள். அவள் கன்னங்களை கண்ணீர் துளிகள் கழுவிக் கொண்டிருந்தன. அவை என்னைப் பார்த்து பரிகாசமாய்ச் சிரிப்பது போலவும் எங்கள் உறவுக்கு 'குட்பாய்' சொல்வது போலவும் எனக்குத் தோன்றியது. என்னைக் கண்டதும் அவள் கணவன் கோபமாய் ஒரு பார்வை பார்த்துவிட்டு உள்ளே போனார். நான் எதுவும் பேசாமல் சோபாவில் கிடந்த சாவியை கையில் எடுத்துக் கொண்டு குனிந்த தலை நிமிராமல் அவள் வீட்டை விட்டு வெளியேறினேன்.

வாசற்படியை கடக்கும் போதே தீர்மானித்துக் கொண்டேன். இனிமேல் இவள் உறவைக் கலைத்து விட வேண்டும்.'

*****



படிப்பகம்

www.padippakam.com



# நோய் காணா ஆசை!

தருவது—ரசிகன்



போர் முகம் கண்டு திரும்பிய காளை, தன் அகமுடையாளின் நகை முகம் காண புரவிமீதேறி அம்பென வந்தான்.

புன்னகை போதும், பூக்களும் தோற்கும். கண்ணசை போதும், காளையின் நெஞ்சம் போர்க்களமாகும்!

சல சலத்தோடும் அருவிக்கரையில் கல கல இதழ்கள் வாடிக்கிடக்க, வண்டைப் பிரிந்த பூச்செண்டாக காதலி இருந்தாள்.

மெல்ல நடந்து, வெல்லச் சுவையை மனதில் உணர்ந்து, களவுக் கலையில் வல்லவன் போல காளை நகர்ந்து கோதையவளின் தோள்தனைத் தொட்டான்.

வாடிய இதழ்கள் சட்டென்று மலர்ந்தன. தேடிய வண்டு தோளினில் கொட்ட மங்கையின் மனதில் மகரந்தம் சுரந்தது.

தோளினைத் தொட்டவன் கைகளை விரித்துக் கண்களைப் பொத்தினான்.

"என்னடி சுகமா, உன்னவர் எங்கே? கண்ணவர் பிரிய உடம்பிலே சுரமா?"

குரலை மாற்றி பெண்குரலில் நாடகமாடினான்.

தோளில் விரல் தொட்டபோதே நெஞ்சில் தேன் கொட்டியதே! தெரியாதோ எனக்கு யாரென்று? தொட்டது யார் என்று மனதில் பட்டிருக்காவிட்டால் தேன் கொட்டியது போலன்றோ துடித்திருப்பேன். விபரம் புரியாமல் நாடகமன்றோ நடத்திக் கொண்டிருக்கிறார்.

புறக்கண்கள் காண்பது பாதி; அகக் கண்கள் காண்பது மீதி. அதுதானே காதலில் உள்ள சங்கதி!

நாடகமா போடுகிறார், நாமும்தான் நடித்துப் பார்க்கலாமே.

"சும்மா போடி. சுரத்திற்கு நீயோ மருந்துதர முடியும்? மருந்துதர வேண்டியவர் எங்கு விருந்துண்டு கொண்டிருக்கிறாரோ?"

"அப்படி சொல்லாதேயடி, அவர் சுத்தத் தங்கம்."

"தங்கம் என்பதால் தானேயடி கொள்ளைபோய் விடுமோ என்று குழப்பம். எடுப்பவர் கையிலெல்லாம் இடம்மாறிக் கொண்டிருக்குமடி தங்கம். யாரும் அணியலாம். அழகு பார்க்கலாம். களவும் கொள்ளலாம். கை தவறியும் போகலாம்."

"அபாண்டம், அபாண்டம்!"

பெண் குரலில் காளை கூவினான்.

"அபாண்டமில்லையடி, பண்டம். அழகான பண்டம். வாங்கலாம். விற்கலாம். உரசலாம். உருமாற்றலாம். தானிருந்த நிலையை தங்கம் மறந்தும் போகலாம்!"

"வாங்குவதற்கும் ஒரு தகுதி வேண்டாமோடி."

"போடி என் தோழி. தகுதியாம் தகுதி. வாங்கும் வசதியிருந்தால் வஞ்சக நெஞ்சையும் தங்கம் அலங்கரிக்கும். குள்ளநரிக் குணத்தார் கழுத்தையும் தங்கம் கௌரவிக்கும். தங்கம் தரமானதுதானடி. மறுக்கவில்லை. தங்கத்தை தமதாக்குவோர் எல்லோரும் தரமானவர்கள் என்று சொல்லாதே ஏற்கமாட்டேன்."

வாதிட்டால் தோல்விதான். மண்டியிட்டு பின்புறமாய் அமர்ந்து அவளை அணைத்திட்டான்.

"ஏமாந்துபோனாய், என்னமாய் ஏளனம் செய்துவிட்டாய்?"

"விரல் தொட்டால் போதும், விலாவாரியாக விபரம் என்மனம் சொல்லும். மேலும்..."

"என்ன மேலும்...?."

"தோழியின் விரல் பட்டால் தேகத்தின் சுரம் போகாது. தோழியின் கரம் ஒன்றும் இப்படி மோசமாகவும் இருக்காது. கண்களை பொத்தும் கைகள் கன்னத்தை வருடாது."

"அம்மாடி! பெண்களைப் பேதைகள் என்று சொன்னவனை சாட்டையால் வீச வேண்டும்."

"பேதைகளாய் இருந்தால்தானே சிலருக்குப் பிடிக்கிறது. ஏய்க்கவும், மேய்க்கவும் வசதி வாய்க்குமன்றோ?"

"எனக்குப் பேதைகளையும் பிடிக்காது, மேதைகளையும் பிடிக்காது!"

"யாரைப் பிடிக்குமாம்?"

"கற்றுத்தரும் போது மேதையாக, கற்றுக் கொடுக்கும் போது பேதையாக உள்ள உன்னைத்தான் பிடிக்கும்!"

"அருவியில் குளித்தமாதிரி உடம்பெல்லாம் குளிர்கிறதே!"

"தொட்டதால் தேக சுரம் சொல்லாமல் ஓடிவிட்டது. சுரம் போகும் முன்னே, சுகம் வரும் பின்னே."

வயிற்றில் கரம் வைத்து தன்னோடு சாய்த்துக் கொண்டான்.

வயிற்றில் தொட்ட விரல்கள் இசைமீட்ட நெருப்பில் பட்ட பஞ்சாய் அவள் மாற, தோளில் முகம் புதைத்து அவன் நெருப்பு வளர்த்தான்.

"மோசம்தான் நீங்கள்" என்றாள், உடல் திரும்பி அவன் மடியில் முகம் கவிழ்ந்து வெட்கத்தை அங்கே புதைத்துக் கொண்டாள்.

முகம் மறைந்தது. கரும் மேகமாய் கூந்தல் தெரிந்தது. குனிந்து உச்சியில் முத்தமிட்டான்.

முதுகு வருடி, நடு முதுகில் தாளமிட்டான். அவளுக்குள் நாணமிட்டான்.

"முத்தாரக் கட்டிலாய் முதுகுண்டு. மூன்று நாள் தூக்கம் பாக்கியுண்டு. தூங்கவா, தொடரவா" என்று கேட்டான்.

'தொடரலாம்' என்று சொல்லவா முடியும். நெஞ்சம் அப்படித்தான் சொல்லும், கொஞ்சும் இதழ்கள் குவிந்து வெட்கம் காட்டுமே தவிர வெளியே சொல்லாது.

மடியில் தவழ்ந்த மான்குட்டி எழுந்து கொண்டது.

தூங்கலாம் முதுகில் அல்ல, மரநிழலில். மலர் படுக்கையில் மல்லாந்து தூங்கிவிட்டு வாருங்கள்."

"நான் சொன்னது பொய்த் தூக்கத்தை!"

"அது என்ன பொய்த் தூக்கம்?"

"ஐம்புலனும் ஒன்றாகி, அகிலமொன்று இருப்பதையே தாம் மறந்து, மோகமெனும் வெள்ளத்தில் களிப்பென்னும் கரை நோக்கிச் செல்லும்வரை நாமிருவர் என்பதையே மறந்திருத்தல் தூக்கம்தானே?!"

"போதும். போதும்!"

அவன் மார்பில் விரலால் சுரம் மீட்டிக் கொண்டிருந்தவள் விலகி அமர்ந்தாள்.

"குறையென்ன கண்டாய் சொல்?"

"கரை சென்றுவிட்டால் நான்வேறு நீர் வேறோ?"

"அய்யய்யோ இன்ப வேள்வியைச் சொன்னேன்."

"என் கேள்விக்கு பதிலைச் சொல்லுங்கள்."

"கண்வேறு, கண்மணி வேறோ? பூ வேறு, பூ இதழ் வேறோ? நீ வேறு நான் வேறோ? ஐயம் இதிலே நியாயமாமோ?"

"வேண்டாம். தொட வேண்டாம்."

காளை பாலை நிலம்போல வறண்டு போனான்.

அவள் நோக்கி நகைத்தாள். அடுத்த நொடியே அவன் மார்பில் சரிந்தாள்.

அணைத்தபடி அவன் கேட்டான்.

"நமக்குள் நயம் இருக்கலாம். இன்பமயம் இருக்கலாம். ஐயம் இருக்கலாமோ?"

"கூடாது, கூடவே கூடாது."

"சொல்லுவது நீதானா? பின் எதற்கு ஐயப்பட்டாய்."

"அது ஒரு நாடகம்."

"ஏன் அந்த நாடகம்?"

"எப்போதும் ஏன் இன்பமாகவே இருக்கிறீர்கள்?"

"உன்னருகில் இருப்பதால்!"

"எப்போதும் இன்பமாகவே உங்கள் முகம் கண்டதால், சிறிது துன்பநோயை காண்போமே என்று மனம் சொன்னது."

"ஓஹோ இப்போது என் மனம் என்ன சொல்கிறது தெரியுமா? இன்ப நோய்க்கு உடனே தேவை மருந்தென்று!"

மருந்து கிடைத்தது.

காதலனிடம் துன்பநோயைக் காணவிரும்பும் காதலியை திருவள்ளுவரும் காட்டுகிறார். நாம் அதைக் கவனிப்போம்.

"புல்லா திராஅப் புலத்தை அவர் உறும் அல்லல்நோய் காண்கம் சிறிது."

அதிகாரம்–131–குறள்–1301.

## இலக்கிய நயம்

## குறுக்கெழுத்துப் போட்டி இல—125

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | ■ | 3 | ■ | 4 |
| | ■ | 5 | 6 | | | |
| 7 | | | | | ■ | |
| | ■ | | | ■ | 8 | |
| ■ | 9 | | | ■ | | ■ |
| 10 | | | ■ | 11 | | |
| ■ | | ■ | 12 | | | ■ |

### இடமிருந்து வலம்

01. இளமை பூத்துக் குலுங்கும் இவளிடம்.
05. இதனைக் கடைப்பிடிக்கும் சில அரசியல் வாதிகள் நம்நாட்டிலுமுண்டு.
07. எக்காரியத்தையும் இது இன்றி நடத்துவது சிரமம் தான்.
09 தமிழர் தம் இல்லங்களின் முன்பு கண்களைப் பறிக்கும்.
10. வரட்சி காலங்களில் குழாயடியில் வரிசையாக வைக்கப்பட்டிருக்கும்.
11. நம்மை எப்போதும் தொடர்வது; ஆனால், ஒளியுள்ள போதுதான்.
12. போலிகளை அசல்களாக்க உதவுவது.

### மேலிருந்து கீழ்

01. நம் நாட்டில் பெரும் அனர்த்தங்களை ஏற்படுத்தும் கொடியது.
02. நிலத்தில் யானை-கடலில் இது....?
03. தற்போதைய எமது வாழ்க்கையில் இவற்றை ஒவ்வொரு நாளும் சந்திக்கிறோம்.
04. துள்ளித்திரியும் காளைப்பருவத்து இளைஞன் இந்நிலை அடைந்ததும் அடங்கி விடுகிறான்.
06. இலங்காபுரியை அனுமான் இவ்வாறு செய்ததாக இராமாயணம் கூறுகிறது.
08. கடலுள் கிடைக்கும் இரத்தினம்.
09. இதன் காம்பை குலத்தைக் கெடுத்ததாகத் திட்டுவார்கள்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 11.11.1995இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-125
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-123ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 நா | 2 சி | ■ | 3 மு | ழு | ம | 4 தி |
| 5 க | றை | யா | ன் | ■ | ■ | ட |
| ரி | ■ | 6 க | ம் | 7 ப | ள | ம் |
| 8 க | ரு | ம் | ப | ல | கை | ■ |
| ம் | ■ | ■ | ■ | கா | ■ | 9 தீ |
| ■ | 10 அ | ரி | தா | ர | ம் | ■ |
| 11 க | லை | ■ | 12 சி | ம் | ம | ம் |

குறுக்கெழுத்துப் போட்டி இல. 123இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:

1. எஸ். சிவகுமாரன், கொழும்பு-6.
2. கே. செல்வமலர், புங்குடுதீவு.
3. பஸ்ருள் அலி, கம்பளை.
4. ஏ. நஸ்ரியா, வத்தளை.
5. திருமதி. சகாயமேரி பேரின்பராஜா, வாழைச்சேனை.
6. முகமது ஜலீல், பேருவளை.
7. எஸ். கிருஷ்ணானந்தன், நுவரெலியா.
8. செல்வி. சிவா தர்ஷினி, திருகோணமலை.
9. என். தஸ்பிஹா, புத்தளம்.
10. எம். லாபிர், பெரியமுல்லை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## சிந்தியா பதில்கள்

பாகிஸ்தான் அணியின் எதிர்காலம் எப்படியிருக்கும் சிந்தியா?

வி.எல்.ஹமீட், மருதானை.

சலீம் மாலிக் மீண்டும் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார். அவர் மீது லஞ்சக் குற்றச் சாட்டை சுமத்திய அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக விளையாடப் போகிறார். வாசிம் அக்ரமும் விளையாடுகிறார். அவுஸ்திரேலிய, நியூசிலாந்து சுற்றுப்பயணம் முடியும் போது உங்கள் கேள்விக்கு பதில் கிடைக்கும்.

□□

குருதிப் புனல்-முத்து, இரண்டில் எது தூள்? பதில் சொல்லாவிட்டால் எமது தலை வெடித்துவிடும்.

மா. கோணேஸ், கொழும்பு-6

உண்மையைச் சொல்வதானால் குருதிப் புனல் ஏமாற்றிவிட்டது. முத்து ஜனரஞ்சகம். கமலின் திறமைக்கு கமலே தீனி போட முடியவில்லையே! அர்ஜுனையும் விரயமாக்கி விட்டார்.

□□

பெண்களால் சாதிக்க முடியாதது உண்டா?

என். நுப்ரா, நுரைச்சோலை.

உண்டு, ஆணாக முடியாதே!

□□

கையெழுத்துக்கும், தலையெழுத்துக்கும் தொடர்பு உண்டா?

ஹப்பமத் பர்ஹானா, எலமல் தெனிய.

ஏன் இல்லை. இரண்டிலும் எழுத்து என்ற வார்த்தை பொதுவாக உள்ளதல்லவா.

□□

எந்தப் பெண்ணிலும் இல்லாத ஒன்று என் காதலியிடம் இருக்கிறது. என்ன செய்யலாம்?

என்.ரீ.அமீனுதீன், அக்கரைப்பற்று-06.

ஒரு போனஸாக நினைத்துக்கொள்ளும்.

□□

லேட்டஸ்டாக பரவிய சர்வதேச வதந்தி எது?

வி.எம்.பர்சான், யடவத்த

சூரிய கிரகணம் வருவதால் பூமியில் எதுவெல்லாமோ மாறப்போகிறது என்றார்கள். ம்ஹீம் எல்லாமே இருந்த மாதிரி, இருந்த இடத்தில்தான் இருக்கின்றன.

□□

அன்புக்கும் காதலுக்கும் இடையே உள்ள வித்தியாசம் என்ன?

எஸ்.என். கமல், கொழும்பு-13.

முன்னதில் காமம் இருக்காது. பின்னதில் துளியுண்டு அளவாவது இருக்காமல் போகாது.

□□

ஹாய் சிந்தியா! இரவில் தூங்கும்போது கனவுத் தொல்லை தாங்கமுடியவில்லை, என்ன செய்யலாம்?

கரிமா சனூன், புத்தளம்.

கொசுத் தொல்லை என்றால் வலை தேவை என்று தெரியும். கனவுத் தொல்லை என்றால் நீங்கள் வலை போடுகிறீர்கள் என்று தெரிகிறது.

□□

வாயாடியான ஒரு பெண்ணுக்கு வாய் பேச முடியாத ஒரு ஆண் கணவனாக வாய்த்தால் வாழ்க்கை எவ்வாறு அமையும்?

திருமதி அஸீஸ், உடத்தலவின்ன.

கலகலப்பாக இருக்கும். இருவருமே பேசமுடியாவிட்டால்தான் ஒரு மாதிரியாக இருக்கும். நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும் என்று கணவன் கொஞ்சம் ஊக்குவித்தால் போதும்.

□□

சினிமாவின் பாதிப்பு நம் நாட்டிலும் இருக்கிறதா?

கே.விஜயன், அம்பாந்தோட்டை.

வீடியோவில் 'ஆசை'படம் பார்த்துவிட்டு வாண்டுப் பையன்கள் கூட 1.4.3 சொல்லிக் கொண்டுதிரிகிறார்கள். **(I LOVE YOU)**

(I ஒரு எழுத்து, **LOVE** நாலு எழுத்து. **YOU** மூன்று எழுத்து.)

□□

இந்த உலகத்திலேயே விலை மதிக்க முடியாதது எது?

செல்வன்-க.ஹரிகராஜ், ஆரையம்பதி-01

மனித உயிர். (நம்மவர்களுக்கு புரியுமா?)

□□

இயற்கைக்கும் செயற்கைக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

தாஹா பயறூஸ், அக்கரைப்பற்று-06

முன்னது தானாக ஆடும். பின்னது ஆட்டுவித்தால்தான் ஆடும்.

□□

என்.டி.ராமராவ் என்ன செய்து கொண்டிருக்கிறார்?

கே.தயாளன், கண்டி.

அன்பே பார்வதி! என்னைப்பார். இனியும் அரசியலுக்கு வரவேண்டுமோ என்று நினைத்துப் பாரம்மா. வேண்டாம். நீ என்னைப்பார் நான் மட்டும் அரசியலைப் பார்த்துக்கொள்கிறேன் என்று சமாதானம் செய்து கொண்டிருக்கிறார்.

□□

ஓசியில் நூல்களை வாங்கி திருப்பிக் கொடுக்காதவர்களைப்பற்றி ஒரு சில வரிகள் கூறுங்கள்?

கதிரேசன், அட்டபாகை

நீங்கள் "கொடுத்த வாக்கையும், கொடுத்த பொருளையும் திரும்ப வாங்குறதில்லை" என்று நினைக்கிறார்களோ?

□□

காதல் தெய்வீகம் என்கிறார்களே?

எம்.ஐ.அஷ்ரப், சாய்ந்தமருது- 02.

அதுதான் தினசரி தரிசனம் கேட்கிறார்களோ (தினமும் ஆலயம் தொழும் ஆவல் தான்)

□□



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 5

அரசவைக்கு விசுவாமித்திர மா முனிவர் வந்து கொண்டிருக்கிறார் என்று வாயிற் காவலன் ஒருவன் கூறியதும் அவையில் விபரிக்க முடியாத ஒரு திகைப்புணர்வு பரவியது. மாமன்னன் தசர தனுக்கு மகிழ்ச்சி ஒரு புறம்; மனப் பயம் மற்றொரு புறம். பன்நெடுங்காலம் பெரும் தவமியற்றி பிரம்மரிஷி என்ற பட்டத்தினைப் பெற்ற அம்மாமுனிவரை தேவர்களாலும்-மூவர்களாலும் போற்றிப் புகழப்படும் மாபெரும் தவசியை-திடீரென்று தன் அரசவைக்கு வரும் அம்மகானை-எவ்வாறு வரவேற்பது என்று புரியாமல் தவித்தார் தசரதர்.

அரசனின் பதட்டத்தை உணர்ந்த குலகுரு வசிட்டமாமுனிவர் தானே முன்னின்று-நொடிப்பொழுதில் ஏற்பாடு களைச் செய்தார். முனிவர் முன்செல்ல அரசர், அமைச்சர்கள் மற்றும் பிரதானிகள் பின்சென்று அரண்மனை வாயிலை அடைந்தனர். பல சூரியர்கள் ஒன்றாகச் சேர்ந்து பிரகாசித்தால் எவ்வாறு ஜொலிக்குமோ அதேபோல தவவலிமையால் தெய்வீகப் பொலிவு பெற்ற மாமுனிவர் விசுவாமித்திரர் அங்கு தோன்றினார்.

வசிட்ட மாமுனிவர் வாஞ்சையோடு தழுவி வரவேற்றார். அரசர் முதல் அவையிலிருந்து அங்கு வந்த அனைவரும் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி விசுவாமித்திர முனிவரை வரவேற்றனர். அவைக்கு அழைத்து வந்து ஆசனமளித்து உரிய மரியாதைகளைச் செய்தனர்.





# விசுவாமித்திரர் என்றொரு வீரமா முனிவர்

அனைவருக்கும் ஆசி வழங்கிய முனிவர் அரசருடைய சுக நலன்களை விசாரித்தார்; குடி மக்களின் நலன்களுக்காக மன்னவர் வழங்கிவரும் வசதி வாய்ப்புக்களைப் பற்றியெல்லாம் விரிவாக விசாரித்தறிந்தார்.

இந்தக் கட்டத்தில் விசுவாமித்திர மாமுனிவரைப் பற்றிய வரலாற்றினைக் கூறுவது பொருத்தமாகும். இராமாயணக் கதையுடன் தொடர்புடைய பல உபகதைகளும் கிளைக் கதைகளும் இடைக்கிடையே இடம்பெறும். மூலக்கதையுடன் இவை தொடர்புடையன என்பதனால் வாசகர்களுக்கு அவற்றைக் கூடுமானவரை சுருக்கமாகத் தருகிறோம்.

## யார் இந்த விசுவாமித்திரர்?

வசிட்ட மாமுனிவர் நீண்ட நெடுங்காலம் கடும் தவம் மேற்கொண்டு தெய்வீக வரங்களைப் பெற்றவர். அவர் கானகத்தில் ஆசிரமம் அமைத்து தொடர்ந்து தவ வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த காலத்தில் ஒரு நாள் கௌசிக மன்னர் தன்னுடைய பெரிய சேனையுடன் அங்கு வந்து சேர்ந்தார். வசிட்ட மா முனிவரை வணங்கியபின் சிறிது நேரம் உரையாடிக்கொண்டிருந்தார், மதிய உணவுக்குரிய வேளையானதும் கௌசிக மன்னர் தனது விடுதிக்குப் புறப்பட ஆயத்தமானார். அப்போது வசிட்ட மா முனிவர், மன்னரை உணவருந்திப் போகுமாறு கேட்டுக் கொண்டார்.

வெறும் உபசார வார்த்தை தானே என்று கருதிய மன்னர், தன்னுடன் அமைச்சர்களும் பிரதானிகளும் படைவீரர்களும் வந்து முகாமிட்டுள்ளனர் என்றும் அவர்களுடன் தான் உணவருந்துவதே முறையாகும் என்றும் மன்னர் கூறினார்; முனிவரோ எத்தனை பேர் வந்தாலும் அவரவர் விருப்புக்கேற்ப அறுசுவை உணவு படைக்கச் சித்தமாயிருப்பதாகத் தெரிவித்தார். இதனை அரசனால் நம்ப முடியாதிருந்தது. மிகக் குறுகிய காலத்துள்-வனத்தில் தனித்திருக்கும் ஒரு துறவியால்- நூற்றுக் கணக்கான பேருக்கு உடனடியாக உணவு தயாரித்துப் பரிமாற முடியுமா? கௌசிகராலோ அவருடன் வந்திருந்தோராலோ இக்கூற்றை நம்ப முடியவில்லை. முனிவர் மீண்டும் மீண்டும் வற்புறுத்தவே, அரசர், தன்னுடன் வந்திருந்த காவலன் ஒருவனை விடுதிக்கு அனுப்பி, அனைவரையும் ஆசிரமத்துக்கு அழைத்து வருமாறு ஆணையிட்டார். அரசரும் அருகேயிருந்த பொய்கைக்குச் சென்று திரும்பினார்.

கௌசிக மன்னர் ஆசிரமத்துக்குத் திரும்பும் போதே அவர் கண்முன் கண்ட காட்சி அவரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. ஆசிரமத்தின் முன் மிகப்பெரிய அளவிலான தற்காலிக மண்டபம் ஒன்று அமைக்கப் பட்டிருந்தது. அதற்கேற்ப அலங்காரங் களும் செய்யப்பட்டிருந்தன. நூற்றுக் கணக்கானோர் அமர்ந்து உணவருந்து வதற்கேற்றவாறு, தரையில் வெள்ளை விரித்து காணப்பட்டது. தலை வாழை இலைகள் ஒருபுறமும் பல்சுவை உணவுப் பதார்த்தங்கள் மற்றோர் புறமும் மலை போல் குவிக்கப்பட்டிருந்தன.

இக்காட்சி அரசரை மட்டுமல்ல, அவருடன்-முனிவரின் அழைப்பை ஏற்று-ஆகாரம் உட்கொள்ள வந்த அனைவரையுமே ஆச்சரியக்கடலில் ஆழ்த்தியது. உணவினைப் பரிமாறுவதற்கு காவியுடை தரித்த இளந்துறவிகளும் தயாராக நின்றிருந்தனர்.

அரசரையும் பரிவாரங்களையும் அழைத்துக்கொண்டு அம்மண்டபத்தில்- அவரவருக்குரிய இடங்களில் அமரச்செய்தார் வசிட்டமாமுனிவர். உணவு பரிமாறப்பட்டது.

தங்கள் வாழ்நாளில் எப்பொழுதுமே அருந்தியிராத அத்தனை சவையுள்ள உணவை ஆறுதலாக உண்டு எழுந்தனர். உணவு உட்கொண்டதும் அரசர் தாம்பூலம் தரித்துக் கொண்டார். வசிட்ட மாமுனிவரை அணுகினார். சில நொடிகளிலேயே இத்தகைய சுவை நிரம்பிய உணவினை தனக்கும் தன்னுடன் வந்தோருக்கும் அளித்தமைக்கு தனது நன்றியினை மன்னர் தெரிவித்துக்கொண்டார். அத்துடன் இத்தகைய மாயாஜால வித்தையை எவ்வாறு முனிவர் சாதித்தார் என்றும் வினாக்களை மன்னர் தொடுக்கலானார். முனிவரால் மறுக்க முடியவில்லை; உண்மையைக் கூறினார்.

## மன்னனுக்கு ஏற்பட்ட விபரீத ஆசை

"நந்தினி! இங்கே வாம்மா" என்று வசிட்ட மாமுனிவர் குரல் கொடுக்க அழகொழுகும் இளம் பெண்ணின் முகத்தோடு ஒரு பசுக்கன்று துள்ளி ஓடி வந்து துறவியின் அருகில் நின்றது.

"கௌசிக மன்னா! தேவருலகில் காமதேனு என்றொரு பசுவும் கற்பகதரு என்றொரு மரமும் இருக்கின்றன. அப்பசுவும் மரமும் தேவர்கள் வேண்டிய சகலவற்றையும் அளிக்கவல்லன. காமதேனுவின் கன்றாகிய நந்தினி என்னும் சபலையே இங்கு நிற்கிறாள். தேவர்களால் இவள் எனக்களிக்கப்பட்ட வரப்பிரசாதம். என் தங்கையைப் போன்ற இவள்தான் உங்களனைவருக்கும் இன்று அறுசுவை உண்டியை அளித்தவள்."

இவ்வாறு பொறுமையோடு முனிவர்கூறி முடித்ததும் கௌசிக மன்னன் களிப்படைந்தான். "மாமுனிவரே! தாங்கள் இத்த போவனத்தில் தனித்திருந்து தவமியற்றுபவர். காய்ந்த தழை குழைகளையே புசிப்பவர். தங்களிடம் இத்தகைய சக்தி வாய்ந்த ஒரு கன்று இருப்பதால் என்ன பலன்? ஓர் அரசனிடம் இக்கன்று இருக்குமானால் அம்மன்னன் ஆட்சிபுரியும் நாட்டு மக்கள் அனைவரும் நன்மை அடைவர். வறுமை அடைய இடம் இருக்காது. நாட்டில் என்றும் சுபீட்சம் நிலவும். ஆகவே என்னிடம் இக்கன்றினை ஒப்படையுங்கள். இதனால் என் நாட்டு மக்கள் மட்டுமல்லாமல் பல தேசத்தவர்களும் பெருநன்மை அடைவர். ஆகவே மறுப்பேதுமின்றி சபலை என்ற நந்தினியை என்னிடம் தாருங்கள். இதற்காக எத்தகைய கைமாறையும் தங்களுக்குச் செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்று கௌசிகர் கூறினார்.

தேவர்கள் தன்னிடம் நந்தினியை ஒப்படைக்கும்போது, அதனை என்றும் விட்டுப்பிரியலாகாது என்று கண்டிப்புடன் கூறியதாக மன்னரிடம் சொன்ன வசிட்டர் கன்றைத் தர மறுத்துவிட்டார். ஆனால் கௌசிகர் தொடர்ந்து வற்புறத்தினார். முனிவர் மறுத்ததனால் வெகுண்டெழுந்த மன்னவன் தன் படையினர் சிலரை ஏவி சபலையைப் பிடித்துக்கொண்டு நாட்டுக்கு ஏகுமாறு கட்டளை பிறப்பித்தான்.

சபலை அழுதது. முனிவரின் அருகோடிச்சென்று நின்றது. அரசன் கொதிப்படைந்து. எப்படியாவது அக்கன்றைக் கட்டி இழுத்தேகுமாறு ஆணையிட்டான். "விருந்தளித்து மதிப்புக் கொடுத்த ஒருவருக்குச் செய்யும் கைமாறு இதுதானா?" என்று கேட்டதுடன் பல அறிவுரைகளையும் மன்னனுக்கு மாமுனிவர் எடுத்துரைத்தார். தனது தவ வலிமையால் அரசனைத் தண்டிக்க ஏனோ மனம் ஒப்பவில்லை. நந்தினியைப் பிரியவும் மனமில்லாது செயலிழந்து நின்ற முனிவரைப் பார்த்து கண்ணீர் சிந்தி அழுது கொண்டு நின்ற கன்றை மன்னவனே எட்டிப்பிடித்து காவலர்களிடம் கொடுத்தான். சபலை கதறினாள். "தங்களிடம் தஞ்சமடைந்த என்னை இவ்வாறு கைவிடலாமா?" என்று கேட்டுப்புலம்பியது.

"நந்தினி! நான் ஏதாவது செய்தால் அது விபரீதமாகிவிடும். எனது தவ வலிமையும் அழிந்து போய்விடும். உன்னிடமுள்ள சக்தியைக் கொண்டு நீயாகவே தப்பித்துக்கொள்" என்று கூறினார். உடனே நந்தினியின் வாயிலிருந்து ஒரு பேரோசை எழுந்தது. மறுகணம் அக்கன்று விண்ணில் நின்று வீரர்களைப் பார்த்துச் சிரித்தது. அச் சிரிப்பொலியினூடே பல திக்குகளிலிருந்தும் பெரும் படை வீரர்கள் அணிவகுத்து வந்தனர். அரசரின் படையினருடன் போரிட்டு அனைவரையும் கொன்றனர். கௌசிக மன்னன் திகைத்துத் தனித்து நின்றான். தவ வலிமையை மிஞ்சி எந்தப் படை பலமும் நீடித்திருக்க முடியாது. என்ற உண்மையை உணர்ந்தார். உடனடியாக தன் நாடு திரும்பி தனது மகனுக்கு மகுடம்சூட்டிவிட்டு காவி உடை தரித்து கமண்டலம் கையில் பிடித்து கடும் தவம் செய்யப்புறப்பட்டார்.

இமயமலைச் சாரலை அடைந்த கௌசிகன் பல்லாண்டுகள் கடும் தவமிருந்தார். அவருடைய தவ வலிமையை மெச்சிய சிவபிரான், கௌசிகன் முன் தோனறினார். தனக்குத் தனுர் வேதத்தை அருள வேண்டும் என்று சிவபெருமானிடம் கௌசிகன் வரம் கேட்டார். வேண்டுவோருக்கு வேண்டும் வரமருளும் உமாபதி தேவர்கள், முனிவர்கள், இராக்கதர்கள், கந்தர்வர் எல்லோரிடமுமுள்ள அஸ்திரங்களைப் பிரயோகிக்கும் முறைகள் அடங்கிய மந்திரங்களை கௌசிகனுக்கு அருளினார்.

## பிரம்ம தண்டம்

வசிட்ட மாமுனிவரை தன் ஆயுத பலத்தால் அடக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் தான் உமாபதியை நோக்கித் தவமிருந்து வரத்தைப் பெற்றார் கௌசிகன். வரம் கிடைத்ததும் தாமதிக்காமல் வசிட்ட மாமுனிவரின் முன் வந்து நின்றார். ஆனால் வசிட்டரோ சாதாரணமாகவே காணப் பட்டார். வசிட்டரை அழித்துவிடப் போவதாகக் கர்வம்கொண்ட கௌசிகர் கர்ஜித்தார். அத்துடன் தனது வில்லில் நாணேற்றி ஒன்றன் பின் ஒன்றாகத் தெய்வீகக் கணைகளைத் தொடுத்தார். அந்தக் கணைகள் அத்தனையும் வசிட்டரின் காலடியில் போய்ச்சரணடைந்தன. வசிட்டர் தன்னைத் தானே காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு 'பிரம்ம தண்டம்' என்றொரு கவசதடியை தன் முன் நிறுத்தி வைத்தார். சோதிப்பிளம்பாக வசிட்ட மாமுனிவரின் முன்புறம் நின்ற பிரம்ம தண்டம், கௌசிகன் தொடர்ந்து வீசிய அத்தனை கணைகளையும் தன்னுள் வாங்கிப் பொசுக்கிவிட்டது.

## மன்னன் முனிவரானார்

வசிட்டரின் தவவலிமை தான் பெற்ற வரத்தைவிடப் பன்மடங்கு உயர்ந்தது என்பதை உணர்ந்த கௌசிகர் சரணாகதி அடைந்தார். வசிட்ட முனிவரே கௌசிகரை மன்னித்து, சுய நல நோக்கோடு தெய்வீக சக்திகளைப் பயன்படுத்தலாகாது என்று கூறி, மேலும் தவ வலிமை பெற வழிவகைகளையும் சொல்லி அனுப்பினார்.

கௌசிகன் என்ற பெயர் மறைந்து விசுவாமித்திர முனிவர் என்ற பெயரைப் பெற்றார். மென்மேலும் சக்திகளைப் பெற்று 'பிரம்மரிஷி' என்ற பட்டத்தைப் பெற வேண்டும் என்று விரும்பினார். மகாரிஷி, ராஜரிஷி என்றெல்லாம் தேவர்களால் பட்டங்களைப்பெற்றும், வசிட்டர் வாயால் 'பிரம்மரிஷி' எனறு அழைக்கப்பட வேண்டும் என்றும் ஆசைப்பட்டார். பல வருடங்கள் அன்ன ஆகாரமின்றி, மூச்சையும் அடக்கி அருந்தவமியற்றியபின் வசிட்டரே 'பிரம்மரிஷி' என்று தன் வாயாலேயே விசுவாமித்திரரை அழைத்தார். இவ்வாறு தவசிரெட்டரான விசிவாமித்திரருக்கு பல சோதனைகள் அடிக்கடி ஏற்படலாயின. இயல்பாகவே கடும் கோபக்காரரான விசுவாமித்திரார் தனக்கே ராஜரிஷிப்பட்டத்தை வழங்கி வாழ்த்திய பரம்பொருளையே சவால்விடும் அளவு அகந்தை கொண்டார்.


### திரிசங்கு சொர்க்கம்

சூரிய வம்சத்தைச் சேர்ந்தவரும் தசரத சக்கரவர்த்தியின் முன்னோர்களில் ஒருவருமான திரிசங்கு அயோத்தியை ஆண்டு வந்தார். தன்னுடைய மானிட உருவம் அழியாமல் சொர்க்கம் செல்ல வேண்டும் என்ற பேராசை அவருக்கு. தன்னுடைய குலகுருவான வசிட்ட மாமுனிவரிடம் தன் கோரிக்கையை நிறைவேற்றித் தரவல்ல வேள்வியை நடத்தித் தரும்படி வேண்டினார். ஆனால் முனிவர் சம்மதிக்கவில்லை. வசிட்ட முனிவரின் குமாரர்களை அணுகி தனது வேண்டுகோளை விடுத்தார். அவர்களிடம் கோரிக்கை விடும்போது தனது குருவாகிய வசிட்ட மாமுனிவர் தனது வேண்டுகோளை ஏற்காமல் விட்டமைக்காக குருவைத் தூஷிக்கவும் தொடங்கினார். இதனால் கோபமடைந்த ரிஷி குமாரர்கள், திரிசங்குவை அவலட்சணமான- குரூபியாகக் கடவது என்று சாபமிட்டனர். அவ்வாறே திரிசங்கு மன்னன், பார்ப்பவர் வெறுத்தொதுக்கும் படியான சண்டாள உருவம் கொண்டான்.

தனது குடிமக்களே வெறுத்து ஒதுக்கிவிட்ட நிலையில் கானகத்தில் அலைந்து திரிந்த திரிசங்கு எப்படியோ விசுவாமித்திரர் தவம் செய்யும் இடத்தைப் போய் அடைந்தார். முனிவரும் அடையாளம் கண்டு கொண்டார். இத்தகைய உருவத்தைப் பெறக்காரணத்தையும் கேட்டு அறிந்து கொண்டார். வசிட்டர் திரிசங்குவின் கோரிக்கையை மறுத்துவிட்ட ஒரே காரணத்துக்காக தானே அவரை சொர்க்கபுரிக்கு அனுப்புவதற்கு முடிவெடுத்து வேள்வியைத் தொடங்கினார்.

இறுதியில் சண்டாள உருவிலேயே திரிசங்கு சொர்க்கலோகம் செல்லும் வழியில் தேவேந்திரன் தோன்றி, மாநிடன் ஒருவன் அதே உடம்புடன் சொர்க்கத்தில் பிரவேசிக்க முடியாது என்று திரிசங்குவைக் கீழே தள்ளிவிட்டான். இதனால் திரிசங்கு அந்தரத்தில் கன வேகமாக பூமியை நோக்கி வந்து கொண்டிருந்தார். இதனை அறிந்த விசுவாமித்திரர் திரிசங்குவைத் தனது சக்தியினால் அந்தரத்திலேயே நிறுத்தி, அம்மன்னனுக்காகவே தனியான ஒரு சொர்க்கலோகத்தை அமைத்துக் கொடுத்தார்.

இவ்வாறு தான் தவமிருந்து பெற்ற சக்திகளை துர்ப்பிரயோகம் செய்து விசுவாமித்திரர் தவிக்கலானார். இருப்பினும் மனதைத் திடப்படுத்திக் கொண்டு மேலும் பல்லாண்டுகள் கடும்தவமியற்றிய பின்னரே வசிட்டருடைய வாயால் பிரம்மரிஷி என்று அழைக்கப்பட்டு-வசிட்டர் பெற்ற அதே அளவு சக்திகளையும் பெற்றுக் கொண்டார்.



▫▫▫

விசுவாமித்திர மகாரிஷியின் குணத்தை நன்குணர்ந்த தசரத மாமன்னர்-எங்கே மாமுனிவரின் கோபத்துக்காளாகிவிட நேரிடுமோ என்று பயந்தவராக-எத்தகைய குறையுமின்றி உபசரணைகளைச் செய்யலானார். முனிவர் மனமகிழ்ச்சியுடன் காணப்படுவதை உணர்ந்த மன்னவர், "மகாபிரபோ! தாங்கள் இங்கு எழுந்தருளியதால் எம் நாடும், மக்களும் நானும் பெறற்கரிய பேறு பெற்றோம். தாங்கள் இங்கு வந்தமைக்கான காரணத்தைக் கூறினீர்களானால், எத்தகைய தேவையோ அத்தனையையும் திரிகரண சுத்தியுடன் செய்யக் காத்துக் கிடக்கிறேன்" என்றார்.

முனிவரும் தருணம் பார்த்து, தான் எதற்காக அங்கு வந்திருக்கிறார் என்ற காரணத்தைக் கூறினார். இதனைக் கேட்ட தசரத மாமன்னர் நிலைதடுமாறினார். மூர்ச்சித்து விழுந்து விடுவாரோ என்று கருதும் நேரம் உபேந்திரன் ஓடோடி வந்து மன்னவன் அருகில் நின்று கொண்டான்.

(தொடர்ந்து வரும்)

## இராமாயணப் போட்டி இல—3
## பரிசுக்குரிய அதிஷ்டசாலிகள்

1. சர்மிளா சுல்தான்
   நெய்தல் நகர்- மூதூர் -01.
2. ரிஸ்வானா இஸ்மாயில்
   உடத்தலவின்ன மடிகே- கடுகஸ்தொட்ட.
3. எல்.தர்மரத்னம்
   மன்னிங் பிளேஸ் கொழும்பு 06
4. டி. சசிதரன்
   மலபார் வீதி , கம்பளை.
5. எஸ். கதிர்காமச்செல்வி. செனன் தோட்டம், ஹட்டன்

## இராமாயணப் போட்டி 05

ஒரே ஒரு கேள்வி மட்டும். பதிலை அழகாக தபாலட்டையில் எழுதி அனுப்பினால் போதும். அதிஷ்டசாலிகளான ஐந்து பேருக்கு இலக்கிய நூல்கள்.

**கேள்வி:- விசுவாமித்திரர் பெற விரும்பிய பட்டம் என்ன?**

நவம்பர் 11ம் திகதிக்கு முன்பாக பதில் அனுப்ப வேண்டிய முகவரி:

இராமாயணப் போட்டி இல:05.
தினமுரசு வாரமலர்
த.பெ. இல- 1772
கொழும்பு.



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(PRQ/7/95)

www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்
ARUL JUWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436331
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11


## எதுவாயிருந்தால் எனக்கென்ன?




அம்மன் ஜுவல்
AMMAN JUWEL



புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
332033
29 SEA STREET, COLOMBO 11
29 செட்டியார் தெரு, கொழும்பு 11


யுத்தக் களத்தில் எதிர்ப்பட்டதையெல்லாம் ஏறி மிதிக்கும் டாங்கி, கார் ஒன்றையும் சங்காரம் செய்துகொண்டு செல்கிறது. தப்பு! வெளிநாடுகளில் கார்கள் பழுதாகிவிட்டால், சவிங்கத்தை சப்பிவிட்டுத் துப்புவது போல வீசிவிடுவார்கள். அப்படி வீசப்பட்ட கார்களை குவியவிடாமல் டாங்கிகளை வைத்து அப்பளமாய் நொறுக்கிவிடுகிறார்கள். நம் நாட்டைப்போல லொக்கடாவானாலும் திருத்திப்பாவிக்கும் வாடிக்கையெல்லாம் கிடையாது. அங்கே திருத்தும் செலவுக்கு ஒரு புதுக்கார் வாங்கிவிடலாம்.

## முதல்தர வேகம்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் அதிவேக பந்துவீச்சாளர் வாக்கார்யூனூஸ். சமீபத்திய சார்ஜா போட்டியில் முழுத் திறமையையும் உபயோகப்படுத்தத் தவறிவிட்டார் என்ற குற்றச்சாட்டு பாய்ந்திருக்கிறது. உலகக் கிண்ணத்தை தட்டிக் கொண்ட அணிக்கு சமீபகாலத்தில் அடி மேல் அடி. விளையாட்டில் வெற்றி தோல்வி சகஜம். ஆனால், தனது முன்னைய வலிமையை மீண்டும் பெற வேண்டுமானால் கிரிக்கெட்டுக்குள் மூக்கை நுழைக்கும் அரசியலுக்கு முடிவுகட்ட வேண்டும் என்பது பாகிஸ்தான் கிரிக்கெட் அபிமானிகளது கருத்து. தற்போது உலகின் முதல்தர வேகப் பந்து வீச்சாளர்களில் வாக்கார் யூனூஸ்தான் முதலிடத்தில் இருக்கிறார். வாசிம் அக்ரமும், வாக்கார் யூனூஸும்தான் பாகிஸ்தான் அணியில் இன்றுள்ள நட்சத்திர மதிப்புள்ள ஆட்டக்காரர்கள். இருவரையும் பயன்படுத்தி, அணி சீரமைக்கப்பட்டால் மீண்டும் வெற்றிகள் வசப்படும்.

## நன்றி மீண்டும் தருக!



டென்னிஸ் வீராங்கனை மேரிபியர்ஸின் கூந்தல் அலங்காரம் வெகு பிரசித்தமானது. அவரது வசீகரமும் அவ்வாறுதான்! படத்தில் மேரிபியர்சுக்கு அன்பு முத்திரை பதிப்பவர் டென்னிஸ் வீரர் மேர்பி ஜென்சன். பாரிசில் நடைபெற்ற மாற்று இரட்டையர் போட்டியில் மேரிபியர்ஸோடு இணைந்து ஆடத் தொடங்குமுன் இது அறிமுக முத்தம். வெற்றி பெற்றபின் மீண்டும் தருக என்று சொல்லியிருப்பாரோ மேரிபியர்ஸ்.

## கைகொடுக்கும் காதல்



டென்னிஸ் வீரர் அகாசியும், அவரது காதலியான நடிகை புருக் ஷீல்ட்டும் இணைபிரியாத காதலர்கள். இருவருக்கும் இடையே இழுபறி என்று அமெரிக்க பத்திரிகை ஒன்று கிசுகிசுத்து விட்டது. உடனே அந்தப் பத்திரிகைக்கு இந்தப் படத்தை அனுப்பிவைத்து, ஒரு குறிப்பையும் அனுப்பினாராம் அகாசி. "நமக்குள் பிரிவு வருமா, படத்தைப் பார்த்துச் சொல்லுங்கள் பார்க்கலாம்". படம் பிரசுரமானது வாசகர்கள் புலர் போட்ட பதில், "இல்லை, காதல் கைகொடுக்கும் காலும் கொடுக்கும், நீண்ட ஆயுளும் இருக்கும் என்று நிரூபித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

## வாழ்க வளமுடன்



செல்வன் உமேஷ் ஜெயக்குமார்
UMESH JEYAKUMAR
பிறந்ததான் - நவம்பர் 9
முகவரி - ரொரன்டோ-கனடா

அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணாமார், அக்காமார், நண்பர்கள், உறவினர்கள், அனைவரும் உமேஷின் மூன்றாவது பிறந்தநாளுக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கிறார்கள். வாழ்க, வளமுடன்!

## ஸ்ரைலு ஸ்ரைலுதான்



மேலை நாடுகளில் நாய் வளர்ப்புப் பற்றிய நாயான.. மன்னிக்கவும் நயமான சங்கதிகள் பல முரசில் வந்துள்ளன.

இன்று மற்றொரு சங்கதி அப்படியே அருகிலுள்ள படத்தைப் பாருங்கள். சலூனில் முடிவெட்டி அழகுபடுத்தல் நடக்கிறது. யாருக்கு? நாய்களுக்குத்தான்! வேடிக்கைப் படமல்ல, மொஸ்கோவில் உள்ள லொபாசெங்கோகோ தெருவில் தான் இந்த சலூன் இருக்கிறது. பெண்கள்தான் முடிவெட்டி விடுவார்கள். நாயார்கள் கண்ணாடி பார்த்துக் கொண்டே இருப்பார்கள். வெட்டும் ஸ்ரைல் பிடிக்காமல் போனால் எப்படி எதிர்ப்புத் தெரிவிப்பார்கள் என்றுதான் தெரியவில்லை.

ஒரு முறை முடிதிருத்துவதற்கு 5 ஆயிரம் ரூபிள்கள் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. நம் நாட்டு மதிப்பில் கிட்டத்தட்ட 1500 ரூபாய்கள்.

மொஸ்கோவில் இதுமட்டுமே நாய்களுக்காக இருக்கும் ஒரே ஒரு சலூன் என்பதால், முன்கூட்டியே பதிவு செய்து கொள்ள வேண்டும்.



[illegible]

படிப்பகம்